கல்கி

KALKI 14.4.91 ரூ. 2.50



சிரிப்புச் சிறப்பிதழ்

இந்திய அஞ்சல்துறை

EMS SPEEDPOST

துரித அஞ்சல் (SPEEDPOST)

துரித அஞ்சலை உபயோகிப்பீர்!
மகத்தான பயன்களை பெறுவீர்!!

இந்தியாவின் 63 முக்கிய நகரங்களுக்கும் 42 அயல் நாடுகளுக்கும் உங்கள் கடிதங்கள், பத்திரங்கள் (காசோலை உட்பட) பார்சல்களை குறித்த நேரத்தில் அனுப்புவதற்கு ''துரித அஞ்சல்'' சேவை துணை புரிகிறது. மணியார்டர் வசதியும் உண்டு.

சிறப்பு சலுகைகள் :

* ★ வாடிக்கையாளரின் இருப்பிடத்திலேயே வந்து பெற்றுக் கொள்ளும் வசதி.
* ★ டெபாஸிட் அக்கௌண்ட் வசதி.
* ★ முன் பணம் செலுத்தாமல் அனுப்பும் வசதி.

சென்னை நகரில் 31 முக்கிய தபால்
நிலையங்களில் துரித அஞ்சல் சேவை செயல்படுகிறது.

கீழ்க்கண்ட தபால் நிலையங்களில் இரவு 8 மணி வரை துரித அஞ்சல் பெற்றுக் கொள்ளப்படும்.

MADRAS GPO
ANNA ROAD HPO
T. NAGAR HPO

துரித அஞ்சல் (SPEEDPOST)
வேகமானது! நம்பகமானது!!

சிக்கனமான செலவில் பத்திரமான பட்டுவாடா
உத்திரவாதமளிப்பது துரித அஞ்சலே

மேலும் விபரங்கட்கு (தொலைபேசி) : 845051

தலைமை அஞ்சல் துறைத் தலைவர்
தமிழ்நாடு வட்டம், சென்னை - 600 002.

ஜனகராஜைச் சிரிக்கவைத்த ஹேப்பிமேன்!



நடிகர் ஜனகராஜ், பல்வேறு கைவினைப் பொருள்களையும் விற்பனை செய்யும் நிறுவனமான வி.டி.ஐ. (விக்டோரியா டெக்னிகல் இன்ஸ்டிடியூட்)க்குள் நுழைந்தவுடன், அவரை முதலில் கவர்ந்த விஷயம் 'ஹேப்பிமேன்' என்று அழைக்கப்படுகிற பொம்மைதான். அந்தப் பொம்மையைப் பார்த்தவுடனேயே ஜனகராஜுக்குக் குஷி வந்து விட்டது. பருத்த அதன் தொந்தியைத் தடவியும் கிள்ளியும் கொஞ்ச ஆரம்பித்து விட்டார்.

ஆஹா... தொந்தியும் தொப்பையுமாக இருக்கும் இந்தப் பொம்மையின் சிரிப்பில்தான் எத்தனை சந்தோஷம்! சினிமாவில் ரசிகர்களைச் சிரிக்க வைக்கும் என்னை, இந்தப் பொம்மைதான் பார்த்தவுடன் வாய் விட்டுச் சிரிக்க வைத்து விட்டது!'' என்றார்.

''நம் வீடுகளில் வைக்கப்படுகிற கொலுவில் அனைவரும் ஆர்வத்தோடு ரசிக்கும் செட்டியார் பொம்மையின் சாயலைப் பெற்றிருக்கும் இந்தப் பொம்மைக்கு 'லாஃபிங் புத்தா' என்று இன்னொரு பெயரும் உண்டு...'' என்று அந்த நிறுவனத்தின் கண்காணிப்பாளர் சத்ருக்னன் கூறியதோடு அந்தப் பொம்மையின் வரலாற்றை விளக்கவும் ஆரம்பித்தார்:

''தென் கிழக்கு ஆசிய நாடுகளான சிங்கப்பூர், மலேஷியா, தாய்லாந்து, ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் இந்த ஹேப்பிமேன் பொம்மைகள் பெரிய பெரிய சைஸ்களில் வைத்திருப்பார்கள். பூங்காக்களில் கூட இதைப் பெரிய அளவில் வைத்திருப்பார்கள். குழந்தைகள் இந்தப் பொம்மையின் பருத்த தொந்தியில் ஏறி விளையாடி மகிழ்வார்கள்.

''ஜப்பானியர்களும் சீனர்களும் இந்தப் பொம்மையை நீண்ட நேரம் ரசித்துப் பார்த்துக் கொண்டேயிருப்பார்கள். அப்போது அவர்கள் முகத்தில் சந்தோஷம் பொங்கும்! இந்தப் பொம்மைகளை வீட்டு வரவேற்பறைகளில் வைத்தால் மகிழ்ச்சியும் செல்வமும் வற்றாது என்பது அவர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கை அந்த நாடுகளுக்குச் சென்ற நம்மவர்களுக்கும் ஏற்பட்டதால் இங்கேயும் அவற்றை வாங்கி வந்து விட்டார்கள். இப்படித்தான் நம் நாட்டில் இது அறிமுகமானது.

''இந்தச் சிலைகள் ரோஸ்வுட், சந்தன மரம் ஆகியவற்றில் செய்யப்படுகின்றன. கேரளாவிலும் கர்நாடகாவிலும் உள்ள கைவினைக் கலைஞர்கள் இதைச் செய்கிறார்கள். சுமார் ஐந்தடி வரை உயரமுள்ள சிலைகளும் உண்டு. சிலையின் உயரத்தையும் அளவையும் பொறுத்து அறுபது ரூபாய் முதல் நாற்பதாயிரம் ரூபாய் வரை இதன் விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதோடு இதிலொரு தொழில் நுட்பமும் உண்டு. கைகளைத் தலைக்கு மேல் தூக்கிக் கொண்டு சிரிக்கும் இந்தச் சிலையைத் தலைகீழாக நிறுத்தி வைத்தாலும் கவிழாமல் நிற்கும். அந்த அளவுக்கு நமது கைவினைஞர்கள் நுணுக்கமாகச் செய்கிறார்கள்.

''முன்பு இதன் பல் வரிசையைத் தந்தத்தால் செய்து கொண்டிருந்தார்கள். பின்னர் மான் கொம்பில் செய்தார்கள். இப்போது அவை கிடைப்பது அரிதாகி விட்டது என்பதுடன் விலையும் அதிகம். எனவே இன்று பிளாஸ்டிக்கில் செய்கிறார்கள். மலிவு விலையில் கிடைக்கும் லாஃபிங் புத்தாக்களைச் சாதாரண மக்களும் வாங்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தச் சிலை வைத்திருப்பவர்களை அதிர்ஷ்டம் தேடி வருமோ இல்லையோ, நிச்சயம் சந்தோஷம் தேடி வரும்! ஏனெனில் இதைப் பார்த்தாலே மனம் இலேசாகி ஒரு புன்னகையையாவது தோற்றுவித்து விடும் அல்லவா?''

தொகுப்பு: **ப்ரியன்**

அட்டை வண்ணப்படம்: **உத்ரா**

பாரதிராஜாவுக்குத் தெரியுமா இந்த மண்வாசனை?

பெட்ரோல் வாசனை, மது வாசனை, வியர்வை வாசனை, சாக்கடை வாசனை, பீச்சுக்குப் போனாலும் மீன் வாசனை, பலான வாசனை என்று சதா நேரமும் மூக்கைப் பொத்தி சுவாசத் தடை போட்டுக் கொண்டிருந்ததில் வெறுத்துப் போய், பாரதிராஜாவைப் போல் சுத்தமான மண் வாசனையோடு கை குலுக்கி விட்டு வரலாமே என்று தோன்றியது. செங்கை — அண்ணா மாவட்டத்திலுள்ள, சென்னையிலிருந்து நாற்பியிருபது கி. மீ. தூரத்திலிருக்கிற எலப்பாக்கம் கிராமத்துக்குப் பஸ் ஏறினோம்.

கடலைப் பயிர் பசுமைக்கு இடையே ஓடிக் கொண்டிருந்த பஸ் சடாரென்று ஒரு முழுத் திருப்பம் திரும்பி, தூள் கிளப்பி நின்றது. எலப்பாக்கம் பஸ் ஸ்டாண்ட் இதுதான் என்று கண்டக்டர் உறுதி கூறிய பிறகு பஸ்ஸிலிருந்து இறங்கினோம். பஸ் டிரைவர் இத்தனை உக்கிரமாக எங்களுக்கு மண் வாசனையை உணர்த்தியிருக்கத் தேவையில்லை என்றே தோன்றியது.

ஹைஸ்கூல் எதிரே பிரம்மாண்ட மைதானம். முடிவில் ஒரு உபயோகப்படுத்த முடியாத கழிவறை. ஸ்கூல் வகுப்பறைகள் போதாமல் சொற்ப மர நிழலில் பல வகுப்புகள். அருகிலேயே பாளம் பாளமாக வெடிப்புகளோடு சிதைந்து போன ஒரு கட்டடம். ஆசிரியர் மேல் ஒரு கண்ணும், கட்டடம் எந்த நிமிடம் விழுமோ என்ற பயத்தில் கட்டடத்தின் மேல் ஒரு கண்ணுமாக மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். வரலாற்றுச் சின்னமாக்கும் எண்ணத்தில் அந்தக் கட்டடத்தை இடித்துத் தள்ளாமல் இருக்கிறார்கள் போலும்.



ஒரு மாணவனின் உள்ளங்கையில் கட்டுப் போடப்பட்டிருப்பதைப் பார்த்து, பழங் கட்டடத்தின் கல்தான் விழுந்ததோ என்று விசாரித்தோம்.

''அவன் ஹீரோ படம் கொட்டாய்லே போட்டிருக்காங்க. கையிலே கற்பூரத்தைக் கொளுத்தி ஹீரோவுக்குக் காட்டினான் பய!''

எலப்பாக்கம் என்று இந்த ஊருக்கு எப்படிப் பெயர் வந்தது என்று நாம் கேட்டதுதான் தாமதம், பலர் கதை சொல்ல முன்வந்தார்கள். சோழ மன்னனுக்கும் இளவலுக்கும் சாப்பாட்டுக்கு இரண்டு பாகமாக இலை கிழித்துப் போடப்பட்ட கதை; ஒரு முனிவருக்கும் கணவனுக்குமாக இலையை இரு பாகமாக்கி ஒரு பெண்மணி போட்ட கதை; இலையைச் சாப்பாட்டு இலையாகத் தைத்துப் பட்டணத்துக்கு அனுப்பிய கதை என்று பலவற்றைக் கேட்ட பிறகு, ''ஒரு காலத்துலே இங்கே இலந்தம் பழமும் பாக்கும்...'' என்று ஒருவர் ஆரம்பித்த போது நமக்கு அழுகையே வந்து விட்டது. போதுமே, பிளீஸ் என்று கெஞ்சிக் கேட்டுக் கழன்று கொண்டோம்!

சதனபுரி எலப்பாக்கம் என்று கூட இந்த ஊரை அழைக்கிறார்கள். சதனபுரி வட சொல். சதனம் என்பது இலையையும், புரி என்பது பாக்கத்தையும் குறிப்பன. சதனபுரி என்ற சொல்லைத் தந்தவர் ஸ்ரீராமச்சந்திர குருஸ்வாமிகள். ராமர், சிவன் கோயில்களை நிறுவி, பல அருமையான தமிழ்ப் பாடல்களையும், நூல்களையும் இயற்றியுள்ளார் இந்தத் தெலுங்கர். சூதாடுவோரியல்பு பற்றி அவர் நகைச் சுவை ததும்ப எழுதியுள்ள ஒரு பாடல்...

பன்னிரண் டாறே ழெட்டு பலேக்ளவர்
பார்த்து வெட்டு
பன்னிரண் டிஸ்பேட் ஜாக்கி பேஷ்வெரி
வெல்டை மண்ட் கை
மூன்னிறங் கெனவீண் கால மூடரா
யொழியப்பா குன்றன்
சந்திதி யுலுஞ்சேர் வார்காண் சதனடி
ரீச னாறே

இவர் 1922ம் ஆண்டு சமாதி அடைந்துள்ளார். அவரின் சிஷ்யர்கள் வருடம் தோறும் இங்கு வந்து அவர் பாடல்களைப் பாடிச் செல்கின்றனர்.

இத்தனை சிறப்பு வாய்ந்த கோயில்களும், பாடல்களும் பராமரிப்பில்லாமல் சிதைந்து போயிருக்க, பிழைக்கத் தெரி

யாமல் இருக்கீங்களே என்று நாம் ஸ்வாமிகளின் பேரனைக் கேட்ட போது, "கோயில்களை வைச்சிக்கிட்டு பிழைப்பு நடத்தறதா?" என்று புருவம் உயர்த்தி வாய் பிளந்தார் அவர். 'இது தேறாத கேஸ்' என்று உடனே நமக்குப் புரிந்து விட்டது.

எலப்பாக்கத்தில் அதிகமாக இருக்கும் இனம் பாம்பினமே. எலப்பாக்கத்திலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் இரண்டு நாளுக்கொருதரம் முறை வைத்துக் கொண்டு யாரையாவது ஏதாவது ஒரு பாம்பு கடிக்கிறது. பாம்புக் கடிக்கு மருந்து தரும் சித்த வைத்தியர் ஒருவர் இருக்கிறார். இந்த மருந்தைச் சாப்பிடுபவர் அன்றிரவு தூங்காமல் விழித்திருக்க வேண்டுமாம். இருபத்தி நாலு மணி நேரக் கணக்கு. அவரை விழித்திருக்க வைக்க இரவு முழுவதும் டெக்கில் இரண்டு மூன்று சினிமாப் படங்கள் போட்டுக் காட்டிக் கொண்டிருப்பார்களாம். டெக் சினிமாக்களை இதற்காக மட்டுமில்லாமல் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்துகிறார்கள். துக்க காரியமானாலும், சந்தோஷ சடங்கானாலும், கோவில் உற்சவமானாலும் இரவு முழுக்க டெக் சினிமாக்கள் உண்டு.

பாம்புகள் அதிகம் இருப்பதால், பாம்பு பிடிக்கும் இருளர்கள் இருக்கிறார்கள். இந்த இருளர் மக்களுக்கு வோட்டுரிமை கிடையாது. ரேஷன் கார்டு கிடையாது. வீடு கிடையாது. கொடுத்து வைத்தவர்கள்!

வோட்டுரிமை இருந்தும் வோட்டுப் போடாத ஒரு கோஷ்டி இந்தக் கிராமத்திலும் உள்ளது. தங்களுக்கு உதவிகள் ஏதும் செய்து தராத அரசாங்கத்தைக் கண்டித்து இங்குள்ள சலவைத் தொழிலாளர்கள் பல தேர்தல்களாக வோட்டுப் போடுவதேயில்லை.

'மாணவர் இளைஞர் புரட்சிப் பேரணி' என்ற அமைப்பு உள்ளது. பஞ்சாயத்து யூனியனைக் கண்டித்து, தொடக்கக் கூட்டுறவு வங்கியைக் கண்டித்து, தேசியமயமாக்கப்பட்ட வங்கியைக் கண்டித்து, இன்னும் சகலரையும் கண்டித்து பொது மக்கள் கவனத்திற்கு பிட் நோட்டீஸ் அச்சடித்து வழங்குவதை ஒரு சேவையாகச் செய்து வருகிறது.

சமூக-முன்னேற்ற மையம் என்ற அமைப்பின் செயலர் தங்கராசுவிடம், "உங்கள் போராட்டங்கள் வெற்றி கண்டுள்ளனவா?" என்று கேட்டோம்.

"தெரு விளக்குகள் இல்லாததால் பலர் பாம்புக் கடிக்கு ஆளாகிக் கொண்டிருந்தார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆபீசைச் சுற்றியிருந்த எழுபத்தைந்து மரங்களில் பந்தங்களைக் கட்டி எரிய விட்டோம். உடனே நூற்றியிருபது தெரு விளக்குகள் போடப்பட்டன. போர்வெல் பம்புகள் இல்லாமல் தூரம் சென்று தண்ணீர் கொண்டு வர அவதிப்பட்டுக் கொண்டிருந்தோம். ஐம்பது புதுப் பானைகளை



வாங்கிப் பெண்களிடம் கொடுத்து, யூனியன் முன்பு பானை உடைப்புப் போராட்டம் நடத்தினோம். உடனே இரண்டு போர்வெல் பம்புகள் போடப்பட்டன" என்றார் தங்கராசு பெருமிதத்தோடு.

"பாம்புகளை ஒழிக்கச் சொல்லி, ஒவ்வொரு யூனியன் ஆளுங்க வீட்டுலேயும் ஒரு பாம்பு விடற போராட்டம் நடத்தலாமே!" என்று நாம் ஆலோசனை வழங்கினோம்.

தங்கராசு யோசிக்க ஆரம்பிக்க, அவர் கையை ஓடி வந்து பிடித்துக் கொண்டார் எதிர்ப்பட்ட முதியவர் ஒருவர். "தம்பி நேத்து தண்ணி போட்டுட்டு வந்து எதையோ பேசிட்டேன். மன்னிச்சிடு தம்பி!" என்று கெஞ்சினார்.

"பரவாயில்லை தாத்தா. ராத்திரி ஸ்கூலுக்கு வந்துடுங்க," என்றார் தங்கராசு.

நாம் தங்கராசை ஏறிட, அவர், "முதியோர் கல்வி நடத்தறோம். நேத்து இந்தப் பெரிசு தண்ணி போட்டுட்டு வந்து 'நீயே படிச்சிட்டு வேலை கிடைக்காம இலவசமா எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக்கிட்டிருக்கே. நாங்க படிச்சி என்னத்தைக் கிழிக்கப் போறோம்?'னு கேட்டாரு!" என்று சிரித்தார்.

ஜெயச்சந்திரன் என்ற இளைஞரோடு பேசிக் கொண்டிருந்த போது, அவர் யாரையோ 'ஒன் நாட் செவன்' என்று அழைத்தார்.

"என்னங்க அது ஒன் நாட் செவன்?"—நாம்.

"போலீஸ் வேலைக்கு எல்லாத் தேர்வையும் முடிச்சிக்கிட்டே வந்தாரு இவரு. போஸ்டிங் போடற நேரத்துலே இங்கே ஒரு இனக்கலவரம் நடந்துச்சு. அதுலே இவர் ஈடுபட்டாருன்னு புகார் போய், கிடைக்க இருந்த வேலை போச்சு. இனக்கலவரத்துலே ஈடுபடறதுக்கான செக்ஷன்தான் 107. அதை வைச்சே இப்ப எல்லாரும் அவரைக் கூப்பிட ஆரம்பிச்சுட்டாங்க!"

ஜெயச்சந்திரன் மேலும் "இங்கே மாடு



சிரிப்பு

பூ விற்கும் சுசீலா கூறுகிறார்:

மூந்தி நான் வூடு வூடாப் போய்ப் பூ வித்துக்கிட்டிருந்தேனா? சுஜாதான்னு ஒரு கட்டிப் பொண்ணு. ''என்ன நீ கொண்டு வர்ற பூவுல மட்டும் இத்தனை வாசனை? செண்ட்டுப் போட்டுக் கொண்டாறியா?''ன்னு கேக்கும்.

ஒரு தபா அது என்கிட்டே, ''பலான நிகழ்ச்சிக்குப் போவணும்; சீக்கிரமாப் பூ கொண்டாந்துடு''ன்னு சொல்லிச்சு. ஆனா அம்மாஞ் சீக்கிரம் வாசனைப் பூ கிடைக்கலே. காக்கடாப் பூதான் கிடைச்சுது. அது பாக்கறதுக்கு மல்லிப்பூ மாதிரியே இருக்கும்.

சுஜாதாகிட்டே அதைக் குடுத்து, விஷயத்தைச் சொன்னேனா; அது உள்ளே ஓடிப் போய் செண்ட் ஸ்பிரே எடுத்தாந்துது. பூச் செண்டு மேலே 'புஸ், புஸ்'ன்னு அடிச்சுது. பாட்டிலை உள்ளே வைச்சுட்டுத் திரும்ப வாசலுக்கு வர்றப்ப அதுஞ் சிநேகிதிகள் தப தபன்னு நுழையுதுங்க. 'சுஜாதா! எப்படி உங்க வீட்டுப் பூக்காரிக்கு மட்டும் இம்மாம் வாசனையாப் பூ ஆப்புடுது''ன்னு கேக்குதுங்க. சுஜாதா சிரிக்குது; நான் சிரிப்பேனா? கமுக்கமா நழுவறேன்!

— கௌசல்யா

படம்: சுந்தர்

மேய்க்கறவனைக் கேட்டாக் கூட நான் எஸ்.எஸ்.எல்.சி. படிச்சிருக்கேன்பான்'' என்றார் பெருமையாக.

நாம் ஒரு மாடு மேய்ப்பவனைப் பிடித்துக் கேட்ட போது, ''எஸ். எஸ். எல். சி.ன்னா யாரு?'' என்று கேட்டான்!

இருப்பினும் எலப்பாக்கத்தில் அநேகர் படித்தவர்தாம். படித்து விட்டு எலப்பாக்கத்திலும் சுற்றியுள்ள கிராமங்களிலும் ஆசிரியப் பணிபுரிகிறார்கள். அலுவலகப் பணியை விட அவர்கள் இந்தப் பணியை விரும்புகிறார்கள். ஆசிரியப் பணி வருமானம், தறி அல்லது விவசாயப் பணி வருமானம், கறவை மாடுகள் வைத்துப் பால் சொசைட்டிக்குப் பால் விற்பதில் வருமானம் என்று மூன்று வருமானம் ஈட்டுகிறார்கள்.

படிப்பில் சிறப்புற விளங்கும் ஊருக்கு, ப்ளஸ் டூ வகுப்புகள் கிடைக்கும் விஷயத்தில், அரசாங்கம் தன் பங்குக்கு ஒரு ஜோக் அடித்திருக்கிறது. ஆசிரியர் — பெற்றோர் சங்கம் அரசாங்கத்தை அணுகி, ப்ளஸ் டூ வைத்துக் கொள்ள அனுமதி கோரியிருக்கிறது. அரசாங்கம், ரூபாய் இருபத்தைந்தாயிரம் டெபாசிட் பணத்தோடு வரச் சொல்லி அனுப்பியது. சங்கம் தண்டல் பண்ணி பணத்தை எடுத்துக் கொண்டு போன போது, ''இந்த வருடத்திலிருந்து டெபாசிட் தொகை ஒரு லட்சமாக உயர்த்தப்பட்டு விட்டது'' என்று சொல்லி அவர்கள் அந்தஸ்த்தை ஓஹோ என்று உயர்த்தி விட்டது அரசு! நெஞ்சு கொள்ளாத நன்றியோடு திரும்புவது தவிர வேறு வழி?

நமக்கு ஊரைச் சுற்றிக் காட்டிக் கொண்டிருந்த தங்கராசு, ஊரில் ஏழு தெருக்கள் உள்ளன என்றார். ஆனால் அவர் அழைத்துச் சென்ற குறுக்கு வழிகளே எழுபது தேறின. தெருக்களுக்கும் இந்தக் குறுக்கு வழிகளுக்கும் அதிக வித்தியாசமில்லை.

மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டு ஊர் காய்ந்து கிடந்தது. நிறைய முட்புதர்கள் இருந்தன.

''இந்த முள்ளுச் செடியையும் வெட்டிப் போட்டுட வேண்டியதுதானே. பாம்புத் தொல்லையாவது குறையுமில்லை?'' என்று கேட்டோம்.


''அப்புறம் நாங்க பாத்ரூம் எங்கே போறது!'' என்றார் தங்கராசு.

இங்குள்ள திரௌபதி அம்மன் கோவிலில், திருவிழா சமயத்தில் நிகழும் ஓர் அபூர்வ காரியம் தெய்வ காரியமாகச் சிலாகித்துப் பேசப்படுகிறது. ஒரு குடத்தில் தண்ணீர் வைக்கப்பட்டிருக்க, தண்ணீருக்கு மேல் அந்தரத்தில் ஒரு கத்தி நிறுத்தி வைக்கப்பட, அது அப்படியே விழாமல் அதிசயமாக நிற்கிறது. அம்மன் மும்முறை பிராகாரத்தை வலம் வரும் வரை!

இந்த ஆச்சரியத்தைக் குறித்துப் பால் சொசைட்டியின் தலைவர் ரத்தினவேலுவின் கருத்தைக் கேட்ட போது, அவர் ''மந்திரம் கால், மதி முக்கால். எது மந்திரம் எது மதின்னு ரொம்ப ஆராய்ச்சி பண்ணக் கூடாது. உலகத்துலே இருக்கிற கொஞ்ச நாள்லே உலகத்துக் காரியங்களோட சிரிச்சிக்கிட்டே வாழ்ந்துட்டுப் போக வேண்டியதுதான். வாழ்க்கையே ஒரு தமாஷ்தானே!'' என்று கூறிச் சிரித்தார்.

நாமும் அவரோடு சேர்ந்து தமாஷாகச் சிரித்து விட்டு, ஊர் திரும்பப் பஸ் ஏறினோம்.

— வின்சென்ட், ஜவஹர், செல்வக்குமார்.




நீங்கள்

தேர்தலில்

வெற்றி பெற இதைக் கூறுங்கள்

"நாட்டின் அஸ்திவாரம் போன்ற நல்லோர்களைக் காப்பாற்றுவோம்"



"நல்லோர்களை பாதிக்கும் சட்டங்களைத் திருத்துவோம்"

வெற்றி பெற்றால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோர்களுக்கு விநியோகம் செய்யுங்கள்

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது
மெயின் ரோடு,
காந்தி நகர், அடையார்,
சென்னை - 20.
☎ 412557

திருமண
வைபவங்களுக்கு :
சீர் முறுக்கு,
சீர் அதிரசம்,
திரட்டுப்பால், முள்ளு
தேன்குழல், பருப்புத்
தேங்காய் வகைகள்
செய்து தரப்படும்.

பட்டுப் புடவைக்கு பந்த்; லஞ்சத்துக்கு ரசீது!

> "நீங்கள் ஓர் அரசியல் கட்சியின் தலைவராக இருந்தால் வரப்போகிற தேர்தலில், மக்களிடம் என்ன சொல்லி வோட்டுக் கேட்பீர்கள்?" என்று இவர்களிடம் கேட்ட போது...

ஒய். ஜி. மகேந்திரன்: அரசியல்வாதிகள் மட்டும்தான் 'பந்த்' நடத்த வேண்டுமா? பொது மக்களும் நடத்தலாம் என்பேன்! காரணம் கண்டுபிடிப்பதா கஷ்டம்? எதிர் வீட்டு மாமி பச்சைக் கலரில் எப்படிப் பட்டுப் புடைவை கட்டலாம் என்று கூட





அதை எதிர்த்து அந்தத் தெருக்காரர்கள் 'பந்த்' நடத்தலாம். அந்த நாளை அரசு, சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாளாக அறிவித்து விடும். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள இளைஞர்களில் யாருக்கெல்லாம் இடது காதுக்குப் பின்புறம் மச்சம் இருக்கிறதோ அவர்களுக்கு போனஸாக பத்து மார்க். வாகன ஓட்டுனர்களில் யார் அதிக உயிர்களைப் பலிவாங்குகிறார்களோ, அவர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையின் மூலமாகச் சிறப்புப் பதக்கம் வழங்க ஏற்பாடு செய்வேன். இது போல் இன்னும் எத்தனையோ திட்டங்கள் என் கைவசம் உள்ளன.

அபஸ்வரம் ராம்ஜி: நான் ஆட்சிக்கு வந்தவுடனேயே லஞ்சத்தைச் சட்டபூர்வமாக்கி, இன்னின்ன வேலைக்கு இவ்வளவுதான் ரேட் என்று நிர்ணயித்து விடுவேன். அதற்கு ரசீதும் கொடுக்கப்படும் என்பதால் அரசாங்கத்தின் வருமானமும் அதிகரிக்கும். ஆக, லஞ்சத்தையும் ஒழித்து, அரசாங்க வருமானத்தையும் பெருக்கும் என்போன்ற நாணயஸ்தனை வேறு எங்கே பார்க்க முடியும்?

கிரேஸி மோகன்: மனைவிக்கே வாக்குறுதி கொடுக்காமல் டபாய்க்கும் நானா மக்களுக்கு வாக்குறுதி கொடுத்து ஏமாறுவேன்! இருப்பினும் வாக்குறுதி கொடுக்காமல் வோட்டுக் கேட்க முடியாதே! அதனால், அண்டப்புளுகு, ஆகாசப் புளுகு என்பார்களே... அதையெல்லாம் தூக்கிச் சாப்பிடும்படியான வாக்குறுதிகளை வாய் கூசாமல் வாரி வாரி வழங்குவேன். வெற்றி பெற்ற பிறகு, என் காதுகள் இரண்டும்



செவிடாகி விட்டதென்று புரளியைக் கிளப்பி விட்டு மக்களை நம்பச் செய்து விடுவேன். அப்புறமென்ன, 'பாவம்! காது செவிடானதால்தான் அவரால் நம் குறைகளைக் கேட்டு எதையும் செய்ய முடியவில்லை. இல்லையென்றால் பிரமாதப் படுத்தியிருப்பார்' என்று மக்கள் என் மேல் இரக்கப்பட்டுப் பேசாமல் இருந்து விடுவார்கள்!

மௌலி: இமர் பஸ்கள், இமர்க் குடி நீர்க் குழாய்கள், இமர்த் தார் ரோடுகள், புடைவை, அரிசி, குடங்கள்... என்று எல்லாமே தேர்தல் சமயத்தில்தான் மக்களுக்குச் சுலபமாகக் கிடைக்கின்றன. காசு கொடுத்து வாங்கும் அத்தியாவசியப்



பண்டங்களும் தட்டுப்பாடில்லாமல் கிடைப்பது தேர்தல் சமயத்தில்தான். எனவே, நான் ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது பொதுத் தேர்தல்கள் வருமாறு பார்த்துக் கொள்வேன். அப்புறம் என்ன, மக்களுக்கு எப்போதுமே வி.ஐ.பி. மரியாதைதான்!



எஸ். வி. சேகர்: நிஜமாகவே என்னால் நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளை மட்டும்தான் கொடுப்பேன். அதனால்தான் சென்ற தேர்தலில் தோற்றுப் போனேன்!

தொகுப்பு: **சலன்**


கட்சியில் டிக்கெட் கிடைப்பதில் சிக்கல்: 2 கட்டம் பின்னால் போ
டிக்கெட் கிடைத்து விட்டது: 3 கட்டம் முன்னால் போ
வேட்பாளர்: ஒரு ஆட்டம் சான்ஸ் போச்சு
தலைவர்களின் சூறாவளி சுற்றுப் பயணம் 60ம் கட்டத்துக்குப் போ
தேர்தல் வெற்றி கோட்டைக்குள் நுழையலாம்

விளையாடுங்கள்; தமாஷாய்த் தேர்தல் ஆட்டம்!

தேர்தல் என்னவோ மே மாதம்தான் என்றாலும், இப்போதே வாக்காளர்கள் மத்தியில் அடுத்த தமிழக முதல்வர் யார் என்று பரபரப்பாக விவாதிக்கப்படுகிறது. எனவே, நாமும் தமாஷுக்கு ஒரு தேர்தல் விளையாட்டு நடத்தினால் என்ன என்று தோன்றியது. பரமபதம் பாணியில் ஒரு விளையாட்டைத் தயாரித்தோம். அ. தி. மு. க. அணியின் சார்பாக முருகனும், தி.மு.க. சார்பில் வேணுகோபாலும் நாம் தயாரித்த தேர்தல் விளையாட்டை விளையாடினார்கள். ஆட்டம் ஆரம்பித்தது. நமது நிருபரின் நேர்முக வர்ணனை:

முதலில் ஆட்டத்தை யார் ஆரம்பிப்பது என முடிவு செய்ய ஒரு எட்டணா நாணயம் சுண்டப்பட்டது. விழுந்தது பூ. ஜெயித்தது அ. தி. மு. க. முருகன் காயை (டைஸ்) உருட்டினார். விழுந்தது நான்கு. அடுத்து வேணுகோபாலுக்கு விழுந்தது மூன்று. தொடர்ந்து நான்கைந்து வாய்ப்புகளில், பலன் பூஜ்ஜியம்தான்.

வேணுகோபால், 'ஒன்று' போட, ஆட்டம் சூடு பிடித்தது. "தேர்தலில் ஜெயிக்கப் போவது தி. மு. க. தான். அடுத்த முதல்வர் கலைஞர்தான். அதன் ஆரம்பம்தான் இது!" என்று முருகனின் வாயைக் கிளற, "பொறுமையாக இருங்கள்... இறுதி வெற்றி எனக்குத்தான்!" என்றார் முருகன் பதிலுக்கு.

"...ம், உங்களுக்கு இருக்கும் பொறுமை, உங்கள் தலைவிக்கு இல்லையே!" என்று மறுபடி வேணு கமெண்ட் அடிக்க, அதற்குள் முருகனுக்கும் 'ஒன்று' விழுந்து விட்டது.

தி. மு. க. அணி ஆட்டக்காரர் கிடுகிடு வென முன்னேறிப் பன்னிரண்டாம் கட்டத்துக்கு வர, மேலும் மூன்று கட்டம் தாண்டினார். ஆனால் அ. தி. மு. க. வேட்பாளருக்கோ, கட்சியில் டிக்கெட் கிடைப்பதிலேயே சிக்கல் (கட்டம் 7) ஏற்பட்டு விட்டது!

"நிஜத்தைப் பிரதிபலிக்கிறதே ஆட்டமும்! உங்கள் கட்சியில் என்னென்ன குளறுபடிகள், வேட்பாளர்கள் தேர்விலே! காங்கிரசுக்குச் சில தொகுதிகளை விட்டுக் கொடுத்தும்கூட, 234 தொகுதிகளுக்குமாய் வேட்பாளர் தேர்வு செய்யும் உங்கள் தலைவி நிஜமாகவே புரட்சித் தலைவிதான்!" என்றார் வேணுகோபால்.

பதினெட்டாம் கட்டத்துக்கு வேணுகோபால் வந்ததும், முருகனுக்குக் கிண்டலடிக்க வாய்ப்பு வந்தது: "ஆட்டத்தில்தான் உமக்குப் போட்டி வேட்பாளர்! மற்றபடி, உங்கள் கட்சிக்காரர்களுக்கு, இந்தத் தேர்தலில் சுரத்தில்லாமல் போய்விட்டது நிஜம்."

சொல்லி வைத்தாற் போல, இரண்டு பேருக்கும் சில தடவை ஒன்றாகவும் இரண்டாகவுமே விழுந்தன. 37 க்கு வந்தார் முருகன். "ஒன்னு விழப் போகுது! 34 க்குப் போகப் போறீங்க!" என்று வேணுகோபால் சொன்ன ஜோசியம், பொய்யாகி, இரண்டு விழுந்து 39 ஆம் கட்டத்தை அடைந்தார் முருகன்.

"45 ஆம் கட்டத்துக்குப் போங்க. பல தி. மு. க. வேட்பாளர்களுக்கு அது பொருந்தும்! நீங்களும் ஜாலியாய் ரிவர்ஸில் 42 க்குப் போய் ரெஸ்ட் எடுக்கலாம்," என்றார். ஆனால் வேணுகோபாலுக்கு ரெஸ்ட் பிராப்தி இல்லை.

"மூணு... மூணு... மூணு... நான் ஜம்பத்தி இரண்டுக்குப் போகணும். எங்க கலைஞர் சளைக்காமல் சூறாவளிப் பயணம் செய்து பிரசாரம் பண்ணுவாரு! இதோ நான் இப்போ அறுபதாம் கட்டத்துக்கு ஜம்ப் பண்ணப் போறேன்!" என்று வேணுகோபால் நம்பிக்கையோடு உருட்டினாலும் நம்பிக்கை பொய்த்துவிட்டது.

முருகனோ 58 லிருந்து மூன்று போட்டு 61 க்கு வந்து, 78 க்குக் குறுக்கு வழியில் தாவிவிட்டு, "உங்களுக்கு ராதிகா உட்பட ஏகப்பட்ட நட்சத்திரங்கள் பிரசாரம் செய்தாலும், அது ஜெயலலிதாவுக்கு ஈடாகாது. கூட்டம் உங்களுக்கானாலும் வோட்டு எங்களுக்குத்தான்!" என்றார் பெருமிதத்துடன்.

வெற்றி அ. தி. மு. க. வுக்குத்தான் என்று ஏறக்குறைய ஊர்ஜிதமாகிவிட்டது. தேவையானது இரண்டு! இரண்டு ஆட்டங்களில் இரண்டு விழாமல் ஏமாற்ற, அதற்குள் தி. மு. க. அணி ஐந்து, ஆறு என்று போட்டு, 75 க்கு வந்துவிட, வோட்டு எண்ணிக்கை நடக்குமிடத்துக்கு வெளியே கூடியிருப்போர் மனநிலையைப்போல எதிர்பார்ப்பு அதிகரித்தது.

ஐந்தா இரண்டா?

'ஐந்துதான்' என்று வேணுகோபால் உருட்ட விழுந்து இரண்டுதான்.

மீண்டும் முருகனுக்கு ஏமாற்றம்.

மறுபடி வேணுகோபால்! "கலைஞரே ஒரு மூணு கொடுங்க!" என்று கேட்க, கலைஞர், "உடன்பிறப்பே! இந்தா! எடுத்துக் கொள் ஆறாக!" என்று தாராளமாய்க் கொடுக்க, சஸ்பென்ஸ் தொடர்ந்தது.


மறுபடி முருகனுக்கு விழுந்தது நாலு. ஆனால் தேவையானதோ இரண்டு. வேணுகோபாலின் சான்ஸில் அவருக்குக் கிடைத்தது மூன்று!

"ஆ! வெற்றி உதய சூரியனுக்கே!" என்று உற்சாகக் குரல் கொடுத்தார் வேணுகோபால்.

"இந்த விளையாட்டுத் தேர்தலில் வெற்றி உங்களுக்கு! ஆனால் வரவிருக்கும் நிஜத் தேர்தலில் வெற்றி எங்களுக்கே!" என்று முழங்கினார் முருகன்.

ஏற்பாடு, தொகுப்பு: **மௌஷ்மி**

ஒற்றன் Vs ஒற்றன்



* MAD இதழிலிருந்து ஒரு வாய்மின் ஜோக்.

கரப்பான்பூச்சிகள் மேலும் கீழுமாக ஓடித் திரிந்த ஒரு வெகு சாதாரண அலுவலகக் கட்டத்தில்தான் வில்லியம் கெய்ன்ஸ் என்பவர் Mad பத்திரிகையை ஆரம்பித்தார். 1952 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பத்திரிகை அமெரிக்கர்களிடையே மிகப் பிரபலமாகி, உலகளாவிய புகழ் பெற்றுவிட்டது. இப்பத்திரிகையின் உரிமையாளர்களான வார்னர் கம்யூனிகேஷன்ஸ் நிறுவனத்தினர் Mad விற்பனை மூலம் பெறும் வருடாந்திர லாபம் நாலு மில்லியன் டாலர்கள்!

MAD தயாரிப்பு! MAD விற்பனை! MAD சிரிப்பு!

பத்திரிகைத் துறை நிபுணர்களெல்லாம் மூக்கின் மேல் விரல் வைக்கிறார்கள். மற்றொரு அமெரிக்கச் சிரிப்புப் பத்திரிகை, ஒன்பது லட்சம் பிரதிகள் பிரதிகள் விற்பனையிலிருந்து 2,50,000 பிரதிகளுக்குச் சரிந்துள்ள கால கட்டத்தில் Mad மட்டும் லாபகரமாக நடந்து கொண்டிருக்கிறது.

இத்தனைக்கும் இந்த இதழின் பதிப்பாளரான வில்லியம் கெய்ன்ஸ் இதில் விளம்பரங்களை வெளியிட அனுமதிப்பதில்லை; Mad இதழை விளம்பரப்படுத்தச் சல்லிக்காசு செலவழிப்பதில்லை; இவ்விதழை எத்தனைய வாசகர்கள் படிக்கிறார்கள்? ஏன் வாங்குகிறார்கள் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்வதுமில்லை...!

ஆண்டுதோறும் சுமார் 75 இதழ்களைப் புதிதாகத் தயாரிப்பதோடு பழைய Mad இதழ்களிலிருந்து சுவையான பகுதிகளை எடுத்துத் தொகுத்துப் 'புதிய' இதழ்களைத் தயாரிப்பதிலும் வல்லவர் கெய்ன்ஸ். இவ்வாறு தயாரிக்கப்படும் சிறப்பிதழ்கள் இரட்டிப்பு விலைக்கு விற்கப்படுகின்றன. இவற்றுக்குத் தயாரிப்புச் செலவோ மிகச் சொற்பம்தான்!

பதினொரு மொழிகளில் பதிப்பிக்கப்படும் Mad இதழ் பின்லாண்ட், பிரேசில், ஜெர்மனி போன்ற நாடுகளில் அந்தந்த மொழிகளில் விற்பனையாகிறது. 2,50,000 பிரதிகள் விற்கும் ஜெர்மன் பதிப்புதான் ஐரோப்பாவின் மிகப் பெரிய, பிரபலமான சிரிப்புப் பத்திரிகை.

வில்லியம் கெய்ன்ஸ் முதலில் மர்மக் கதைகள், விஞ்ஞானக் கதைகள் பக்கம் கவனம் செலுத்தி, பிறகு அவற்றைக் கைவிட்டு அங்கதச் சுவை ததும்பும் Mad இதழைத் தொடங்கினார். இவ்விதழ் இரண்டு கை மாறி 'வார்னர்' நிறுவனத்திடம் தற்போது உள்ளது எனினும் கெய்ன்ஸ் பதிப்பாளராகத் தொடர்ந்து முழுச் சுதந்திரத்துடன் பணியாற்றுகிறார்.

Mad இதழின் வெற்றிக்குக் கெய்ன்ஸ் மட்டுமே காரணம் என்று சொல்லிவிட முடியாது. தங்கள் குறைகளையுணர்ந்து, தங்களைத் தாங்களே பார்த்துச் சிரித்து மகிழும் ஆற்றல் படைத்த அமெரிக்கர்களின் அதிசய சுபாவமும் இதற்குக் காரணம்.



அமரர் கல்கி நினைவாக— பொன்விழா சிறுகதை; நாடகம்; கவிதைப் போட்டிகள்

சிறுகதைகள்:

முதல் பரிசு	ரூ. 2,000
இரண்டாம் பரிசு	ரூ. 1,000
மூன்றாம் பரிசு	ரூ. 500

நாடகங்கள்:

முதல் பரிசு	ரூ. 1,000
இரண்டாம் பரிசு	ரூ. 500

கவிதைகள்:

முதல் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 250
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 250
இரண்டாம் பரிசு	
(புதுக் கவிதைக்கு)	ரூ. 150
(மரபுக் கவிதைக்கு)	ரூ. 150

ஆக மொத்தம் ரூ. 5,800 பரிசுகளாக வழங்கப் பெறும்.

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு சிறுகதையும் ரூ. 150 சன்மானம் பெறும்; ஒவ்வொரு நாடகமும் ரூ. 125 ம் ஒவ்வொரு கவிதையும் ரூ. 75 ம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

- படைப்பு எதுவாயினும் அது உங்கள் சொந்தக் கற்பனை என்றும் இதற்கு முன் வேறெங்கும் பிரசுரமானதில்லை என்றும் உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் வேறெதிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப் படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தர வேண்டும்.
- கதைகள்; நாடகங்கள்; கவிதைகளைத் தனித்தனியே அவற்றுக்குரிய நடுவர் குழு பரிசீலித்துப் பரிசுக்குரியனவற்றைத் தேர்ந்தெடுக்கும்.

○ கதைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றை அனுப்பக் கடைசித் தேதி: ஜூன் 15.


- உறையின் மேல் பொன் விழா சிறுகதை/நாடகம்/கவிதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாதவற்றைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டப்பெற்ற சுயவிலாசமிட்ட உறையைக் கதை அல்லது நாடகம் அல்லது கவிதையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகளும் நாடகங்களும் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாமல் இருப்பது நலம்.- கவிதை ஒரு பக்கத்துக்குள் அடங்குவதாய் அமைதல் வேண்டும். ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளையோ, நாடகங்களையோ, கவிதைகளையோ அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் இடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

○ போட்டி முடிவும் முதல் பரிசுச் சிறுகதையும் கல்கி ஆகஸ்டு 4வ ஆண்டு மலரில் பிரசுரமாகும். மற்றவை அடுத்து வரும் இதழ்களில்.

○ பரிசுகள் பொன் விழா மேடையில் ஆகஸ்டு 3 ஆம் தேதி நடக்கவிருக்கும் தொடக்க தின நிகழ்ச்சியில் வழங்கப் பெறும்.

○ எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர், கல்கி, சென்னை — 600 032.




நமக்கெதுக்கு வம்பு... நான் விட்டுடறேன்!
என் பொறுப்பு தீர்ந்திச்சு... நீங்க கவனிச்சுக்-கோங்க!
ஐய்யய்யோ... எனக்கு வேணாம், நீங்களே பாத்துக்கோங்க!
அந்தாளு கொடுக்கறான்... எங்களைக் கொஞ்சம் கவனிச்சுக்க...
ராஜீவ்
ஆதரவு
இன்னும் யாருக்கெல்லாம் லிப்ட் வேணும்? வாங்க! வாங்க...
ராஜீவ்
தேர்தல்



கல்கி

1991 ஏப்ரல் 14
மலர் : 49 இதழ் : 37
பிரஜோத்பத்தி சித்திரை 1



தேசத்துரோகம் 1, 2!

"ஐயய்யோ! அக்கிரமம்! அநியாயம்! பட்நாயக் பிரிவினை வாதம் பேசிவிட்டார்!'' என்று இ. காங்கிரஸுடன் சேர்ந்து, வேறு பலரும் இன்று அலறுகிறார்கள். பட்நாயக், 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று கடுமையாகப் பேசக் கூடியவர்தான். சில நாட்களுக்கு முன்புதான் 'இந்தியாவைப் பாழடித்த பிரதமர்கள்' என்று மூன்று பேரைப் பட்டியலிட்டு ஒரு கலக்குக் கலக்கினார் பட்நாயக். இப்போதும் அப்படித்தான். பயங்கரமாகப் "பிரிவினை'' என்ற வார்த்தையைப் பிரயோகித்து, எல்லோரையும் கதிகலங்க அடித்திருக்கிறார்!

ஆனால் ஒன்று. இப்படி அதிரடி கொடுப்பது போல் பேசினால்தானே எல்லோர் கவனத்தையும் கவர முடிகிறது? காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வாதப்பிரதி வாதங்கள் எழுகின்றன? உண்மைகளும் வெளிவருகின்றன? நாசூக்காக, நாகரிகமாகப் பேசினால் யார் கவனிக்கிறார்கள்? ஒருவேளை பட்நாயக்கின் பேச்சு, பத்திரிகைகளில் இடம் பெறாமலே கூடப் போயிருக்கலாம்!

பட்நாயக் என்ன சொல்கிறார்? மாநிலங்களுக்கு அதிக சுயாட்சி வேண்டும். குறிப்பாகப் பொருளாதார — தொழில் சுதந்திரம் வேண்டும். டில்லியின் மேலாதிக்கம் இப்போது மிக அதிகமாக இருப்பதால், மாநிலங்கள் வளர்ச்சி அடையும் வேகம் தடைப்படுகிறது. இதைத் தவிர்த்து, மாநிலங்கள் துரித வளர்ச்சி அடைய வசதியாக, மத்திய — மாநில உறவுகள் சீர்ப்படுத்தப்பட வேண்டும். இல்லையெனில் மாநில மக்களிடையே அதிருப்தி அதிகரித்து, அது பிரிவினை சக்திகளுக்கு அதிக பலத்தைத் தேடித் தருவதாக முடியும். தேசிய ஒருமைப்பாடு சிதைவுறும்.

விஷயம் இதுதான். இப்படி நீட்டி முழக்கிச் சொன்னால் யாரும் காதில் வாங்கிக் கொள்ளப் போவதில்லை. அதனால் சிதறுகாய் உடைப்பது போல் பேசினார் பட்நாயக். அதற்காகத் தாக்குதலுக்கு உள்ளாகியும் வருகிறார்.

பொதுவாகவே மாநில அரசுகளின் பல திட்டங்களுக்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதிலும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் என்றால் பூரண ஒத்துழையாமைதான்! ஒரிஸ்ஸாவிலேயே பல திட்டங்கள் இப்படி ஒப்புதல் கிடைக்காமல் நிறைவேறாமல் உறங்கிக் கொண்டிருக்கின்றன.

இதே நேரத்தில் மத்திய அரசு, பொருளாதார ரீதியில் தவறுக்கு மேல் தவறு செய்து, நாட்டைத் திவாலா நிலையின் விளிம்பில் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறது! உலக நாடுகளைப் பார்த்து, "ஐயா சாமி, உதவி பண்ணுங்க; ரொம்பக் கஷ்ட நிலையிலே இருக்கோம்!'' என்று கெஞ்சுகிற நிலைதான் இன்று.

மாநிலங்களுக்குத் தொழில் பொருளாதாரத் துறையில் சுதந்திரங்கள் தந்தால் ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு வளரும். அயல்நாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் முதலீடுகளை ஈர்க்கும். அந்தந்த மாநிலங்களின் இயற்கைக் கனி வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, வளர்ச்சி, வேகம் பெறும். மக்களுக்கு வேலை வாய்ப்பும் சுபிட்சமும் பெருகும். மாநிலங்களின் தனித்தனி வளர்ச்சி, ஒட்டுமொத்தமாக தேசத்தின் வளர்ச்சியாக மலரும். இதுதான் பட்நாயக் கூறுவது.

தொழில்துறையை அரசு வழி நடத்திச் செல்ல வேண்டுமே தவிர, கட்டுப்படுத்தக் கூடாது என்பது பட்நாயக்கின் வாதம். பொருளாதார, நாணயப் பரிவர்த்தனை விஷயங்களிலும் சில புரட்சிகரமான கருத்துக்கள் அவருக்கு உண்டு.

எட்டு அல்லது பத்துக் குதிரைகள் பூட்டிய சாரட்டில், குதிரைகளை வழிநடத்திச் செல்ல, சவுக்குடன் சாரதி அமர வேண்டியதுதான். ஆனால் லகான்களைத் தளர்த்தப் பயந்து, எல்லாவற்றையும் இழுத்து இறுக்கிப் பிடித்தபடியே இருந்தால் சாரட் எப்படி நகரும்?

இதை எடுத்துக்காட்டுவதுதான் பட்நாயக்கின் நோக்கம். இது தேசத் துரோகமெனில், நாற்பது ஆண்டுகளாக மத்தியில் ஆட்சியில் இருந்து தேசத்தைத் திவாலா நிலைக்குக் கொண்டு போயிருப்பவர்களை என்னவென்று வர்ணிப்பது?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



பட்டண வாழ்வில் மகிழ்ந்து...

"**பா**ல் வாங்கிக் கொண்டு வர இவ்வளவு நேரமா?'' என்றாள் மனைவி.

பால் லாரி லேட்டாக வந்ததைப் பற்றி மனைவியிடம் கூறுவதே ஒரு சுவாரசியம். நான் மட்டுமல்லாமல் இன்னும் எத்தனை பொது மக்கள் காத்திருந்தனர் என்னென்ன பேசிக் கொண்டிருந்தனர் என்று பட்டியல் கொடுத்து விட்டு, பால் கவரைப் பார்த்தால் அதில் பால் இல்லை! எல்லாம் தரையில் ஒடியிருந்தது.

மனைவி உடனே கேட்டாள்: ''உங்களுக்கு மூளை இருக்கா? பால் கவர் வாங்கி வந்ததும் ஒரு பாத்திரத்தில் வைத்திருக்க வேண்டாமா? கவர் சில சமயம் ஒழுகும்னு தெரியுமில்லையா?''

பால் கவர்களுக்கு ஊசி போடுகிற டாக்டர்கள் பட்டணத்தில் உண்டு. பால் கவர் மூலையில் நைஸாக ஊசி போட்டுப் பாலை உறிஞ்சி விடுகிறார்கள். ஒரு கவருக்குக் கால் தம்ளர் பால் வீதம் உறிஞ்சினால் பத்துக் கவரில் அவர்கள் இரண்டு கவர் பால் சம்பாதித்து விடலாம். அந்த 'அவர்கள்' யார் என்பது எந்த சி. பி. ஐ.க்கும் தெரியாது. கண்டுபிடிக்க முடியாது.

பால் சண்டைக் காரணமாகக் கோபித்துக் கொண்டு டிபன் சாப்பிடாமல் (மனைவி செய்திருந்தாலல்லவா சாப்பிட முடியும் என்பது வேறு விஷயம்) ஆபீசுக்குப் புறப்பட்டேன்.

தொங்கத் தொங்க ஒரு பஸ் வந்தது. திராட்சைக் கொத்து போல் முன் வாசலிலும் பின் வாசலிலும் மக்கள் தொங்க, வேறு வழியின்றி நானும் முன் பக்கத்தில் தொற்றி ஏறிக் கொண்டேன். ஓர் ஆளிடம் ஒரு ரூபா கொடுத்துப் பின் பக்கமுள்ள கண்டக்டருக்கு அனுப்பி வைத்தேன் — சைதாப்பேட்டை ஒண்ணு என்று. இப்போதெல்லாம் கண்டக்டர் தன் சிம்மாசனத்தை விட்டு நகர்வதில்லை. நான் கொடுத்த ரூபாய் பல கைகள் மாறிக் கண்டக்டருக்குப் போய், சில்லறை இருபது பைசாவும் டிக்கெட்டுமாகத் திரும்பும் போது நடுவில் யாரோ நழுவ விட்டு விட்டார். டிக்கெட் எனக்குக் கிடைக்கவில்லை. கூட்டத்தில் எப்படித் தேடுவது?

நான் டிக்கெட் டிக்கெட் என்று அலறிக் கொண்டிருக்கும்போதே பஸ் நின்றது ஒரு ஸ்டாப்பிங்கில். திடீரென்று பரபரப்பு.

செக்கிங் இன்ஸ்பெக்டர்களின் நாலு பேர்க் குழு ஒன்று சோதிக்க வந்து விட்டது.

''எங்கே சார் டிக்கெட்?''

''வாங்கிட்டேன். கூட்டத்தில் விழுந்துட்டுது.''

''சரி, அப்படி ஓரமா நில்லுங்க..'' கருக்கமான, ஆனால் கறாரான கட்டளை.

என்னை விட்டு விட்டுப் பஸ் புறப்பட்டு விட்டது. செக்கிங் குழுவினர் ஸ்தலத்திலேயே தங்களுக்குள் ஒரு நீதிமன்றம் அமைத்துக் கொண்டு செயல்பட்டனர். பன்னிரண்டரை ரூபாய் ப்ளஸ் ஒரு பத்து, ப்ளஸ் நாலு என்று ஏதோ கணக்கிட்டு ஏறக்குறைய முப்பது ரூபாய் அபராதம் வாங்கிக் கொண்டு — ''இனிமேல் இப்படிச் செய்யாதீங்க சார். நீங்கள்ளாம் படிச்சவங்க....'' என்று புத்திமதி தந்துவிட்டு அடுத்த பஸ்ஸை வளைக்கத் தயாரானார்கள்.

எனக்கு வந்த வெறுப்பில் அருகிலிருந்த ஆட்டோ ரிக்ஷாவில் ஏறினேன். பணம் போனால் போகட்டும். பஸ்ஸில் இனி ஏறுவதில்லை!

''எங்கே சார் போகணும்?'' ஆட்டோ கேட்டார்.

''சைதாப்பேட்டை!''

''வராது. இறங்கிக்க சார்.''

''ஏம்பா?''

''இஞ்சின் ரிப்பேர்.''

''மேலே எதுனாப் போட்டுத் தந்தா இஞ்சின் ஓடுமாப்பா?''

''இன்னா சார்... இடக்குப் பேசுறியா? முன்னே இறங்கு சார்.''

''போலீஸ் ஸ்டேஷனுக்கு வண்டியை விடு. நான் இறங்க முடியாது'' வெறுப்பிலே இருந்த நான் பேசி விட,

''எறங்க முடியாதா? டேய் சோமாரி; என்ன சொன்னே, முடியாதா? உங்க பாட்டன் ஆட்டு வண்டியாடா கயிதே.. ஆபீசர் வேலையாடா காட்றே ஆபீசர் வேலை...'' ஆட்டோக்காரர் தடாலென்று ரவுடிபாஷையில் இறங்கி விட்டார்.

அதற்குள் அந்த வழியே சென்று கொண்டிருந்த இரண்டொரு ஆட்டோக்காரர்கள்

அவருக்குப் பக்கபலமாக வந்து சேர்ந்தனர்.

''அப்படியா சொல்றாரு தொரை! ஏன் தொரை! கலாட்டா பண்ணினா ஊடு போய் ஒழுங்காச் சேர மாட்டே...''

'அதில்லப்பா.. ஏதோ கட்டுப்படியா கலை. மேலே போட்டுக் கொடுன்னு கேட்டால் நான் தர மாட்டேன்னு சொல் வேனா?''

சரணாகதி!

மத்தியஸ்தம் உருவாகிறது. ''சரி சரி. மீட்டருக்கு மேலே அஞ்சு ரூபா போட்டுக் குடுத்துடு. சரிதானேடா கிஷ்டா?''

ஆட்டோக்காரர் உடனே கட்டுப்பட்டார். ''சரிப்பா... வண்டி பின்னே எதுக்கு இருக்குது? சவாரிக்குத்தானே? வவுத்துலே அடிக்கிற மாதிரி ஐயா பேசினாரு! கோபம் வந்துடுச்சி!''

''இடக்கு, வுடுபா!''

சைதாப்பேட்டைக்கு மூணரை ரூபாய் ஆயிற்று. ஐந்து ரூபாய் மீட்டருக்கு மேலே. ஆக எட்டரை.

கோபத்திலும் வெறுப்பிலும் உடம்பு வியர்த்துக் கொட்ட ஆபீஸில் ஸீட்டில் அமர்ந்து ''முனுசாமி! உஷ் அப்பாடா! ஃபேனைப் போடு'' என்றேன்.

முனுசாமி தன் இருக்கையிலிருந்து இம்மியும் நகராமல், ''பவர்கட்! அதுவின்றி ஓர் அணுவும் அசையாது சார்!'' என்றான்.

எனக்கு அழுகையே வந்து விட்டது. காலையில் டிபன் சாப்பிடாததால் வயிறு ஒரே கலகல!

வேலை ஒன்றும் நடக்காததால் (பவர் கட் ஆயிற்றே) என் கதையைக் கேட்டுக் கொண்டே பக்கத்து மேஜை நண்பர் 'த்சொ த்சொ' என்றார். அந்த அனுதாபம் எனக்குத் தேவையாய் இருந்தது. ஆறுதல் அளித்தது. ''வாங்க சார் முதல் காரியமா ஹோட்டலுக்குப் போய் டிபன் சாப்பிட்டுட்டு வரலாம்'' என்று தாமே மானேஜரிடம் போய் பர்மிஷன் வாங்கிக் கொண்டு வந்தார். ஓட்டலுக்கு அழைத்துப் போனார் மறுபடி வற்புறுத்தி. எனக்குப் பக்கத்து மேஜை நண்பர் மீது மதிப்பு எக்கச்சக்கமாக உயர்ந்து விட்டது, பில் வரும் வரை.

அப்போது பார்த்து நண்பர், ''அடடே! பர்ஸ்!'' என்று மறதி பேரில் பழி போட்டுத் தப்பித்துக் கொண்டார்!

நான் பில் பணத்தைக் காஷ் கவுண்டரில் கொட்டினேன். ஒரே நாளில் ஒன்பது தடவை ரத்த தானம் செய்த களைப்பு ஏற்பட்டது.

விரதம் பூண்டேன். இனிமேல் பஸ் ஏறுவதில்லை; ஆட்டோ ஏறுவதில்லை. ஓட்டலில் நுழைவதில்லை.

மாலை ஆபீஸ் விட்டதும் நடந்தே வீட்டுக்குப் புறப்பட்டேன். நடுவில் ஆறரை மணி சுமாருக்கு ஒரு பூங்காவில் சற்று உட்கார்ந்து இயற்கைக் காற்றை அனுபவித்து விட்டு எழுந்து பூங்கா வாசலுக்கு வந்த போது ஒரு மீசைக்கார வாலிபன் மோட்டார் சைக்கிளில் அருகில் வந்தான்.

''ஜஸ்ட் எ மினிட் சார். வாட் இஸ் த டைம்!'' என்றான்.

''டென் மினிட்ஸ் டு செவன்,'' என்றேன்.

''எங்கே?'' என்று கையைப் பற்றி மணியைப் பார்த்தவன், ஜூடோக்காரன் மாதிரி என் கையை ஒரு திருகுத் திருகி ஒடித்தான். அடுத்த நிமிஷம் என் கையிலிருந்த 'வாட்சைக் காணோம். உருவி விட்டான். மோட்டார் சைக்கிள் பறந்து விட்டது!

அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று கம்ப்ளெயிண்ட் செய்தேன். ''ஊட்டாண்டை வர்றோம் சார். கவலைப் படாதே. போ...'' என்று இரு போலீஸ்காரர்கள் மலர்ந்த முகத்துடன் தைரியம் சொன்னார்கள்.

அந்தக் கவலையையும் சுமந்து கொண்டு நடந்த போது, மணி ஒன்பதரையைத் தாண்டி விட்டது. தள்ளாடியவாறு வீட்டுக்கு வந்த போது வீடு கரு கும் என்று இருட்டு. மனைவி மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் விம்மினாள். ''இங்கே ஆளை அடிச்சுக் கொன்னு போட்டாக் கூடக் கேட்க நாதியில்லை. காத்தாலே ஏதோ ஒரு வார்த்தை சொல்லிட்டதற்காகப் பழி வாங்கற மாதிரி ஜாலியா நீங்க மட்டும் சினிமாப் பார்த்துட்டு ஓட்டல்லே வயித்தை ரொப்பிண்டு மெதுவா வர்றீங்க!''

''ஆமாண்டி சினிமா... எனக்குன்னு தனியா ரஜினிகாந்தும், கமலஹாசனும் போட்டுக் காட்டினாங்க. பார்த்துட்டு அவுங்களோட விருந்து சாப்பிட்டுட்டு மெதுவா வர்றேன்... காலையிலே உன் மூஞ்சியிலே முழிச்சேன் பார். செருப்பாலடிக்கணும்.''

''நீங்க எதிலே வேணும்னாலும் அடிப்பீங்க. சம்பாதிக்கிற கர்வம். திமிர்.''

''என் புத்தியை அடிச்சிக்கணும்னு சொன்னேண்டி! சட்!''


நினைவுகள் அலைக்கழித்தாலும் ஃபேன் ஓடாததாலும் இரவெல்லாம் தூக்கம் வராமல் புரண்டேன். மறு நாளாவது நல்ல பொழுதாக விடியுமா?

காலை நாளிதழில் சென்ஸஸ் செய்தி வெளியாகியிருந்தது. தமிழ் நாட்டின் மொத்த ஜனத் தொகை ஐந்தரைக் கோடி. ஏறக்குறைய பத்தில் ஒரு பங்கினர் சென்னைப் பட்டணத்தில் இருக்கின்றனர். (53,61,468) மேலும் மேலும் வந்து கொண்டேயிருக்கின்றனர். சென்னை எவ்வளவு பேரைக் கவர்கிறது!

'ஆகா, இத்தனை சிறப்பான நகரத்தில் இருப்பதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!'

காலை நல்ல பொழுதாக விடிந்து விட்டது!

ஜஷ்ராம்


சித்திரையே வருக!
வளம் பல தருக!!
அண்ணாமலை பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 252, மேட்டுப்பாளையம் ரோடு, கோயம்புத்தூர்-641 043.
போன்: 42224 தந்தி: "ராஜ்தூத்" டெலக்ஸ்: 0855-386, AFL IN
கிளைகள் :
உங்கள் முன்னேற்றமே எங்கள் நோக்கம்.

என் ராசாவின் மனசிலே...

மகா துணிச்சல்காரர் தயாரிப்பாளர் ராஜ்கிரண். ஏகப்பட்ட அறிமுகங்கள். இயக்குனர் உட்பட. அவரும் கூடக் கதாநாயகனாக.

அந்த முரட்டுப் பாத்திரத்துக்கு ஏற்ற முரட்டுத் தோற்றம். அதிகம் பேசாமல் கண்களின் துடிப்பிலும் தாடைகளின் இறுக்கத்திலும் காலை அழுந்த வைத்து நடப்பதிலும் அடுத்தவரை அடித்து நொறுக்கும் போது வெளிப்படும் ஆக்ரோஷத்திலும் 'அறிமுகம்' என்கிற சொல் அடிபட்டுப் போகிறது.

அந்த முரட்டுத்தனத்தை எடுத்துக்காட்டத் துணைக்குப் போகிறவர், காமெராவை இயக்கியிருப்பவர். அவர் அதனைப் பயன்படுத்தியுள்ள விதம் நயம்.



முழுக்க முழுக்கக் கிராமியக் கதை. அந்த மண் வாசனையையும் சொற்பிரயோகங்களையும் அள்ளி வீசுகிறவர் ஸ்ரீவித்யா.

நரைத்த தலையும் தோளை நோக்கித் தொங்கும் பாம்படமுமாய், முரட்டு மகனுக்கும் அவனைக் கண்டு நடுங்கோ நடுங்காய்ப் பதறி உதறும் மருமகளுக்கும் அவர் எடுத்துரைக்கும் வாழ்க்கை உண்மைகள் தனிப் பாங்கு.



ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்துக்கே உரித்தான பேச்சு வழக்கும், உச்சரிப்பும் ஆரம்பத்தில் என்னவோ போல ஒலித்தாலும் போகப் போகப் பழகி விடுகின்றன. என்றாலும் அவ்வப்போது காதில் விழும் ஒரு சொல், யதார்த்தம் என்கிற போர்வையையும் மீறிச் சற்று விரசமாகத் தொனிக்கிறது. அதைப் போன்றதுதான் செந்தில் – கவுண்டமணி நகைச்சுவையும்.

இசை இளையராஜா. காட்சிகள் நிமிர்ந்து நிற்பதில் இவருடைய பங்கு கணிசமானது.

உள்ளுக்குள் இரக்கத்தையும் அளப்பரிய ஆசையையும் தேக்கி வைத்துக் கொண்டு, முரட்டுத் தோற்றம் – பேச்சு – நடவடிக்கை ஆகியவற்றை மீறி அவற்றை வெளிப்படுத்தத் தெரியாத கணவன் —

அவனைப் பார்த்த கணத்திலேயே பதறிப் பதுங்கி விதியை நொந்து அழும் மனைவி —

இருவருமே ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் நேரத்தில் மரணம் அவர்களைப் பிரித்து விடுவது பளீரென்ற சோகம்.

— சி. ஆர். கே.

நல்ல தொடக்கம்

உலகத்தில் வேடிக்கையான உண்மை ஒன்று உண்டு. எதையுமே ஆரம்பம் செய்வது கொஞ்சம் சிரமம். ஆரம்பித்து விட்டால் பத்து பேர் சேர்ந்து கொண்டு பிரமாதப்படுத்தத் தயாராக இருப்பார்கள். Starting trouble நம் தேசிய வியாதி. ஏன் மனித குலப் பொது அம்சம்.

ஒரு விழா முடிந்து 'தேசிய கீதம்' என்று அறிவித்தால் மேடையில் இருப்பவர் மக்களைப் பார்ப்பார். மக்கள் மேடையை முறைப்பார்கள். இவரைப் பார் அவரைப் பார் என்று சுவரைப் பார்த்து முழிப்பார்கள். யாராவது 'ஜன' என்று சத்தம் கொடுத்து ஆரம்பம் செய்தால், 'கண மண' சத்தம் காதைக் கிழிக்கும்.

எப்படித் தொடங்குவது என்ற இந்தத் தடுமாற்றத்தை ஒழிக்க, சட்டென்று தொடங்க, ஒரு நல்ல பழக்கத்தை நமது பெரியோர்கள் ஏற்பாடு செய்தார்கள். பிள்ளையாரை வணங்கி ஆரம்பம் செய் என்று பழக்கி விட்டார்கள். பல கீர்த்தனைகள் தெரிந்த பாகவதர் கூட எதைப் பாடுவது என்று சங்கடப்படாமல் 'வாதாபி கணபதி' என்று ஆரம்பித்து மற்றவர்களைத்தான் சங்கடப்படுத்துவார்!

இரண்டு மனிதர்கள் சந்தித்தால் எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று தடுமாற வேண்டாதபடி "செளக்கியமா?" என்ற கேள்வியைக் கண்டுபிடித்தாரே அந்த மனுஷர் வாயில் அரைக் கிலோ சர்க்கரை போட வேண்டும். அடாடா! அவருக்குச் சர்க்கரை வியாதி இல்லாத சவுக்யம் இருக்க வேண்டும்.

இந்த "செளக்கியமா?" என்ற கேள்வி மாதிரிதான் பிள்ளையார் வணக்கம். கலைகளை, திறமையை, ஆற்றலை வளர்க்கும் நல்ல தொடக்கம் பிள்ளையார் வணக்கம்.

உலக மகா எழுத்தாளர் ஒருவர் இருந்தார். 'நான் எழுதியதை எவன் படிக்கப் போகிறான்? என்ன ராயல்டி வரும்?' என்பன போன்ற கவலையே இல்லாமல் மனுஷன் எழுது எழுது என்று எழுதிக் குவித்தவர்.

புனை பெயர் டெக்னிக் வராத காலத்திலேயே 'எழுத்தாளன்' (எழுத்தை ஆள்பவன்) என்ற புனை பெயர் பெற்றவர் அவர். எழுத்தாளன் என்றாலே அவர்தான்; வியாசர்.

அவருக்கும் பிரச்னை. பிரச்னைகள் இருந்தால்தானே பெரிய மனுஷன் என்று அர்த்தம்! அவர் சொல்லும் வேகத்தில் எழுதி முடிக்க ஆள் கிடைக்காத அவஸ்தை அவருக்கு. அதாவது நல்ல ஸ்டெனோ கிடைக்காத பிரச்னை.

வாழ்க்கைப் பிரச்சனைகள் தீர வழிகாட்டும் இலக்கியத்தை எழுத நினைத்த வியாசருக்கு எழுதுவதே பிரச்னை! டாக்டருக்கே இருமல்...! அம்மா கையால் ஒரு தம்ளர் சுக்குக் கஷாயம் சாப்பிடும் பிரபல டாக்டர்கள் போல, நல்ல நண்பர் நாரதரிடம் பிரச்னை தீர வழி கேட்டார் வியாசர். வழி சொல்பவர்களும் வழி கேட்க வேண்டி வரும். உலகம் அவ்வளவு பெரிசு!

'பிள்ளையாரைப் பிடித்தால் பிரச்னை தீரும்' என்ற நாரத முனிவரின் நல்ல யோசனை மகரிஷிக்கு மகிழ்ச்சி தந்தது. பிள்ளையாரைப் பிடித்து "சொல்லும் வேகத்தில் எழுதுங்கள் ஸ்வாமி" என்றார். அவரோ "நான் எழுதும் வேகத்தில் சொல்ல முடியுமா?" என்று திருப்பிக் கேட்டார்!

பிரச்னையின் விளிம்பில் புதிய பிரச்னை! அதுதானே வாழ்க்கை? சோதனைகள் வந்து ஜெயிப்பதுதான் வெற்றி. "எழுதுகிற வேகத்தில் சொல்ல வேண்டுமா! சொல்லுகிறேன் எழுதும்" என்றார்.

"எப்படி முடியும்?" விநாயகர் கேட்டார்.

"உங்கள் அருள் இருப்பதால் முடியும்" என்றார் வியாசர். விநாயகர் சிரித்து விட்டார். சின்னச் சின்னக் கண்கள் குவிய பெத்தம் பெரிய வயிறு குலுங்க... ஓ! அது எத்தனை அழகு!

கஷ்டம் வந்தால் புலம்பாதீர்கள். 'அதிர்ஷ்டம் அவ்வளவுதான்' என்று அலுத்துத் துக்க தீட்சை கொடுத்து உலகை இருட்டாக்காதீர்கள். மனித முயற்சியும் கடவுள் கருணையும் இணைந்தால் ஆஹா, அதுதான் அழகு!

மனிதன் இட்ட பணியைக் கடவுள் செய்கிறார். மக்கள் பணியே மகேசன் பணி. ஊருக்கு உழைப்பவனுக்கு ஒத்துழைக்க வேண்டியது கடவுளின் கட்டாயம். கடவுள் நல்லவர்களின் வேலைக்காரன்.

அடடா! அவர்தானே தலைவனே இல்லாத தலைவர். நாயக் = தலைமை. வி = இல்லாமை. விநாயகர் தலைவர் இல்லாதவர். தலைவர் இல்லாத தலைவர் தொண்டர்களின் வேலைக்காரர்!

அதில் இன்னொரு சூட்சுமம். ஆனையாக இருப்பவர் பிள்ளையார். ஆனால்

சுகிசிவம்



ஆனையை அடக்கும் அங்குசம் அவர் கையில். என்ன அர்த்தம்? தட்டிக் கேட்க ஆள் இல்லாத தலைவர்கள் தங்களைத் தாங்களே அடக்கிக் கொள்ள வேண்டும். இதையே இன்னொரு விதமாகச் சொல்வதெனில் எவன் தன்னைத் தானே அடக்கிக் கொள்கிறானோ அவன்தான் பெரிய தலைவன்.

எப்படியோ நமது பெரிய தலைவர் பெரிய உடம்பை வளைத்துக் குழைத்து ஜம்மென்று வியாசர் எதிரில் உட்கார்ந்தார். ''உம், சொல்லலாம்'' என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டினார்.

இரண்டு தந்தங்களும் 'பளீர், பளீர்' என்று மின்னின. வியாசர் அந்த வெள்ளைத் தந்தங்களின் வசீகரத்தில் சடுபட்டு வைத்த கண் வாங்காமல் உற்றுப் பார்த்தார்.

அடுத்த வினாடி படீர் என்று ஒரு சப்தம்! 'பளீர்' என்று மின்னிய தந்தத்தில் ஒன்று பிள்ளையார் கையில்!

'சுவாமி இது என்ன? அழகான தந்தம்... மூளியாக்கி விட்டீர்களே?'' — பதறினார் வியாசர்.

''அழகு என்பது பார்த்து ரசிப்பதற்கு மட்டுமா? பயன்பட வேண்டாமா? கண்ணுக்கு அழகாய் இருக்க எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். கருத்துக்கு அழகாய் இருக்க வேண்டாமா? இதுதான் என் எழுத்தாணி'' என்றார் கணபதி.

என்ன பெரிய கொள்கை? 'utility — Beauty என்ற இரண்டில் எது பெரிது?' என்றால் — utility is the best beauty என்றபடி — வாழ்க்கை பிறருக்குப் பயன்படவே என்பது பிள்ளையாரிஸம்!

அழகாய் இருக்க ஆசைப்படு. அழகை இழந்தாவது அடுத்தவர்க்குப் பயன்படு. வியாசரின் உதவியாளர் வேக வேகமாய் எழுதுகிறார். வியாசர் கடினமான சுலோகங்கள் சொல்லும் போது, புரிந்து கொள்ள விநாயகர் யோசித்தார் என்றும் அப்போது வியாசர் மேலும் பல சுலோகங்களை மனத்தில் எழுதிக் கொண்டார் என்றும் கதை சொல்வார்கள்.

அவர்களோடு சண்டைக்குப் போனார் அருணகிரிநாதர். ''என்ன அநியாயம். முழு முதல் கடவுள் விநாயகர், வியாசர் சொன்ன பிறகா எழுத வேண்டும்? முன் கூட்டியே என்ன சொல்லப் போகிறார் என்று கணித்து எழுதி விட மாட்டாரா?'' என்று நினைத்தார்.

போட்டாரே ஒரு போடு: ''முத்தமிழ் அடைவினை'' — மகாபாரதக் கதையினை; ''முற்படுகிரிதனில்'' — மேருமலை மீது; ''முற்பட எழுதிய'' — முன்கூட்டியே எழுதிய (அதாவது வியாசர் சொல்லு முன்பே எழுதிய); ''முதல்வோனே'' = விநாயகனே!

யார் தலைவனுக்குத் தலைவனோ, அவன்தான் தொண்டருக்குத் தொண்டன். கஷ்டம் வந்தால் புலம்ப வேண்டாம். கை கொடுக்கக் கடவுள் உண்டு. மனிதன் கடவுளுக்காகவா? இல்லை! கடவுள் மனிதனுக்காக!

— இன்னும் வரும்

சிக்கனத்துக்காக ஒரு ஜி.ஓ!

பி. ஏ. அறையிலிருந்து வெளியே வந்த மானேஜர், முத்துசுப்ரமணியம் ஒரே பரபரப்பாகக் காணப்பட்டார். ஸ்கட் ஏவுகணையாய் அவர் டேபிளிலிருந்து புறப்பட்ட அந்தக் கோப்பு, தற்காப்பு ஏதுமில்லாமல் வீற்றிருந்த ஏ. ஒன். கிளார்க் மணவாளன் மேஜையில் போய் விழுந்தது.

''யோவ் மணவாளன்... நான் எத்தனை தரம் கதறியிருப்பேன்.... அந்த ஜி. ஓ.வை டிவிஷன், சப்டிவிஷனுக்கெல்லாம் உடனே அனுப்பித் தொலைய்யான்னு? கேட்டயா... இப்போ அந்த பி. ஏ. கிட்டே நான் பாட்டு வாங்க வேண்டியிருக்கய்யா.'' மானேஜர் முத்து சுப்ரமணியத்தின் கூற்றை ஒத்துக் கொள்ளும் நிலையில் மணவாளன் இல்லை.

''சரிதான் நிறுத்துங்க சார்.... நீங்க பாட்டு வாங்கிட்டு வந்ததைப் பெரிசாச் சொல்றீங்களே... நான் ஓட்டு வாங்கறவனாட்டம் எல்லார் கிட்டேயும் லோல் பட்டுட்டுத்தான் இருக்கேன்...'' சதாமைக் கண்ட புஷ்ஷாய் மணவாளன் சீறவே முத்துசுப்ரமணியன் புஸ்ஸென்று அடங்கினார்.

''உமக்கு அந்த ஜி. ஓ.வைக் காப்பி எடுத்து அனுப்பறதிலே என்னதான் சிரமம்?'' ஐ. நா சபையாய்ச் சமாதானம் பேசினார் மானேஜர்.

''ஒண்ணா ரெண்டா, மொத்தம் நூத்தி எட்டுக் காப்பி எடுக்கணும். ஸ்டென்சில் கட் பண்ணி சைக்ளோஸ்டைல் பண்ணணும். நாலு நாளா கங்காதரனைக் கேட்டுட்டே இருக்கேன்... ஒரு ஸ்டென்ஸில் பேப்பர் கிடைக்க மாட்டேங்குது!'' என்று மணவாளன் முறையிட்டவுடன், மானேஜரின் கோபம் திசை திரும்பியது.

''ஏன்யா கங்காதரன், ஸ்டென்ஸில் பேப்பர் கொடுக்கறதுக் கென்னய்யா?'' கங்காதரன் வாயில்லாப் பூச்சியாதலால் மானேஜரின் குரல் நல்ல உச்ச ஸ்தாயியில் இருந்தது.

''சுத்தமா ஒரு பேப்பர்கூட இல்ல சார்... இன்டென்ட் போட்டு ஒரு வாரமாகுது... சூப்பர் மார்க்கெட் போய் வாங்கிட்டு வரணும்.....'' என்று கங்காதரன் தன் வழுக்கைத் தலையை வருடியபடி சொன்னதும், மானேஜரின் கறுத்தமுகம் சிவந்தது.

''என்னய்யா இது? வாங்கிட்டு வரணும்னு இழுக்கறே.... நானா போய் வாங்கிட்டு வர முடியும்... செல்வராஜைப் போய் வாங்கிட்டு வரச் சொல்லறதுதானே?''

''அவன் நாலு நாளா சி. எல். சார்.''

''ஏன் நீயும் போட்டுத் தொலைக்கறது தானே?''

''அடுத்த வாரம் தான் அப்பா தெவசம்... லீவு போடணும்'' என்று அப்பாவியாய்க் கங்காதரன் கூற மானேஜர் கலைக்கப்பட்ட கட்சியாய் ஆத்திரமுற்றார்.

''எல்லாருமாச் சேர்ந்து, எனக்குத்தான் தெவசம் பண்ணப் போறீங்க... யோவ் முத்துசாமி இங்கே வாய்யா.... சூப்பர் மார்க்கெட் போயிட்டு வரணும்...''

முத்துசாமி அந்த அலுவலகத்தின் கடைநிலை ஊழியர்களில் ஒருவன் தான். இருந்தாலும் மானேஜர் வரையிலான அனைத்து அலுவலர்களுக்கும் கடன்நிலை வரும்போது கைகொடுத்து உதவுவதால் அவன் எடுபிடி வேலைகளை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். யாரும் சொல்வதுமில்லை.

''அம்மாந்தூரம் என்னால போவமுடியாது சார்'' என்று மறுத்தான்.

''ரொம்ப அர்ஜெண்ட். கொஞ்சம் போயிட்டு வந்துடு. எச். ஆர். போட்டு பஸ் சார்ஜ் கிளைம் பண்ணிக்கலாம்!'' — பெண் சீமந்தத்திற்கு அவனிடம் வாங்கிய கைமாத்து மானேஜரைக் கெஞ்ச வைத்தது.

''என்னால ரெண்டு மூணு ரூபா எச். ஆர்.ருக்கெல்லாம் உங்களாண்ட தொங்கிட்டு இருக்க முடியாது சார்!'' என்ற முத்துசாமியின் பதிலால் மானேஜரின் முகம் 'பந்த்'தினச் சாலையாய்ப் பரிதாபமானது.

அப்போதுதான் டிவிஷனல் இஞ்ஜினியரிடமிருந்து அவருக்கு ஒரு போன் வந்தது. ஏதோ 'பில்' விஷயமாக மானேஜர் தயவு அவருக்குத் தேவையாய் இருந்தது. உடனே மானேஜரும் நிலைமையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ''கொஞ்சம் உங்க ஜீப்பை இந்த ஆபிஸுக்கு அனுப்புங்க... ஒரு அர்ஜெண்ட் வேலையிருக்கு!'' எனத் தொலைபேசி மூலம் தொல்லைப்படுத்தினார்.

இஞ்ஜினியர், மானேஜர் வார்த்தையை மீற முடியாமல் உடனே அனுப்பிவைத்தார்.

''முத்துசாமி சீக்கிரமா ஜீப்பில் போய் வாங்கிட்டு வந்துடு. கங்காதரன் அந்த இன்டெண்ட் போட்ட சூப்பர் மார்கெட் லெட்டரைக் கொடுத்தனுப்பய்யா...'' என்று மானேஜர் முடுக்கி விட்டுவிட்டு உட்கார்ந்தார்.

ஒரு மணி நேரம் கழித்து ஜீப் திரும்பியது. முத்துசாமி வெறுங்கையோடு திரும்பினான்.

அகிலா கார்த்திகேயன்

''சூப்பர் மார்க்கெட்ல ஸ்டாக் இல்லேன்னு சொல்லிட்டாங்க!'' என்று தெனாவெட்டாகச் சொல்லிட்டு நின்றான்.

மானேஜருக்கு ஆத்திரமாக வந்தது. இருந்தாலும் அடக்கிக் கொண்டு கேட்டார் அதுக்கு இவ்வளவு நேரமாச்சா?''

''என்ன சார் இப்பிடிக் கேட்கறே.... ஜங்ஷன் பக்கமெல்லாம் ஓவர் டிராபிக். நானே கஷ்டப்பட்டுச் சந்துல பொந்துல பூந்து ஓட்டிகினு வந்துக்கீரேன்'' என்று டிரைவர் ஜெயகுமார் கோபப்பட்டான்.

அவனும் முத்துசாமியும் சேர்ந்து ஜீப் தங்கள் கையில் கிடைத்த தருணத்தைச் சகாயமாக்கிக் கொண்டு மண்டித் தெருவில் ஒருமூட்டை அரிசியைச் சகாயமாக வாங்கிப் போட்டுக் கொண்டு தங்கள் வீடுவரை சந்து பொந்துகளில் நுழைந்து, கஷ்டப்பட்டுவிட்டு தான் வந்திருந்தனர்!

''அப்ப, பழனியப்பா பேப்பர் மார்ட்டுக்கு போய், ஒரு நாலைந்து ஸ்டென்சில் பேப்பரையாவது வாங்கிட்டு வந்திருக்கலாமில்லே'' மானேஜர் கேட்டதும் முத்துசாமி வெடித்தான்.

''துட்டு யார் கைல கீது..?''


''சரி இப்போ போயி வாங்கிட்டு வந்துடுங்க. யோவ் கங்காதரன் ஒரு இருபது ரூபா இருந்தாக் கொடுத்தனுப்பய்யா... அப்புறம் 'கண்டிஜெண்ட்ல' போட்டுத் தர்றேன்'' என ஏமாந்தவன் தலையில் மிளகாய் அரைத்து அவர்களை அனுப்பி வைத்தார்.

ஜீப் மீண்டும் கடைவீதிக்குப் பறந்து நாலு ஸ்டென்சில் பேப்பர்களைத் தூக்க முடியாமல் தூக்கிவந்து இறக்கியது.

ஒரு வழியாக ஸ்டென்சில் பேப்பர் வந்ததும் அதை மணவாளனிடம் கொடுத்து விட்டுப் பெருமூச்சு விட நினைத்தார்... ஆனால் முடியவில்லை.

''ஏன் சார்! டைப்பிஸ்ட் டை யார் சார் டிரஷரிக்கு அனுப்பிச்சது?'' என்று மணவாளன் கேட்டபோது மானேஜருக்குச் சுருக்கென்றது. அவர்தான் தன் ஜி. பி. எஃப் லோன் விஷயமாக, டைப்பிஸ்ட் கமலாவின் நாத்தனார் அங்கு கிளார்க்காக இருப்பதால் சொல்லிவிட்டு வர அனுப்பியிருந்தார்.

''அது இல்லே மணவாளன்.. சீக்கிரம் வந்துடுங்கன்னு சொல்லித்தான் அனுப்பிச்சேன்..அதனாலென்ன ஜெயகுமார் இன்னும்



ஜீப் எடுத்துட்டுப் போகலே... அவனைக் கூப்பிடுங்க. டிரஷரி வரைக்கும் போய்க் கமலாவைக் கூட்டிட்டு வரச் சொன்னாப் போச்சு.''

மறுபடியும் ஜீப் பறந்தது. கமலாவை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு பவனி வருவது ஜெயகுமாருக்கு குஷியான சமாசாரமாயிருந்தது.

''ஜெயகுமார் கொஞ்சம் ஜீப்பை வசந்த் நகர் வரைக்கும் விடறியா... எங்க அத்தை உடம்பு சரியில்லாம இருக்காங்களாம். தலையைக் காட்டிட்டு வந்துடறேன்'' என்றாள் கமலா.

''அதுக்கென்னம்மா... போனாப் போச்சு!'' என்று கவிழ்ப்பு உத்திரவில் கையெழுத்திட்ட ஜனாதிபதியாய் மறுக்காமல் ஒப்புக் கொண்டான். ஊர்க் கோடியிலிருந்த வசந்த் நகரை வலம் வந்த ஜீப் அசந்து போய் ஆபீஸ் திரும்பியது.

இந்த முறை 'ஏன் லேட்டு?' என்று கேட்டு அவனிடம் பாட்டு வாங்குவானேன் என்று மானேஜர் விட்டுவிட்டார்.

கமலா முணுமுணுத்துக் கொண்டே ஜி. ஒ.வை ஸ்டென்சில் பேப்பரில் டைப் செய்து கொடுத்துவிட்டு சாப்பிடப் போனாள்.

அடுத்த கட்ட நடவடிக்கைக்காக மணவாளன் நடராஜனை அழைத்தார். அவன் தான் புளு பிரிண்ட் ஆபரேட்டர். மற்றும் ஸ்டென்சில் உருட்டி.

''நடராஜன்! இந்த ஜி. ஒ. வை நூத்தியெட்டுக் காப்பி எடுக்கணும்.. இன்னிக்கே டெஸ்பாட்ச் ஆகணுமாம்.... மானேஜர் கூடிக்கறார்'' என்றார் மணவாளன்.

''ஐயையோ... நூத்தி எட்டுக் காப்பியா. எப்படிப் போடறது?''

''உம்... பிஸ்டர் லேயா போடுவே. இது என்ன குடிக்கிற காப்பியா? மெஷின்ல தான்யா உருட்டணும். எப்படீன்னு கேட்கறே?''

''அட அறுக்காதீங்க சார். டூப்ளிகேட்டிங் இங்க் தீந்து போச்சு.''

''இது என்னையா எழவு. நீயே போயி மானேஜர் கிட்டேச் சொல்லு'' என்று மணவாளன் சொன்னதும் நடராஜன், ''பயமா என்ன? சொல்றேன்'' என்றபடி மானேஜரிடம் போனான்.

''என்னப்பா நடராஜா, உருட்ட ஆரம்பிச்சிட்டயா?'' மானேஜர் ஆவலாய்க் கேட்டார்.

''நீங்க ஏன் சார் என் மண்டையை உருட்டறீங்க. நான் அப்பவே சொன்னேன். மை கொஞ்சம்தான் இருக்குன்னு. நீங்கதான் நேத்திக்கு உங்க பொண்ணு ஜாதகத்தை ஸ்டென்சில் போட்டு நூறு காப்பி எடுத்துக் கொடுக்கச் சொன்னீங்க. இங்க் எல்லாம் தீந்துப் போச்சு. இப்போ நான் இங்க் இல்லேன்னு சொன்னா வள்ளுனு விழுவீங்க....'' என்று சொன்னதும் யார் மேல் யார் வள்ளென்று விழுகிறார்களெனப் புரியாமல் மானேஜர் தவித்தார்.

சமயத்தில் நடராஜன் இப்படிக் கழுத்தறுக்கிறானே என்று எரிச்சலாய் இருந்தது. 'இரு உன் அரியர்ஸ் பில்லில் சொதப்பிவிடுகிறேன்' என்று உள்ளே கருவிக் கொண்டே ''சரி இப்ப என்ன ஆகிப் போச்சு?... வண்டி நம்ப கையிலே இருக்கு... எடுத்துட்டுப் போய் வாங்கிட்டு வந்துட்டாப் போச்சு'' என்று இந்த முறை தானே பணம் கொடுத்து அனுப்ப உத்தேசித்து ஜெயகுமாரைக் கூப்பிட்டார்.

''வண்டியை எடுத்துட்டு, கூட்டு ரோடு வரைக்கும் போயிட்டு வந்துடுப்பா.. அங்க 'ஜெயம் ஸ்டோர்ஸ்'னு இருக்கும். டூப்ளிகேடிங் இங்க்குனு கேளு. அமவுண்ட் போடாம பில்லை வாங்கிட்டு வந்துடு'' என்றார்.

''என்ன சார் இது பேஜாரு.... சொம்மா ஒன்னமாத்தி ஒன்னாச் சொல்லிக்கினேகீறிங்க? ஒரு அஞ்சு லிட்டர் பெட்ரோலுக்கு

முல்லாவின் முன்யோசனை!



● ஒரு சமயம் முல்லா தம் வீட்டைச் சுற்றி ஒரு விதப் பொடியைத் தூவிக் கொண்டிருந்ததைக் கண்ட எதிர் வீட்டுக்காரர், ''முல்லா என்ன செய்கிறீர்கள்?'' என வினவினார்.

''அற்புத சக்தி கொண்ட இந்தப் பொடியைத் தூவி வைத்தால், புலிகள் அருகே வராது'' என்று கூறினார் முல்லா.

''முல்லா இங்கிருந்து பத்து மைல் வரையில் புலிகள் கிடையாதே'' என்று வியப்புடன் கூறினார் எதிர்வீட்டுக்காரர்.

''பார்த்தீர்களா! இந்த அற்புதமான சக்தி கொண்ட பொடிதான் புலிகளைப் பத்து மைல் தொலைவு விரட்டி விட்டது'' என்று பெருமையுடன் கூறினார் முல்லா!

— எஸ். முகம்மது யூசுப்.



MADHWA SANGHA (REGD)

(SRI RAGHAVENDRA SWAMY BRINDAVAN)

6, 10th Street, Nanganallur

Madras - 600 061

AN APPEAL

A Parimala Mantapa to house Veda Patasala, Library and Pravachana Hall is to be constructed on the vacant plot opposite to Sri Raghavendra-swamy Brindavan, Nanganallur, at a cost of about Rs. 25 lakhs.


The Mantapa is to have two floors besides the ground floor, total area working out to 12,000 Sq.ft. The approximate cost for some items of work is given under.

Cost per Sq.ft. — Rs.251/-
Cost per Pillar — Rs. 8,000/-
Cost per Room — Rs. 30,000/-

For donations of Rs. 1,000/- and above, inscriptions will be made according to the donor's instructions.

Donations in kind and cash in smaller denominations are also gratefully accepted.

Donations may be drawn by Cheque/Draft on Parimala Mantap Account, Madhwa Sangha, and sent to 6, 10th Street, Nanganallur, Madras - 600 061. *Donations are exempted under 80-G of I. T. Act.*



NCL INDUSTRIES LIMITED
VII FLOOR, RAGHAVA RATNA TOWERS
CHIRAG ALI LANE, HYDERABAD-500 001. INDIA

எழுதிக் கொடுங்க. பங்கிலே போட்டுக்கறேன். வண்டிலே சுத்தமா பெட்ரோல் தீந்து போச்சு'' என்று ஜெயகுமார் அலுத்துக் கொண்டானேயன்றி, இதுமாதிரி சமயங்களில்தான் அவனுக்கு பெட்ரோல் திருடுவது சாத்தியமான விஷயம். வேறு வழியில்லாமல் மானேஜர் 'இன்டென்ட்' எழுதிக் கொடுக்கத் திரும்பவும் ஜீப் பறந்தது.

திருடிய பெட்ரோலை பாதி விலைக்கு விற்றதில் பாக்கெட் சாராயத்தை வாங்கி வயிற்றை நிரப்பிக் கொண்டு 'டுப்ளிகேட் டிங்இங்க்' கோடு ஜெயகுமார் திரும்பினான்.

ஜி. ஓ. வை உருட்ட ஆரம்பித்திருந்தார் நடராஜன்.

''அப்ப நான் வண்டியை எடுத்துட்டுப் போறேன்... டி.ச. காத்துகிட்டு இருப்பார்'' என ஜெயகுமார் மானேஜரிடம் முறையிட்டான்.

''சரி... போயிட்டு வா.''

''இந்தாங்க இதுல ஒரு கையெழுத்துப் போடுங்க'' என்று ஜெயகுமார் லாக்புக்கை நீட்டினான்.

''என்னப்பா இது, வண்டி இன்னிக்கு எண்பது கிலோ மீட்டர் ஓடியிருக்கு?'' மானேஜர் கேட்டதும் ஜெயகுமாருக்கு மலிவு விலை போதை ஏறியது.

''ஏன் சார் கேட்கமாட்டீங்க? இதை வாங்கிட்டுவா, அதை வாங்கிட்டுன்னு நச்சு நச்சுன்னு ஊர் பூராச் சுத்திட்டு வரச் சொல்லிட்டு, இப்போ எண்பது கிலோ மீட்டரா ஓடியிருக்குன்னு நம்பிக்கையில்லாம கேட்டா எப்படி?'' என்று கிட்டத்தட்ட மானேஜரை அதட்டினான்.

''அதுக்கில்லே ஜெயகுமார்... எண்பது கிலோ மீட்டரோ, நூறு கிலோ மீட்டரோ அதைப்பத்திக் கவலையில்லை. ஆபீஸ் வேலையாச் சுத்தினதா லாக்புக்லே எழுத முடியாது. வேணும்னா ஒரு ஏழெட்டுக் கிலோ மீட்டர் போட்டுத் தர்றேன். மீதியை டி. ச. கிட்டச் சொல்லி 'சைட்'டுக்குப் போனதா அட்ஜஸ்ட்பண்ணி எழுதச்சொல்லு. நானும் அவருக்கு போன் பண்றேன். போகும் போது ஜி. ஓ. காப்பி டெஸ்பாட்சிலே இருக்கு. அதையும் வாங்கிட்டுப் போயி, டிவிஷன்ல கொடுத்துடு.''

மிகவும் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக எண்பது கிலோ மீட்டருக்கான பெட்ரோல் விழுங்கி 'டெஸ்பாட்ச்' செய்யப்பட்டுக் கொடுக்கப்பட்ட அந்த அரசாணையின் நகல் கீழ்க் கண்டவாறு உத்திரவிட்டது:

''எரிபொருள் சிக்கனத்துக்காக அனைத்து அரசாங்க அதிகாரிகளும் தங்களுக்கு அளிக்கப்பட்ட அரசாங்க ஊர்திகளை மிகவும் கவனமான முறையில், சிக்கனமாக உபயோகிக்க இதன் மூலம் அறிவுறுத்தப்படுகின்றனர். அவசியமற்ற முறையில் ஊர்திகள் உபயோகம் செய்திருப்பது தெரியவருமெனில் அந்த அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கப் படுகின்றனர்.''



ஸ்ரீப்ரியாவின் தீர்ப்புக்குப் பணிவுடன் ஒரு திருத்தம்!

'நல்ல சிந்தனை — எனக்கு பாத்ரூமில் பிறக்கிறது. பெரிய அறிஞர்களும் இதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்' என்று குமுதத்தில் எழுதியதன் மூலம் ஸ்ரீப்ரியா தான் என் ஞானக் கண்ணைத் திறந்தார். இச்செய்தியைப் படித்த நான், நேரத்தை வீணாக்காமல் உடனே பாத்ரூம் நோக்கி ஓடினேன்.

பி.டி. உஷா கணக்காக ஓடி, நான் பாத்ரூமினுள் நுழைந்தது தான் தாமதம், வெளியிலிருந்து, "சீக்கிரம் வாங்க சார்," என்ற குரல்கள் வந்தன. ரெண்டு நொடிக்கொரு முறை அந்தக் குரல்கள் தொடர்ந்து என் சிந்தனை செய்யும் முயற்சியைச் சிதறடிக்க, நான் குழாயைத் திறந்தேன் — தண்ணீர் விழும் சத்தத்தில் குரல்கள் அமுங்கி விடுமென்று. சோதனையாகத் திறந்த குழாயில் தண்ணீர் வரவில்லை; காற்றுத்தான் வந்தது. ஆயினும் என்ன! பளீரென்று எனக்குச் சிந்தனை வந்தது. 'எதிர்பார்ப்புக்கள், ஏமாற்றங்கள் — இது தாண்டா வாழ்க்கை!'

அடுத்த சிந்தனை என்னுள் கிளர்ந்தெழுவதற்குள் பாத்ரூமிலிருந்து நான் வெளியே வருவதற்காகக் காத்திருந்தவர்கள் பலமாகக் கத்த ஆரம்பித்தார்கள். "சீக்கிரம் வெளியே வாய்யா," என்று மரியாதை குறைய ஆரம்பித்தது.

"சும்மா கத்தாதீங்க. தண்ணீர் வந்தால் தானே நான் வெளிவர முடியும். வாட்டர் டாங்க் காலி. லாட்ஜ் மானேஜர்கிட்டப் போய் மோட்டார் போடச் சொல்லுங்க," என்று கத்தினேன்.

பாத்ரூமின் அருமையை நான் உணர வேண்டும்; சிந்திப்பதற்கு எனக்கொரு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே எனக்கு இப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது போலும் பாத்ரூம்! எனவே, தண்ணீர் வருகிற வரை, என் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடலாம் என்று தட்டி விட்டேன்.

சும்மா சொல்லக் கூடாது — பிடுங்கி விட்ட குழாயிலிருந்து தண்ணீர் பீய்ச்சி அடிப்பது போல் பீறிட்டுக் கொண்டு வந்த சிந்தனைகள் எல்லாம் பாத்ரூம் பற்றியே என்பதால் அவற்றில் சிலவற்றை உங்களுக்கும் அள்ளித் தெளிக்கிறேன்.

பட்டினத்தார் மட்டும் பாத்ரூமை அனுபவிக்க நேர்ந்திருந்தால், "குளியலே — அது பொய்யடா! பாத்ரூம் இருந்தால் அது மெய்யடா!" என்று பாடியிருப்பார்.

மகாராஜபுரம், எஸ்.பி.பி., பாலமுரளி போன்று பாடமுடியவில்லையே என்ற என் போன்ற பலரின் ஆதங்கத்தைத் தீர்த்து வைப்பது பாத்ரூமே. முதலில் எஸ்.பி.பி.யின் மூச்சு விடாத பாடலை ஆரம்பித்து, அது முடியாமல் போக, தியாகய்யரின் எந்தரோ மகானுபாவுலுவை மகாராஜபுரம் குரலில் தொடர்ந்து.... இப்படி ஒரே நேரத்தில் பல வித்வான்களை ஒரே குரலில் கொண்டு வரச் செய்கிற பாத்ரூமிற்கு நிகர் பாத்ரூம்தான் போங்கள்!

இதுமட்டுமா? பல மருத்துவர்கள், சம்பாதிப்பதற்குப் பேருதவியாய் இருப்பதும் பாத்ரூம்தான். சமீபத்திய புள்ளி விவரக் கணக்குப்படி, பெருகிவரும் எலும்பு முறிவுக் கேஸ்களில் பெரும்பாலானவை பாத்ரூமில் வழுக்கி விழுந்த கேஸ்களே என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! அப்புறம், இளங் காதலர்கள் தங்கள் காதலை வளரோ வளரென்று வளர்த்துக் கொள்ளப் பேருதவியாய் இருப்பதும் பாத்ரூம்களே. காதலன் — காதலி தங்களுக்குள் பரிமாறிக் கொள்கிற கடிதங்களைப் படிப்பதற்கான பத்திரமான இடமாகப் பாத்ரூமையே கருதுகிறார்கள். இந்தச் சமாசாரத்தை வயது வந்த பெண்ணைத் தன் வீட்டில் வைத்திருக்கும் ஒரு வயதான பெண்மணியிடம் நான் கூற, அது அவர்களுக்கே ஆபத்தாக முடிந்த கதை என்னுள் நிழலாடியது.

'ஏன்னா! எப்பப் பார்த்தாலும் கைல

தமாஷ்வாலா

பேப்பரை வச்சிண்டு என்ன கிழிக்கறேள். நம்ம பெண்ணைக் கவனிக்கப்படாதோ?'

'ஏன் — அவ எங்கயாவது யாரோடவா வது சுத்தறாளா!'

'அது இல்ல சமாசாரம். அவ இப்பல்லாம் அடிக்கடி பாத்ரூமுக்குள் போய்க் கதவைச் சாத்திண்டிடரா!'

'போகட்டுமே. அதுக்கு நான் என்ன பண்ணட்டும்?'

'உங்களுக்கு ஒரு மண்ணும் புரியறதில்ல. அவ எவனிடமோ லவ் லெட்டரை வாங் கிண்டு வந்து பாத்ரூம்ல படிக்கிறா. உங் களுக்கு இது தெரியல!'

'அப்படியா! வெளியே வரட்டும் இன்னிக்கு கையும்களவுமாகப் பிடிச்சுட றேன்!' என்று அந்தப் பெண் வெளியே வந்த போது, அவளிடமிருந்த கடிதத்தைப் பிடுங்கிப் படிக்க ஆரம்பித்த அவர் முகத் தில் ஈயாடாவில்லை. காரணம், அந்தப் பெண் பாத்ரூமில் படித்து வரும் கடிதங்கள், இளம் வயதில் அவள் பெற்றோர்கள் பரி மாறிக் கொண்ட கடிதங்கள்தான்!

இப்படி, பாத்ரூமைப் பற்றிய சிந்தனை கள் என்னுள் ஊற்றாய்ப் பெருக்கெடுக்க, அதே நேரத்தில் திறந்திருந்த குழாயிலிருந்து தண்ணீர் பெருகி பாத்ரூமிற்கு வெளியே வழிந்தோட, இதெல்லாம் அறியாது சிந்த னையில் ஆழ்ந்திருந்த என்னை வெளி யேற்றும் பொருட்டு, வெளியில் காத்திருந் தவர்கள் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்து என்னைத் துவையோ துவை யென்று துவைத்தெடுத்து விட்டார்கள், பாத்ரூமினுள்ளேயே! யம்மாடி!

ஸ்ரீப்ரியாவின் தீர்ப்புக்குப் பணிவுடன் ஒரு திருத்தம்: 'நல்ல சிந்தனை பாத்ரூமில் பிறக்கிறதோ இல்லையோ, அங்கு சிந்த னையை நாடுபவர்களுக்கு நிந்தனை நிச் சயம் பிறக்கிறது!'

சொன்னபடி நடந்தால்...



நடிப்பு



சாந்தம் தவழும் அந்த முகத்தைப் பார்த்தவுடனேயே சண்முகப் பெருமாளுக்குள் சகலமும் ஒருமுறை புரண்டது.

''வாங்க சார்! உங்க செக்ரட்டரி போன் பண்ணிச் சொன்னார். கொஞ்சம் வெயிட் பண்ணுங்க! வெளியே என் ரசிகர்கள்... போட்டோ எடுத்துட்டு அவங்களை அனுப்பிட்டு வர்றேன்!''

சூழ்ந்திருக்கும் மௌனத்தைக் குலைக்காமல், சிதைக்காமல் அதனூடே இழைந்து, நிதானமாய் ஆனால் கம்பீரமாக அந்தக் குரல்... கண்ணைப் பறிக்கிற வெண்ணிற உடையும், நெற்றியில் துலங்கும் திருநீறும் உதடு பிரியாமல் பேசுகிற அந்த பாவமும், அடுத்தவரின் கண்ணை ஊடுருவிப் பாய்கின்ற அந்தப் பார்வையும், பதற்றமில்லாமல் நடக்கும் அந்த நளினமும்... இயோ... இவரா அவர்... 'கட்டிக்கடி நீ தொட்டுக்கடி' என்று மலின ரகப் பாடல் வரிகளுக்கு, அதை விட மலின ரக இசையில் டப்பாங்குத்து ஆடும் அந்தச் சூர்யகாந்தனா இவர்?

சண்முகப்பெருமாள் கொஞ்சம் கலங்கலாய்த்தான் இருந்தார்.

''சொல்லுங்க? என்ன, விஷயமா வந்தீங்க?'' என்றார் ரசிகர்களை அனுப்பி விட்டு வந்த சூர்யகாந்தன்.

மீண்டும் அதே நளினம்.

''வர்ற தையிலே ஒரு படம் பூஜை போட்றலாம்னு இருக்கேன். உங்களை நம்பித் தான்...''.

''என்னை நம்பியா?'' — மெலிதான சிரிப்பு. லட்சக்கணக்கில் ரசிகர்களை அள்ளிக் குவித்த அந்தச் சிரிப்பு.

''என்னைக் கொஞ்சம் மன்னிச்சுக்கணும் சண்முகப்பெருமாள்! நான் இனி நடிக்கிறதா இல்லை. போன படம் வெள்ளி விழா. இதே மரியாதையோட விலகிக்கிறது தான் நல்லது.''

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது

திருவையாறு பாலுசாமி

நீங்க. வரிசையா மூணும் படுத்திருச்சு எனக்கு. உங்களை நம்பித்தான் இருக்கேன். என் குடும்பம் பிழைக்கணும். கொஞ்சம் தயவு பண்ணணும்!

''என்னைப் புரிஞ்சிக்கலையே நீங்க! வாங்க என் கூட!'' என்று நடந்தார் சூர்ய காந்தன்.

சூர்யா... எதையும் செய்யத் தயங்காத ரசிகர்கள். இன்னும் சொல்லப் போனால் வெறியர்கள். இதில் பெண்கள், சிறுசுகள், பெரிசுகள் எல்லாம் உள்ளடக்கம். ஒருமுறை சூர்யகாந்தன் பட ரிலீஸன்று, அவர் கட் — அவுட்டுக்குக் கிட்டத்தட்ட நூறு லிட்டர் பால் அபிஷேகம் செய்து, சாலையெல்லாம் பாலாறு பாயச் செய்து சாதனை படைத்தார்கள்.

''உள்ளே வாங்க! இது என் பூஜை ரூம்!''

ஒரு மிதமான வெப்பம் சூழ்ந்து கொண்டது. ஊதுவத்தியும், அகல் விளக்கும் எரிந்து கொண்டிருந்தன.

''உட்காருங்க!''

பொருந்தாத இடத்திற்கு வந்தது போல் தயங்கி உட்கார்ந்தார் சண்முகப் பெருமாள்.

''எனக்கு வேண்டுமட்டும் தெய்வம் கொடுத்திருச்சு! பணம், புகழ், செல்வாக்கு, கார், பங்களா... ஒரு மனிதனுக்கு என்னென்ன இருந்தா அவன் ராஜ வாழ்க்கை வாழ்வானோ அத்தனையும் பகவான் கொடுத்திருக்கான். நான் எதுக்கு இனி நடிக்கணும்? சொல்லுங்க! எனக்கு ஆன்மீகம் மட்டுமே பிடிக்கிறது. அதுதான் என் உயிர். என் மொத்த வாழ்க்கையும் இனி ஆன்மீகத்தில்தான். அது இங்கே... இந்தப் பரபரப்பில் இருந்தா எனக்குக் கிடைக்காது. அதனால நான் கொஞ்ச நாள்ல இமய மலைச் சாரலுக்குப் போகப் போறேன். அந்த அமைதி, அந்த ஏகாந்தம்... மரங்கள், நீரோடை... பறவைகள்...''

சிறிது நேரம் அமைதியாய் இலக்கில்லாமல் வெறித்தார். கண்களை மூடினார். ''பகவானே'' என முணுமுணுத்தது சண்முகப் பெருமாளுக்குக் கொஞ்சம் கேட்டது. மௌனத்தை மெலிதாகக் கிறிக் கொண்டு எழுந்த குரலில், சூர்யகாந்தன் மெல்லப் பேசினார்.

''சொல்லுங்க! இனியும் நான் நடிக்கணுமா?''

''அவசியம் என் படத்தில நடிக்கணும். முடிச்சுக் கொடுத்துட்டு நீங்க புறப்பட வேண்டிய ஏற்பாட்டை நானே செய்துடறேன்!''

''இதைத்தான் எல்லோரும் சொல்றீங்க! நான் என் ஆன்மீகம், பகவான்னு ஒதுங்க விரும்பறேன். விட மாட்டேங்கிறீங்க..! இவ்வளவு வசதி இருந்தும் என்னால என் விருப்பப்படி நடக்க முடியுதா பாருங்க!'' என்றார்.

சண்முகப் பெருமாள் தயக்கமாய்க் கொண்டு வந்து சூட்கேஸைப் பிரித்தார்.

''போன படத்துக்கு முப்பது வாங்கினீங்களாம்! நான் நாப்பது தர்றேன்...''

''நான் கேட்டனா...? நான் கேட்டனா. உங்ககிட்ட?'' குரலை உயர்த்தினார் சூர்ய காந்தன்.

''மன்னிக்கணும். கொஞ்சம் தயவு பண்ணி...''

பேச வேறு வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருந்தார் சண்முகப்பெருமாள்.

''கொஞ்ச நேரம் தொந்தரவு செய்யாதீங்க!'' என்று சொல்லி விட்டு மீண்டும் அந்த இலக்கில்லா வெறிப்பு.

கரைந்த கொஞ்ச நேரத்தில் சண்முகப் பெருமாள் கத்தியில் நின்றார். நிமிர்ந்த சூர்யகாந்தன், ''உங்களுக்காக! உங்க வேண்டுகோளுக்காக... உங்க நல்ல முகத்துக்காக, நான் நடிக்கிறேன். ஆனா முப்பது நாள் கால்ஷீட்தான். பிறகு இமய மலைக்குப் பயணம் தொடங்கிடுவேன். சரியா?''

''ஐயா! இது போதும்! இது போதும் எனக்கு!''

''போயிட்டு வாங்க! எனக்கு தியானத்துக்கு நேரம் ஆச்சு!''

பூஜை அறைக்குள் நடந்தார் சூர்யகாந்தன்.

''என்னங்க இது! கொஞ்ச நாளா பேப்பர்ல நீங்க எங்கியோ மலைப் பக்கம் போகப் போறதா நியூஸ் வருது. ஏதோ சாமி கும்பிடறீங்க, சரி! இதெல்லாம் என்ன... எனக்கு என்னவோ உங்களை நினைச்சா பயமா இருக்கு!'' என்றாள் உமா. உமா சூர்யகாந்தன்!

''அட பைத்தியம்! என்னை நீ புரிஞ்சுக்கிட்டது இவ்வளவுதான்!''

''என்ன சொல்றீங்க?''

''அதாவது... நேத்து வந்தாரே சண்முகப் பெருமாள். அவர்கிட்டே நான் அமைதி தேடி இமய மலைப் பக்கம் போறேன்னு சொன்னேன்; நடிக்க மாட்டேன்னேன். என்ன செஞ்சார் அவர்? போன படத்தில வாங்கின முப்பது லட்சத்தை நாப்பதாக் கிட்டார். இவர் படம் முடிஞ்சவுடனே திரும்பவும் இமய மலைன்னு சொல்வேன். இன்னும் இங்க, பத்து ஏறும். இதே ரேட்ல போனா நம்ம சிமெண்ட் ஃபாக்டரியை அடுத்த வருஷமே கூட முடிச்சுடலாம். எப்படி நம்ம திட்டம்!''

''நல்ல திட்டம்தான். ஆனா இதெல்லாம்... அதாவது இந்த வேஷமெல்லாம் உங்க ரசிகர்களுக்குத் தெரிஞ்சா என்னாகும்?''

''அடச்சீ! அதெல்லாம் வெறும் கூட்டம்டி. ஆட்டு மந்தைக் கூட்டம். நான் எது செஞ்சாலும் ஏன்னு கேட்காது. ஏன்னா அந்தக் கூட்டம் அப்படியே பழகிடுச்சு! மாறவே மாறாது. மாத்தவும் முடியாது. முந்தா நாள் கூட நான் நடிக்கல, இமய மலைப் பக்கம் போறேன்னதும் ஒருத்தன் தீக்குளிக்க முயற்சி பண்ணியிருக்கான். என்ன ஒரு அறிவு பாரு அவனுக்கு? இவனுங்களாவது என்னைப் பத்தித் தெரிஞ்சிக்கிறதாவது... வெறும் வாத்து மடையனுங்க...''

சிவகாமியின் சபதம்



இருபதாம் அத்தியாயம்
குண்டோதரன் கதை

குண்டோதரன் குதிரையிலிருந்து குதித்து இறங்கி வந்து, சாலையில் நின்ற ஆயனரின் பாதங்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான். பின்னர், எழுந்து நின்று, ''ஐயா! என்னை ஆசீர்வாதம் செய்யுங்கள். தங்களுடைய திருவருளினால்தான் நான் தங்களைத் தேடிக் கண்டுபிடித்தேன்'' என்று சொன்னான்.

''ரொம்பவும் சந்தோஷம், குண்டோதரா! நீ தேடிக் கொண்டு வந்து சேர்ந்ததில் எனக்கு வெகு சந்தோஷம். ஆனால் உன்னைக் கைவிட்டு விட்டு, நாங்கள் வந்து விடவில்லையே? நீ அல்லவா திடீரென்று எங்களைக் கைவிட்டு விட்டு மாயமாய் மறைந்து விட்டாய்?.... எங்கே அப்பா போயிருந்தாய்?'' என்று ஆயனர் கேட்க, குண்டோதரன், ''குருவே! நான் என்ன செய்வேன்! காஞ்சியிலிருந்து அன்றைக்கு ரதம் ஓட்டிக் கொண்டு கண்ணபிரான் வந்தானல்லவா? அவன் ஒரு சமாசாரம் சொன்னான். என் பாட்டி எனக்குக் கல்யாணம் பண்ணி வைப்பதற்காகப் பெண் பார்த்து வைத்திருக்கிறாள் என்றும், உடனே வரச் சொன்னாள் என்றும் தெரிவித்தான். அப்புறம் காரியம் மிஞ்சி விடப் போகிறது என்று உடனே போய், பாட்டியிடம் கல்யாணம் வேண்டாம் என்று சொல்லி விட்டு வருவதற்காகக் காஞ்சிக்கு ஓடினேன். உங்களிடம் சொல்லிக் கொண்டு போகலாமென்று பார்த்தால், வீட்டில் உங்கள் இரண்டு பேரையும் காணவில்லை. ஒருவேளை தாமரைக் குளக்கரையில் இருப்பீர்களோ என்று ஓடிப் போய்ப் பார்த்தால், அங்கேயும் உங்களைக் காணவில்லை. இந்தப் புத்த பிக்ஷுதான் தாமரைக் குளக்கரையில் நின்று கொண்டிருந்தார்...'' என்று சொல்லிக் குண்டோதரன் நாகநந்தியடிகளை ஏறிட்டுப் பார்த்தான்.

''என்னைச் சொல்கிறாயா, தம்பி? இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தில் உள்ள புத்த பிக்ஷு நான் ஒருவன்தானா? வேறு யாரை யாவது பார்த்திருப்பாய்!'' என்றார் நாகநந்தி அடிகள்.

''இல்லை, சுவாமி, இல்லை! தங்களைத்தான் பார்த்தேன். கையிலே ஏழெட்டு ஓலைச் சுருள்களை வைத்துக் கொண்டு ஒரு ஓலையைப் படித்துக் கொண்டிருந்தீர்கள். நாகப் பாம்பு சீறுவதைப் போல் சீறிக் கொண்டிருந்தீர்கள்....''

சிவகாமியின் மனத்தில் அப்போது சுருக்கென்றது. மரப் பொந்திலே அவள் வைத்திருந்த மாமல்லரின் ஓலைகள் காணாமற் போனது அவளுக்கு நினைவு வந்தது.

அப்போது நாகநந்தி, ''என்ன அப்பா

அமரர் கல்கி

உளறுகிறாய்? நானாவது தாமரைக் குளக் கரையில் நின்று ஓலை படிக்கவாவது?'' என்றார்.

ஆயனரும், ''வேறு யாராவது இருக்கும் குண்டோதரா! அப்புறம் உன் கதையைச் சொல்!'' என்றார்.

''இல்லை, குருவே! இவரையேதான் பார்த்தேன். இவருடைய முகத்தையும் இவர் சிறுவதையும் பார்த்ததும் எனக்கு என்ன தோன்றிற்று தெரியுமா? — ஆ! அதைச் சொல்லக் கூடாது. சொன்னால், பிக்ஷுவுக்குக் கோபம் வரும். கோபம் வந்து என்னைக் கடித்தாலும் கடித்து விடுவார்!'' என்றான்.

நாகநந்தியின் கண்களில் தீப்பொறி பறந்தது. ஆயனரோ நிலைமை விரஸமாய்ப் போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து, ''பாருங்கள் சுவாமி! இப்பேர்ப்பட்ட புத்திசாலி சிஷ்யனை வைத்துக் கொண்டு என்ன சிற்ப வேலையைச் செய்வது? அதனால்தான் எட்டு மாதமாக நான் ஒன்றும் செய்யவில்லை.... போகட்டும். குண்டோதரா! அப்புறம் உன் கதையைச் சொல்லு! உன் பாட்டி பேசி வைத்த பெண்ணின் கதி என்ன?'' என்றார்.

''குருவே! பாட்டியிடம் கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன். 'பாட்டி, பாட்டி! நம்முடைய மகேந்திர சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்லர் எத்தனை எத்தனையோ ராஜாக்கள் பெண் கொடுப்பதாக வந்தும் இன்னும் கலியாணம் பண்ணிக் கொள்ளாமல் பிரம்மச்சாரியாயிருக்கிறார். என் குருநாதருடைய செல்வப் புதல்வி சிவகாமிக்கு இன்னும் கலியாணமாகவில்லை. அவர்கள் எல்லாம் அப்படி இருக்கும் போது எனக்கு மட்டும் கலியாணம் என்னத்திற்கு, பாட்டி? நீ வேணுமானால் கலியாணம் பண்ணிக் கொள். நான் கிட்ட இருந்து நடத்துகிறேன்' என்று சொன்னேன்...''

குண்டோதரன் இவ்வாறு கூறியதும், எல்லாரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள். சிவகாமியின் அத்தையும் கூடச் சிரித்து விட்டு, ''என்னத்திற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று சிவகாமியைக் கேட்டாள்.

''குண்டோதரனுக்குக் கலியாணமாம்!'' என்றாள் சிவகாமி.

ஆயனர், ''சரி, தம்பி! நாங்கள் இங்கே கிளம்பி வந்தது உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டார்.

குண்டோதரன் சொல்கிறான்: ''குருவே! பாட்டியிடம் அவசரமாகச் சொல்லி விட்டு ஓட்டம் ஓட்டமாய் நமது வீட்டுக்கு வந்து பார்த்தால், வீடு பூட்டிக் கிடந்தது! நம்முடைய குருநாதரே நம்மைக் கைவிட்டு விட்டார். இனிமேல் கடவுள்தான் நமக்குத் துணை என்று தீர்மானித்து அப்படியே மரத்தடியில் படுத்துத் தூங்கிப் போய் விட்டேன். 'அப்போது பாருங்கள்! கடவுளே பார்த்து அனுப்பியது போல் நமது குமார சக்கரவர்த்தியும் புதிய தளபதி பரஞ்சோதியாரும் அங்கே வந்து சேர்ந்தார்கள்!''

''யார் வந்தது!'' என்று ஆயனர், சிவகாமி இரண்டு பேரும் ஏக காலத்தில் கேட்டார்கள்.

''மாமல்லரும் தளபதி பரஞ்சோதியாரும் வந்தார்கள். குதிரை மேல் வந்தார்கள்! ஆகா! குதிரை என்றால், அதுவல்லவா குதிரை...''

''அப்புறம்!'' என்றார் ஆயனர்.

''அவர்களுக்குப் பின்னால் இன்னும் பல குதிரை வீரர்கள் வந்தார்கள். கண்ணபிரான் ரதம் ஓட்டிக் கொண்டு வந்தான்.

''சரி, அப்புறம் என்ன நடந்தது?'' என்றார் ஆயனர்.''

மாமல்லர் வந்தார் என்று கேட்டதும் சிவகாமிக்குத் தலைசுற்றியது. தேகமெல்லாம் நடுங்கியது. என்னவெல்லாமோ கேட்க வேண்டுமென்று உள்ளம் துடித்தது. உதடுகளும் துடித்தன.

எனினும், ''யார் வந்தது?'' என்று கேட்டதற்குப் பிறகு அவளுடைய வாயிலிருந்து வார்த்தை எதுவும் வரவில்லை. ஆனால், விஷயத்தைச் சொல்லாமல் குண்டோதரன் என்னவெல்லாமோ சொல்லிக் கொண்டிருந்ததில் அவளுக்குக் கோபமாய் வந்தது.

குண்டோதரன் சொல்கிறான்: ''குருவே! வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் எனக்கு எவ்வளவு கோபம் வந்ததோ அதை விட மூன்று மடங்கு கோபம் நமது குமார சக்கரவர்த்திக்கு வந்து விட்டது. மாமல்லர் குதிரையைத் திருப்பி விட்டுக் கொண்டு போன வேகத்தைப் பார்க்க வேண்டுமே? அடே அப்பா! நமது குமார சக்கரவர்த்திக்கு மூக்குக்கு மேல் இவ்வளவு கோபம் வரும் என்பது எனக்குத் தெரியவே தெரியாது. குமார சக்கரவர்த்தியின் குதிரை திரும்பியதும், மற்றக் குதிரைகள் சடசடவென்று திரும்புவதற்குப் பட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே.... என்ன அவசரம்? என்ன தடபுடல்?... நான் கண்ணைக் கசக்கிக் கொண்டு எழுந்து மரத்தின் பின்னாலிருந்து வெளியே வருவதற்குள்ளே அவ்வளவு குதிரைகளும் காற்றாய்ப் பறந்து மறைந்து போய் விட்டன....''

முன் கதை

காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு, பல்லவ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த மகேந்திர வர்ம சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்ல நரசிம்மருக்கும் அரண்யத்தின் நடுவில் வீடு கட்டிக் கொண்டு சிற்ப வேலைகள் செய்து வந்த ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து வருகிறது.

பல்லவ சாம்ராஜ்யத்தின் மேல் படையெடுத்து வந்த வாதாபி புலிகேசியின் சைன்யத்தை எதிர்ப்பதற்காக, பல்லவ சைன்யத்துக்குத் தலைமை ஏற்றுப் புறப்படுகிறார் மகேந்திரர். போகும் போது, தம் குமாரரிடம் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போவதில்லை என்று வாக்குறுதி பெற்றுக் கொண்டு செல்கிறார்.

ஆயனச் சிற்பிக்காக அஜந்தா வர்ண ரகசியங்களை அறிந்து வருவதற்காகச் சென்ற இளைஞன் பரஞ்சோதி, வழியில் பல்லவ சைன்யத்தில் சேர்ந்து, அரும் பெரும் வீரச் செயல்கள் புரிகிறான். அவனைக் காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்கும் பொருட்டு, சக்கரவர்த்தி அனுப்பி வைக்கிறார்.

புலிகேசிக்கு முன்பே தான் காஞ்சியை அடைய வேண்டுமென்ற துராசையோடு படையெடுத்து வரும் கங்க நாட்டு மன்னன் துர்விநீதனை முறியடிக்கும்படி சக்கரவர்த்தி ஓலையனுப்புகிறார். அதன்படி நரசிம்மரும் பரஞ்சோதியும் படையோடு புறப்பட்டுச் செல்கிறார்கள். புறப்படுவதற்கு முன்பு, தந்தையின் ஆலோசனைப்படி ஆயனரையும் சிவகாமியையும் காஞ்சிக்கு அனுப்பி வைப்பதற்காக, ஆயனரின் வீட்டுக்குச் சென்ற போது அது பூட்டிக் கிடக்கிறது.

இதற்கிடையில், நாகநந்தி என்னும் புத்த பிக்ஷு மாமல்லரைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்றும், 'ஸ்திரீ லோலன்' என்றும் கூறியதைக் கேட்ட சிவகாமி முதலில் அதிர்ச்சியடைகிறாள்; பிறகு சந்தேகம் கொள்கிறாள். அந்தக் குழப்பத்தில், 'சிவகாமியின் நடனம் தூர தேசங்களிலெல்லாம் பிரபலமாக வேண்டும்; அதற்கும் பல்லவ ராஜ்யத்தை விட்டு வெளியேற வேண்டும்' என்று நாகநந்தி கூறிய யோசனையைத் தந்தையிடம் வற்புறுத்தி ஒப்புக் கொள்ளச் செய்கிறாள். அதன்படி சிவகாமி, ஆயனர், சிவகாமியின் அத்தை ஆகிய மூவரும் நாகநந்தியுடன் புறப்பட்டுச் செல்கிறார்கள்.

வழியில் ஒரு சிறுபடையொன்று மாமல்லரின் வீரத்தைப் புகழ்ந்து கோஷங்களை எழுப்பிக் கொண்டு இவர்களைக் கடந்து போகிறது. அந்த கோஷங்கள் சிவகாமியின் உள்ளத்தில் பெரும் கிளர்ச்சியை உண்டு பண்ணுகின்றன. அப்போது, திடீரென்று, ஆயனரின் சிஷ்யன் குண்டோதரன் ஒரு குதிரையின் மேல் ஏறிக் கொண்டு வந்து, "குருவே! நான் என்ன தவறு செய்தேன்! என்னை இப்படி அனாதையாய்க் கைவிட்டுவிட்டுச் சொல்லாமல் புறப்பட்டு வந்துவிட்டீர்களே!" என்று அலறுகிறான்.

சிவகாமியின் உள்ளத்தில் அப்போது மகிழ்ச்சி, பயம், கோபம், கவலை முதலிய உணர்ச்சிகள் ததும்பி, புயற் காற்று அடிக்கும் போது சமுத்திரம் கலங்குவது போல் கலங்கச் செய்து கொண்டிருந்தன. மாமல்லர் தன்னைத் தேடி வந்தார் என்பதில் மகிழ்ச்சி, அவருக்கு வந்த கோபத்தைக் கேட்டதில் பயம். அவர் வருவதற்கு முன்னால் கிளம்பும்படி செய்த நாகநந்தியின் மேல் கோபம்; செய்த தவறை எப்படித் திருத்துவது என்பது பற்றிக் கவலை — இப்படிப்பட்ட பலவகை உணர்ச்சிகளுக்கிடையே ஒரே ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்ள அவளுக்கு ஆவல் துடிதுடித்தது.

ஒருவாறு நெஞ்சை உறுதிப்படுத்திக் கொண்டு, "அப்பா! குண்டோதரன் சொல்வது எனக்கு நிஜமாகத் தோன்றவில்லை. குமார சக்கரவர்த்தியாவது, நம் வீட்டுக்கு வரவாவது? அவர்தான் யுத்தத்துக்குப் பயந்து கொண்டு கோட்டையில் ஒளிந்து கொண்டிருந்தாரே!" என்றாள்.

ஆயனர் அதற்கு மறுமொழி சொல்லத் தெரியாதவராய் குண்டோதரனைப் பார்க்க, அவன், "குருவே! இப்படிப்பட்ட நாராசமான வார்த்தைகள் சிவகாமி அம்மையின் வாயிலிருந்துதானா உண்மையில் வெளி வந்தன? வீராதி வீரரான மகா மல்லராவது, யுத்தத்துக்குப் பயந்து கோட்டையில் ஒளிந்து கொண்டிருக்கவாவது? இப்பேர்ப்பட்ட கொடிய அவதூறை எந்தப் பாவி சிவகாமி அம்மையின் காதில் போட்டது? சக்கரவர்த்தியின் கட்டளைக்காக அல்லவா மாமல்லர் இத்தனை நாளும் கோட்டைக்குள்ளே இருந்தார். சக்கரவர்த்தியின் ஆக்ஞை வந்தவுடனே மாமல்லர் நேரே போர்க்களத்துக்கல்லவா புறப்பட்டுப் போகிறார்!"

"போர்க்களத்துக்கா? எந்தப் போர்க்களத்துக்கு?" என்று ஆயனர் கேட்க, "தெரியாதா, குருவே? நாடு நகரமெல்லாம் அறிந்த விஷயமாயிற்றே? மகேந்திர சக்கரவர்த்தி வடபெண்ணைக் கரையில் முடக்கப்பட்டிருக்கும் தைரியத்தினால், கங்க நாட்டுத் துர்விநீதன் காஞ்சியின் மேல் படையெடுத்து வரும் செய்தி தங்களுக்குத் தெரியாதா? அவனையும் அவனுடைய படையையும் எதிர்த்துத் துவம்ஸம் செய்வதற்குத்தான் மாமல்லர் திருக்கழுக்குன்றத்திலிருந்த நமது தற்காப்புப் படையுடன் போயிருக்கிறார். சற்று முன்னால், இந்தச் சாலையில் ஒரு படை போயிற்றே, நீங்கள் பார்க்கவில்லையா? அந்தப் படை தென் பெண்ணைக் கரையிலேயே காவலுக்கு இருந்த படை; போர்க்களத்திற்குப் போகும் மாமல்லருடனே சேர்ந்து கொள்ளத்தான் போகிறது. இதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளவில்லையா?" என்றான் குண்டோதரன்.

வெகுசாதுவாகவும், பேசவே தெரியாத மந்தனாகவும் இந்தனை நாளும் தோன்றிய குண்டோதரன் இப்போது இவ்வளவு வாசாலகனாய் மாறியிருந்தது ஆயனருக்கு ஒரே ஆச்சரியத்தை அளித்தது. அவனிடம் இன்னும் ஏதோ அவர் கேட்கப் போனார். அந்தச் சமயம், நாகநந்தி கலக்கமடைந்த குரலில், "ஆயனரே! நன்றாய் இருட்டி விட்டதே? மிச்ச வழியையும் கடந்து இரவு தங்குவதற்கு அசோகபுரிக்குப் போய் விட வேண்டாமா! குண்டோதரன் நம்முடன் வருகிறானே, எல்லா விவரங்களும் சாவகாசமாய் அவனிடம் கேட்டுக் கொண்டால் போகிறது!" என்றார்.

உண்மையிலேயே அப்போது நன்றாய் இருட்டி விட்டிருந்தபடியால், நாகநந்தியின் முகத்தை யாரும் நன்றாய்ப் பார்க்க முடியவில்லை. பார்க்க முடிந்திருந்தால், அந்தக் கோரமான முகம் அப்போது இன்னும் எவ்வளவு சர்வ கோரமாகியிருக்கிறதென்று அறிந்து பயந்து போயிருப்பார்கள்.

ஆயனர் சிவகாமியைப் பார்த்து "குழந்தாய்! அடிகள் கூறுவது உண்மைதான். வண்டியில் ஏறிக் கொள்! குண்டோதரனிடம் எல்லாம் பிறகு விவரமாய்க் கேட்கலாம்" என்றார்.

சிவகாமியின் உள்ளத்தில் குண்டோதரனைக் கேட்பதற்கு எத்தனையோ கேள்விகள் தோன்றிக் கொண்டிருந்தன. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக அவள் ஒரு கேள்வி கேட்க விரும்பினாள். அதாவது, குண்டோதரனுக்குக் குதிரை எப்படிக் கிடைத்தது? – ஒருவேளை குமார சக்கரவர்த்தியின் கோபம் தணிந்து, தங்களைப் போய்த் திருப்பி அழைத்து வருவதற்காக அவர்தான் குண்டோதரனுக்குக் குதிரை கொடுத்து அனுப்பியிருக்கிறாரோ என்று அவள் மனத்திற்குள்ளே ஒரு சபல நினைவு தோன்றியது.

எனவே "அப்பா! அத்தை வண்டியில் ஏறிக் கொள்ளட்டும்; நான் சற்று நேரம் உங்களுடன் நடந்து வருகிறேன்" என்றாள்.

இருபத்தோராம் அத்தியாயம்

குதிரை கிடைத்த விதம்

அத்தை வண்டியில் ஏறிக் கொண்டதும் வண்டி புறப்பட்டது. மற்றவர்கள் பின்னால் நடந்து சென்றார்கள். குண்டோதரனும் தன் குதிரையின் தலைக்கயிற்றைப் பிடித்து நடத்திக் கொண்டு வந்தான்.

"அப்பா! குண்டோதரனுக்குக் குதிரை எப்படிக் கிடைத்தது? அதைச் சொல்லும்படி கேளுங்கள்!" என்றாள் சிவகாமி.

"குண்டோதரனுக்குக் குதிரை ஏறத் தெரியும் என்றே எனக்குத் தெரியாது, அம்மா! குண்டோதரா, நீ எப்போது குதிரை ஏற்றம் கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டார் ஆயனர்.

"குருவே! உலகத்தைத் துறந்து, காவித் துணி புனைந்த புத்த பிக்ஷுக்கள் கூட இந்த நாளில் குதிரை ஏறுகிறார்களே! இந்தக் குதிரை கூட ஒரு இளம் புத்த பிக்ஷு ஏறிக் கொண்டு வந்ததுதான். குருவே! அந்த இளம் பிக்ஷுவை ஏரியிலே தள்ளி விட்டு நான் குதிரை மேல் ஏறி வந்து விட்டேன்!" என்று குண்டோதரன் கூறிக் கலகலவென்று சிரித்தான்.

குண்டோதரன் சொல்லுவதெல்லாம் நாகநந்திக்குக் கோபம் மூட்டுவதாயிருப்பதைக் கண்ட ஆயனர், "குண்டோதரா! இது என்ன? என் சிஷ்யன் என்று பெயர் வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் செய்யலாமா? கொஞ்சமும் நன்றாயில்லையே?" என்றார்.

சிவகாமி, "அப்பா! குண்டோதரன் அப்படியெல்லாம் ஒன்றும் செய்திருக்க மாட்டான். வேடிக்கைக்காகச் சொல்கிறான்" என்றாள்.

"இல்லை, இல்லை! நிச்சயமாகத்தான் சொல்கிறேன். இங்கேயிருந்து இரண்டு காத தூரத்தில் சாலை ஓரமாக ஒரு ஏரி இருக்கிறதே, நீங்கள் பார்க்கவில்லையா? அந்த ஏரியிலேதான் அந்த இளம் பிக்ஷுவைத் தள்ளினேன்" என்றான் குண்டோதரன்.

நாகநந்தி பெரிதும் கலக்கமடைந்த குரலில், ஆயனருக்கு மட்டும் கேட்கும்படியாக, "சிற்பியாரே! என்ன நடந்தது என்று விவரமாய்க் கேளுங்கள்!" என்றார்.

ஆயனர் அவ்விதமே விவரமாய்ச் சொல்லும்படி கேட்டதன் மேல் குண்டோதரன் சொன்னான்: "உங்களை வீட்டில் காணாமல், 'அடடா! நம்முடைய குரு இப்படி நம்மைக் கைவிட்டு விட்டுப் போய் விட்டாரே!' என்று நான் கவலையுடன் மரத்தடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். பல குதிரைகள் வரும் சப்தம் கேட்டு



விழித்துக்கொண்டு, மரத்தின் மறைவிலிருந்தபடி பார்த்தேன். வந்தவர்கள் அனைவரும் அவசரமாய்த் திரும்பிப் போய் விட்டார்கள். 'அடடா! இவ்வளவு குதிரைகளில் நமக்கு ஒரு குதிரை கிடைத்தால் நமது குருவைப் போய்ப் பிடித்து விடலாமே? கால் நடையாகப் போய்ப் பிடிக்க முடியுமா?' என்று நான் கவலைப்பட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கையில், ஒரு இளம் புத்த பிக்ஷு சற்று தூரத்திலிருந்த இன்னொரு மரத்தடியின் மறைவிலிருந்து வெளியே வந்தார். அந்த வீட்டுக்கு நாகநந்தி அடிகள் வந்திருந்தாரா என்று என்னைக் கேட்டார். அப்போது தாமரைக் குளக்கரையில் இந்த அடிகளைப் பார்த்த நினைவு எனக்கு வந்தது. 'அவர் பெயர் என்னவோ எனக்குத் தெரியாது. ஒரு பிக்ஷுவைத் தாமரைக் குளக்கரையில் கண்டேன்' என்றேன். இளம் பிக்ஷு சற்று யோசித்து விட்டுக் கிளம்பினார். வழித்துணை கிடைத்தது என்ற சந்தோஷத்துடன் நானும் அவருடன் கிளம்பினேன். ஆனால் அந்த இளம் பிக்ஷு என்னை ஏமாற்றி விட்டார். கொஞ்ச தூரம் போனதும் காட்டின் மறைவில் கட்டியிருந்த இந்தக் குதிரை மேல் ஏறிக் கொண்டு, என்னிடம் சொல்லிக் கொள்ளக் கூடச் செய்யாமல் வேகமாகப் போய் விட்டார். ஆகா! யாரை நம்பினாலும் நம்பலாம். புத்த பிக்ஷுக்களை மட்டும் நம்பக் கூடாது! இதோ நம்முடன் வரும் அடிகள் நீங்கலாகச் சொல்கிறேன்'' என்றான் குண்டோதரன்.

ஆயனர், ''குண்டோதரா! பெரியோர்களாகிய புத்த பிக்ஷுக்களைப் பற்றித் தூஷணை சொல்லாதே! பிறகு நீ என்ன செய்தாய் என்று சொல்லு!'' என்றார்.

டாக்டர்: என்னப்பா, வலது கண்ணிலே ப்ளாஸ்திரி போட்டுண்டிருக்கே?

நோயாளி: எனக்கு இடது கண்ணிலே இருக்கும் கோளாறுக்கு ஆபரேஷன் செய்யறதா இன்னிக்கு வரச் சொன்னீங்க. மறதியா நல்லா இருக்கிற வலது கண்ணை ஆபரேஷன் செய்யாம இருக்கணுமேன்னு நானே பாண்டேஜ் போட்டுக்கிட்டு வந்துட்டேன்.''

— எஸ். டி. ரங்கராஜன்.



''நானா? நான் என்ன செய்வது, குருவே! 'நமக்குக் குதிரை இல்லாமற் போனால் போகட்டும்; கடவுள் கொடுத்த இரண்டு கால்கள் இருக்கிறதல்லவா?' என்று எண்ணிக் கொண்டு கிளம்பினேன். இரண்டு நாள் பிரயாணம் செய்ததில் கால் வலி கண்டு இன்று மத்தியானம் ஏரிக் கரையில் சாலை ஓரமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது பாருங்கள், அதே இளம் பிக்ஷு குதிரை மேல் வந்தார். 'அடிகளே! இதென்ன, எனக்கு முன்னால் கிளம்பினீர்கள். பின்னால் வருகிறீர்களே!' என்று கேட்டேன். என்னைப் பார்த்ததில் அவருக்கு அதிக ஆச்சரியமாய்ப் போய் விட்டது. 'ஆமாம், அப்பா! இந்தக் காலத்தில் கால்நடைப் பிரயாணத்தை விடக் குதிரைப் பிரயாணம்தான் அதிக ஆபத்தாயிருக்கிறது. பல்லவ ராஜாங்கம்தான் தரித்திரம் பிடித்த ராஜாங்கமாயிருக்கிறதே? எங்கேயாவது குதிரையைக் கண்டால் யுத்தத்துக்கு வேண்டுமென்று கைப்பற்றிக் கொள்கிறார்களாமே? அதற்காகப் பயந்து பயந்து வர வேண்டியதாயிருந்தது!' என்றார். அப்புறம் பிக்ஷு குதிரை மேலும் நான் கால் நடையாகவும் கொஞ்ச தூரம் வந்தோம். அப்போது பிக்ஷு அடிக்கடி 'தாகமாயிருக்கிறது', 'தாகமாயிருக்கிறது' என்று சொல்லிக் கொண்டே வந்தார். அவர் மேல் எனக்கு மிகவும் பரிதாபம் உண்டாகி விட்டது. 'அடிகளே! இந்தத் திவ்யமான ஏரியில் தண்ணீர் குடித்துத் தாகம் தணித்துக் கொள்ளுங்களேன்!' என்று சொல்லி அவரைக் குதிரை மேலிருந்து ஒரு தள்ளுத் தள்ளினேன். பிக்ஷு ஏரியில் விழுந்தார். அடடா! என்ன ஆனந்தமாக அவர் ஏரித் தண்ணீர் குடித்தார் தெரியுமா....''

இதைக் கேட்ட சிவகாமியினால் சிரிக்காமல் இருக்க முடியவில்லை. ஆயனர், ''அம்மா, இதென்ன அசந்தர்ப்பமான சிரிப்பு?'' என்று அதட்டி விட்டு, ''அட பாவி! அப்புறம் என்னடா செய்தாய்?'' என்று குண்டோதரனைப் பார்த்துக் கேட்டார்.

''குருவே! புத்த பிக்ஷுவுக்குத் தண்ணீர் கொடுத்துத் தாகத்தைத் தணிப்பது பாவமா?'' என்றான் குண்டோதரன்.

''அப்புறம் என்ன செய்தாய், சொல்!'' என்று ஆயனர் மிகவும் கடுமையான குரலில் கேட்டார்.

''என்ன செய்தேனா? பிக்ஷுவுக்கு நீந்தத் தெரியாதென்று தெரிந்ததும் கரையிலே கிடந்த அவருடைய மேல் வஸ்திரத்தை எடுத்து அதன் ஒரு முனையைக் கரையிலிருந்த மரத்தின் வேரில் கட்டினேன். இன்னொரு முனையை அவர் பிடித்துக் கொண்டதும், 'பிக்ஷுவே! மெதுவாகக்

அருள்வாக்கு



அத்ரிஜா என்னும் மலைமகள் இருக்கிறாளே, ஸாக்ஷாத் பார்வதி. அவளுக்குப் பர்த்தாவிடத்தில் பொய்க் கோபம்.

பார்வதி கடுகடுவென்று உட்கார்ந்திருக்கும் போது பரமசிவன் போய் அவள் காலில் விழுகிறார். 'ப்ரணத சிவ' — ப்ரணாமம், நமஸ்காரம் பண்ணுகிறாராம் சிவ பெருமான்.

ஜடாபாரத்தை அம்பாள் பாதத்தில் தடாலென்று அவர் சாய்க்கிற போது அதிலுள்ள பிறைச்சந்திரன் 'குபுக்'கென்று நன்றாக வெளிப்பட்டுப் பிரகாசிக்கிறது.

இந்தத் தருணத்தில் யானைக் குட்டி, ப்ரிய புத்திரன் குறும்பாக விளையாடிக் கொண்டு தன் தலையில் இருக்கும் சந்திரனைத் தும்பிக்கையால் பிடித்திழுக்கிறது என்றால் அந்தப் பரமேச்வரத் தகப்பனாருக்கு எத்தனை சந்தோஷமாக இருக்கும்? கல்பனையாக நினைத்துப் பார்த்தாலும் நமக்கே அந்தக் காட்சியில் ஆனந்தம் பொங்கிக் கொண்டு வரும் போது நேராகத் தாமே அந்த விளையாட்டுக்கு ஆளானவருக்கு, அதுவும் சொந்தப் பிதாவாகவும் இருப்பவருக்கு அப்படியே பூரித்துக் கொண்டு தானே சந்தோஷம் ஏற்பட்டிருக்கும்? சந்த்ர மௌளீச்வரன் என்று தனக்குப் பெரிய பெயர் கொடுத்துள்ள அந்த சிரோ பூஷணத்தைப் பிள்ளை அபகரிக்கப் பார்ப்பதே மகுடாபிஷேகம் செய்விக்கிற மாதிரி அவருக்குப் பேரானந்தத்தைக் கொடுத்து விட்டது.

பிள்ளை சேஷ்டையின் சந்தோஷத்தில் இரண்டு பேருக்குமே தங்கள் சண்டை சமாசாரம் மறந்து போய் விட்டது.

குழந்தை விளையாட்டில் தங்கள் விரோதத்தை மறந்து சிரித்து விடுகிறார்கள். இருவரும் சந்தோஷப்பட்டுக் கொண்டு, ஹ்ருதயம் ரொம்பிச் சிரித்துக் கொண்டு... 'ஹ்ருதய ஸ்மிதாப்யாம்' என்பது ஹ்ருதய பூர்வமாகச் சிரிக்கிற பார்வதி பரமேச்வரர்களைக் குறிப்பிடுவது. வாய் சிரிப்பது மட்டுமில்லை, இவள் போலியாய்க் கோபித்துக் கொண்டிருப்பது. அவர் போலியாய் இவளுக்கு அடிமை மாதிரி நமஸ்காரம் பண்ணுவது — போலியில்லாமல், போலிச் சிரிப்பாய் இல்லாமல், வாய்ச் சிரிப்பாய் மட்டுமில்லாமல், ஹ்ருதயமே மலர்ந்து, அந்த மலர்ச்சியில் வாயாலும் சிரிப்பவர்களாக அவர்கள் ஆகி விடுகிறார்கள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கரையேறி வந்து சேருங்கள்! நான் போகிறேன்!' என்றேன். அப்போது அவர், 'ஐயோ! ஓலை! ஓலை!' என்று அலறினார். 'என்ன ஓலை?' என்று கேட்டேன். 'நாகநந்திக்குக் கொண்டு வந்த ஓலை! கரையிலே கிடக்கிறதா, பார்!' என்றார். கரையிலே பார்த்தேன். ஒரு ஓலை கிடந்தது. அதை எடுத்து அவருக்குக் காட்டி, 'ஓலை பத்திரமாயிருக்கிறது. கவலை வேண்டாம்' என்று சொல்லி விட்டுக் குதிரை மேல் ஏறிக் கொண்டேன். அவ்வளவுதான்; இங்கே வந்து சேர்ந்தேன்'' என்று குண்டோதரன் தன் கதையை முடித்தான்.

குரோதம் நிறைந்த குரலில் நாகநந்தி, ''ஆயனரே! தயவு செய்து உமது சீடனிடமிருந்து ஓலையை வாங்கிக் கொடுங்கள்!'' என்றார்.

ஆயனரும் கலக்கத்துடன், ''குண்டோதரா! என் பெயரைக் கெடுக்கவா நீ என் சீடனானாய்? நல்ல காரியம் செய்தாய்! போகட்டும், இவர்தான் நாகநந்தியடிகள். அந்த ஓலையைக் கொண்டு வந்திருக்கிறாயா? இப்படிக் கொடு!'' என்றார்.

''குருவே! அப்படியா? நான் நினைத்தது நிஜமாய்ப் போயிற்றே? இவர்தானா நாகநந்தியடிகள்! சுவாமி! இதோ ஓலை!'' என்று குண்டோதரன் நாகநந்தியடிகளிடம் ஓலையைக் கொடுத்தான். அதை அவர் மௌனமாக வாங்கிக் கொண்டு சாலை மரங்களின் வழியாக வந்து கொண்டிருந்த நிலாக் கிரணங்களின் உதவியினால் படிக்க முயன்றார். ஆனால் படிக்க முடியவில்லை என்று தெரிந்தது.

பிக்ஷுவின் நடை முன்னைக் காட்டிலும் வேகத்தையடைந்தது. அந்தச் சாலையில் வண்டிச் சப்தத்தையும் குதிரையடிச் சப்தத்தையும் மனிதர் காலடிச் சப்தத்தையும் தவிர, மற்றபடி நிசப்தம் குடிகொண்டது. மனிதரின் பேச்சுச் சப்தம் அடியோடு நின்றது.

(தொடரும்)

கின்னஸ்ஸில் இடம்பெறாத துரதிர்ஷ்டசாலிகள்!

கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம் பெறப் பலர் துடிக்கிறார்கள். ஆனால், எவ்வளவோ பெரிய சாதனைகளைச் செய்துவிட்டுப் பெயர் வெளியே தெரியாமலிருப்பவர்கள் இவர்கள்:



மாமியார் மாணிக்கேஸ்வரி

டிரெஸ்ஸிங் டேபிள் முன் அமர்ந்து அலங்காரம் செய்து கொள்ளும் மருமகளை, மறைந்திருந்து, இடைவிடாது பத்தொன்பது மணி பதினேழு நிமிடம் ஏழு வினாடி கவனித்த மாமியார் மாணிக்கேஸ்வரி அம்மாள்.

கிளைமாக்ஸ் கிருஷ்ணன்

'குஞ்சரி, நீ மஞ்சரி' என்ற தமிழ்ப் படத்தின் கிளைமாக்ஸ் காட்சி படமாக்கப்படுவதற்கு முன்பே மேற்படி படத்தின் காஸெட்டுகள் சிங்கப்பூரிலுள்ள விடியோக் கடைக்கு வந்துவிட்டன. சிங்கப்பூர் கிருஷ்ணன் என்பவர் அவற்றை விற்பனை செய்தார் என்பதைத் தயாரிப்பாளர் அறிந்தார்.

உடனே சிங்கப்பூர் சென்று மேற்படி விடியோ ஒன்றை வாங்கிப் போட்டுப் பார்த்தார். எந்த கிளைமாக்ஸ் தெரியாமல் இவர் திணறிக் கொண்டிருந்தாரோ அந்தக் கிளைமாக்ஸ் அபாரமாக வந்திருந்தது. அதே காட்சியையே தயாரிப்பாளர் தம் படத்தில் புகுத்திப் படத்தையும் ரிலீஸ் செய்துவிட்டார்.

இப்போது விடியோ கம்பெனி கிருஷ்ணன், படத் தயாரிப்பாளர் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்—தங்களது விடியோவிலிருந்து தயாரிப்பாளர் காப்பி அடித்து விட்டாரென்று.





அறுவை நிபுணர் அனந்த்ராஜ்

பிறந்ததிலிருந்து ரஜினிகாந்த் கவரொட்டிகளை மட்டுமே சாப்பிட்டு வந்த ஐந்து வயது எருமை மாடு, தவறுதலாக ஏதோ ஒரு உதிரி நட்சத்திரத்தின் போஸ்டரில் கொஞ்சம் சாப்பிட்டுவிட்ட காரணத்தால் உயிருக்கு அபாயமான நிலையில் கால்நடை மருத்துவமனையில் அட்மிட் செய்யப்பட்டது.

கால்நடை அறுவை நிபுணர் அனந்த்ராஜ் மேற்படி எருமை மாட்டை ஸ்கான் செய்து பார்த்து, உதிரி நட்சத்திரம் சம்பந்தப்பட்ட போஸ்டர் துணுக்குகள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் அறுவை சிகிச்சை மூலம் அகற்றி, எருமை மாட்டைக் காப்பாற்றி விட்டார்.

குறுக்கூர் கண்டக்டர் குப்பணராஜ்

தஞ்சை மாவட்டத்தில் குறுக்கூரிலிருந்து நெடுக்கூர் செல்லும் தனியார் பஸ்ஸில் 57 பேர் கொள்ளக் கூடிய இடத்தில் 257 ஆண், பெண் பயணிகளை எந்தவிதப் பேதமும் பாராட்டாமல் அடைத்து ஏற்றி, அவர்களுக்கு நடுவிலே இடித்துப் புடைத்துப் புகுந்து புறப்பட்டு ஒருத்தர் விடாமல் அத்தனை பேருக்கும் டிக்கெட் கொடுத்து, சில்லறைப் பாக்கியும் சரியாகத் திருப்பித் தந்து, குறிப்பிட்ட நேரத்துக்குள் பஸ்ஸையும் நெடுக்கூரை அடைய வைத்துச் சாதனை புரிந்த கண்டக்டர் குப்பணராஜ்.





மங்களா சாதனம்

டி. வி. யில் அனேகமாக மாலை நேரத்தில் ஏதாவது ஒரு ஒப்பாரி அல்லது அழுகைக் காட்சி எந்த ரூபத்திலாவது இடம் பெற்று விடுவதை மாற்ற, இஞ்சினியர் மங்களா என்பவர் ஒரு சாதனம் கண்டு பிடித்திருக்கிறார்.


இதற்கு 'மங்களா சாதனம்' என்று பெயர். ஒரு பாட்டரி செல்லின் அமைப்பில் இது இருக்கும்.

இதை டி. வி. யுடன் செருகுவதற்கு வசதி உண்டு.

மாலையில் இந்த செல்லை வீட்டிலுள்ள டி. வி. பெட்டியோடு இணைத்துவிட்டால், எந்த இழவுப் பாட்டோ, அழுகையோ டி. வி. யில் வந்தாலும் இந்த அமைப்பு தானியங்கு முறையில் அதை உடனே நிறுத்திவிட்டு, செல்லில் பதிவாகியுள்ள இனிய நாதசுர இசையை ஒலிபரப்பும். (முக்கியமாகச் சுபகாரியங்கள் பற்றிப் பேசும் போது பலரும் டி. வி. யை அணைத்துவிட்டுத் தான் பேசுவார்கள். மங்களாவின் சாதனம் பொருத்தி விட்டால் பயமின்றிப் பேசலாம்.)

நாலாவது மாடி நரசிம்மன்

வி. கே. அபார்ட்மெண்ட்ஸ் என்ற ஒன்பது அடுக்கு மாடிக் கட்டடத்தில் ஏழாவது அடுக்கில் குடியிருக்கும் கிருஷ்ணராவ் தமக்கு வேண்டிய நீரைத் (குழாயில் வராததால்) தரையில் ஒரு டிரம் வைத்து நிரப்பி, மேலேயிருந்து வாளி மூலம் இழுத்துக் கொள்ளும் போது — இடையே நாலாவது பிளாட்டிலுள்ள நரசிம்மன் ஒவ்வொரு தடவையும் நாலு டம்ளர் தண்ணீரை ஒரு சொட்டுத் தண்ணீர் கீழே சிந்தாமலும் மேலே இழுப்பவர் அறியாமலும் அபேஸ் பண்ணி ஒரு வாரத்தில் தன் வீட்டில் ஒரு டிரம் தண்ணீர் ஓசியில் சேர்த்துவிட்டார்.



கற்பனை :
விஜய நிகில்

லாட்டரி லட்சுமணன்

பதினாறு வருஷ காலமாகத் தாம் வாங்கி வந்த (பரிசு பெறாத) அத்தனை லாட்டரிச் சீட்டுக்களையும் ஒன்றைக் கூடக் கிழித்துப் போடாமல் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறார் பரமபதி என்பவர்.

அவற்றைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதற்காக, மாதம் ஆயிரம் ரூபாய் வாடகைக்கு விருகம்பாக்கத்தில் ஒரு கோடவுன் எடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அவர் தமது இரு மனைவிகள், பெற்றோர், ஆறு குழந்தைகள், மூன்று கோழி, இரண்டு ஆடு இவற்றுடன் கோடம்பாக்கத்தில் நாற்பது ரூபாய் வாடகையில் ஒரு சின்னக் குடிசையில்தான் வசிக்கிறார். பழைய சீட்டுகளின் பயன் என்ன என்று கேட்ட போது அவர் சொன்ன பதில்: "பிற்காலத்தில் எந்த ஒரு நேர்மையான அரசாங்கமாவது ஆட்சிக்கு வருமானால், 'இதுவரை பரிசு விழாத லாட்டரிச் சீட்டுகளுக்கெல்லாம் பணம் திருப்பித் தந்துவிடுவோம்' என்று சொல்லக் கூடும். அப்போது இத்தனையும் எனக்குப் பணம் தானே?"



நேற்றுவரை நந்தவனம்

1

மீராவுக்குச் சிரிப்பு வருகிறது. இருந்தாலும் சிரமப்பட்டு அடக்கிக் கொள்கிறாள்.

அது என்னவோ தெரியவில்லை. கல்யாணமான இந்த ஒரு வாரத்துக்குள் — பல விஷயங்கள் அவளுள் சிரிப்பைப் பொங்கச் செய்வதாய்...

சென்னையில் — மாம்பலத்தில் ஏதோ ஒரு நடுத்தர வர்க்கத்துக் கல்யாண மண்டபத்தில் — கீர்த்தியின் கைத்தலம் பற்றினாள். சரியாய் ஏழே நாட்கள்... கொஞ்சமும் பரிச்சயமில்லாத மனிதர்களை நம்பிப் புறப்பட்டு வந்தாயிற்று.

இத்தனைக்கும் கீர்த்திக்கு உத்தியோகம் என்னவோ சென்னையில்தான்.

ஆனாலும் கீர்த்தியின் தாய் கண்டிப்பான தோரணையில் சொல்லி விட்டாள்.

''தஞ்சாவூர்லே எங்க சொந்த வீட்டுல வச்சுதான் சாந்தி முகூர்த்தம் செய்யணும். அதெல்லாம் மேளத்தோட மேளம்; பூவோடப் பூவு. கொட்டோடக் கொட்டுன்னு கல்யாணச் சத்திரத்துலேயே முடிச்சுக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லே..''

''முதல்லே கோவில் பிரார்த்தனை எல்லாத்தையும் நல்லபடியா முடிக்க வேண்டாமா? அதெல்லாம் முடியட்டும். அப்புறம் ஒரு நல்ல நாள் பார்த்து...''

கீர்த்தியின் தாய் மாமனான நாகு, பஞ்சாங்கத்தை எடுத்துக் கொண்டு, ஒரு நாற்காலி பார்த்து, வசதியாய் அமர, கீர்த்தி, அந்தக் கணமே 'பட்'டென வெடித்தான்:

''மாமா... என்னோட ஃபர்ஸ்ட் நைட்டுக்கு நீங்க முகூர்த்தம் தேடினா என்னோட இந்த ஜென்மத்துக்குள்ளே கிடைக்காது. ஆயுக' முழுக்க நான் பிரும்மச்சாரியாவே இருக்க வேண்டியதுதான்...''

இவனது வார்த்தைகள் எந்த விதத்தில் நாகு மாமாவைத் தாக்கியது என்று மீராவுக்கு அப்பொழுது புரியவில்லை.

அவர், பஞ்சாங்கத்தை விசிறி எறிந்து விட்டுக் கல்யாணச் சத்திரத்தின் வாசலுக்குப் போய், வாழை மரத்தோடு மரமாய் நின்று விட்டார்.

''எப்பவுமே உனக்கு வாய் பொல்லாதுடா கீர்த்தி...''

கீர்த்தியின் தாய், மகனிடம் கடுப்படித்து விட்டுத் தம்பியைச் சமாதானப்படுத்த, வாசலைப் பார்க்க ஓடினாள்.

மாமாவின் கோபமும், கீர்த்தியின் சீண்டலும் எதற்காக என்று புரியா விட்டாலும் மீராவுக்குள் சிரிப்பை விசிறி விடுகிறது.

நல்லவேளை...

மீராவின் தாய் பக்கத்தில் இருந்தாள். மகளின் புறங்கையில் 'நறுக்'கெனக் கிள்ளினாள்.

''உஷ்... 'பகபக'ன்னு சிரிக்காதே.''

மீராவுக்கு எல்லாமே புதுசாக இருந்தது.

கீர்த்தியின் தாய் — முகூர்த்தம் முடிவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன் வரையில் ஒன்றுமில்லாத அற்ப விஷயங்களுக்கெல்லாம் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, இடுப்பில் செருகியிருந்த கைக் குட்டையை அடிக்கடி எடுத்துக் கண்ணையும் மூக்கையும் ஒரு சேரத் துடைத்துக் கொண்டிருந்தவள் —

மீராவின் கழுத்தில், மகன் தாலியைக் கட்டியதும் பூசணிப் பூ கணக்காய் மலர்ந்து போனாள்.

ஜானவாசத்தின் போது சாப்பிடக் கூட வராமல் மாப்பிள்ளை வீட்டார் இறங்கியிருந்த பகுதியில் ஏக அமர்க்களம்...

பத்தாவது தடவையாய்ச் சாப்பிட அழைக்கப் போன மீராவின் தம்பி, உதட்டைப் பிதுக்கியபடி வெளியே வந்தான்...

''என்னடா தகராறு?''

''மாப்பிள்ளையோட மாமாவாம்... அவரோட பொண்ணைத்தான் முதல்லே பையனுக்குப் பேசி வச்சிருந்தாங்களாம்... ஆனா, பையனுக்குப் பிடிக்கலே போல இருக்கு.. வேண்டாம்னா விட வேண்டியது தானே. மாமா வந்திருக்கார். பெட்டி படுக்கையைக் கூட இன்னும் கீழே வைக்கலை. 'தை தை'யின்னு குதிச்சுண்டிருக்கார். இந்தக் கல்யாணம் எப்படி நடக்கிறது பாருன்னு அரசியல்வாதி கணக்காச் சவால் விட்டுண்டிருக்கார்..''

மீராவின் தாய் அந்த க்ஷணமே, ஒரு வெள்ளைத் துணியை மஞ்சளில் நனைத்து, அதில் ஒரு ரூபாய்க் காசை முடிந்து வைத்தாள்.

''பகவானே. கல்யாணம் நல்லபடியா முடியட்டும். மீரா அப்பாவை திருப்பதி

அனுராதா ரமணன்



மலைக்கு நடந்து வரச் சொல்றேன்..''

மீராவின் அப்பா, மனைவியைக் கேலி செய்தார்.

''உன்னால முடியாத பிரார்த்தனை எல்லாத்தையும் என் பக்கம் தள்ளி விட்டுடு...''

''பேசாம இருங்கோ. அந்த மனுஷன் — அதான் மாப்பிள்ளையோட மாமா — எதையாவது சொல்லி, நல்ல காரியத்தை நிறுத்திடக் கூடாதேன்னு என் மனசு கிடந்து தவிக்கிறது...''

''இதெல்லாம் சகஜம்மா. ஒருத்தன் பெண் டாட்டியை இன்னொருத்தன் கட்ட முடியுமா.. உன் பொண்ணுக்கு இப்படி மஞ்ச மசேல்னு ஆறடி உசரத்துக்கு சந்தனக் காப்புச் சாத்தின வெங்கடேசப் பெருமான் மாதிரி புருஷன் கிடைக்கணும்னு எழுதி யிருக்கு. நடுவுல மாமாவும், அத்தானும் அடிச்சிட்டு அழறதுனால என்ன லாபம்?''

மீராவுக்கு அப்பாவை நினைத்தால் மட்டும், தொண்டைக்குள் முள் உறுத்த லாய்த் துக்கம் இம்சிக்கும்.

'அப்பா, பாவம்... எங்கேயெல்லாம் கடன் வாங்கியிருக்காரோ...'

'வரதட்சணை இல்லையின்னுதான் பேரு... ஆனா சின்னதும் பெரிசுமா எத்தனை செலவு...'

'அவர்கிட்டே கேட்கணும்... நான் வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சு, அப்பாவுக்குக் கொடுக்கலாமான்னு...'

கல்யாணமானதிலிருந்து நேற்றிரவு வரையில் மீராவுக்கு, கீர்த்தியுடன் தனியா கப் பேச வாய்ப்பே கிடைக்கவில்லை.

எங்கே... கல்யாணச் சத்திரத்தை விடவும், தஞ்சாவூர் வீட்டில் நெருக்கடி அதிகம்.

கீர்த்தியின் அப்பாவுக்குச் சொந்த ஊரை விட்டு விலகி வர விருப்பமில்லை.. அம்மாவுக்கு, பிள்ளையுடன் வந்து இருக்க ஆசைதான்.

ஆனால், குடும்ப பாரம் இன்னும் விட வில்லை. பெரிய வீடு. நிறைய மனிதர்கள். கீர்த்தியின் அப்பாவைப் பெற்ற பாட்டி

ஒருத்தி — திண்ணையோடு ஜடாயு மாதிரி உட்கார்ந்திருக்கிறாள்.

கல்யாணத்துக்குத் தன்னால் வர முடியவில்லையே என்கிற குறை கூழுத்து மட்டும். எழுந்து நடக்க முடியாது. உட்கார்ந்த படியே தரையைத் தேய்த்துத் தேய்த்து நகர்ந்தபடி — வீடு முழுக்க வலம் வந்து விடுவாள்.

மீரா, கீர்த்தியுடன் சேர்ந்து வந்து வணங்கியபோதே தனது இடுங்கிய கண்களை மேலும் இடுக்கிக் கொண்டு கேட்டாள்:

''ஏண்டியம்மா... காதுல போட்டிருக்கிறது வைரம்தானே?''

''ஆமா பாட்டி...''

''எத்தனை காரட்?''

''ஒரு காரட்...''

பாட்டி, ஏதோ அதிசயத்தைக் கேட்டாற் போல, 'சட்'டென வலக் கையால், மணி பர்ஸ் வாயைப் பொத்திக் கொண்டாள்.

''ஒரு காரட்டுக்குக் கூட தோடு கிடைக்கிறதா... அதுதான் இப்படிப் பொத்தான் கல்லு மாதிரி...''

கூடவே ஒரு பெருமூச்சுடன் சொன்னாள்:

''நம்ம நாகு பொண்ணுக்கே ரெண்டு காரட்டுல தோடு போடறதாச் சொன்னான். உம்.. யார், யாருக்கு எது பிராப்தமோ — அதுதானே கிடைக்கும்...''

மீரா, இதையுமே புன்னகையுடன் ஏற்றுக் கொண்டாள்.

மற்ற பெண்கள் மாதிரி — நினைத்தால் கண்ணீர் உகுக்கிற ரகமில்லை அவள்.

கல்லூரியில் படித்திருக்கிறாள். வரதட்சிணை பற்றியும், பெண் விடுதலை பற்றியும் மணிக்கணக்கில் பேசி, மெடல்களும், கோப்பைகளும் பெற்றிருக்கிறாள்.

பெண் பார்க்க வந்தபோதே கீர்த்தி சொன்னான்தான்:

''எங்க வீட்டுல மெம்பர்ஸ் அதிகம். எனக்குக் கீழே ரெண்டு தம்பிங்க... ஒரு தங்கை.. அப்பாவோட கடைசித் தங்கைக்கே போன வருஷம்தான் கல்யாணமாச்சு. அப்பாவைப் பெத்த அம்மா செத்துப் போயாச்சு. ஆனா, அம்மாவுக்கு அம்மா — அதாவது எனக்குக் கொள்ளுப் பாட்டி இருக்கா. தொண்ணூத்தி ரெண்டு வயசுன்னு தோராயமாக் கணக்குப் போட்டுச் சொல்லுவா.. என்ன நீயா சிரிக்கக்கறே..''

''ஒண்ணுமில்லே. சொல்லுங்க..''

''அப்பாவுக்குக் கூடப் பொறந்தவங்க ஆறு பேர். அதுல மூணு பிரதர்ஸ் ஃபேமிலியோட எங்க கூடத்தான் இருக்காப்பல... நீ என் கூட மெட்ராஸ்லேதான் இருக்கப் போறே. ஆனாலும் தஞ்சாவூர் போற சமயத்துல — இவங்களை எல்லாம் அனுசரிச்சுப் போகணும்..''

''எனக்குப் பிடிக்கும்...''

அவள் சின்னக் குரலில் சொன்னது, அவனுக்கு மிகவும் பிடித்திருந்ததாம். திருமணமாகி நாலு நாட்கள் கழித்துச் சொன்னான்.

மொத்தமாய் — ஒரு வேன் வைத்துக் கொண்டு, சமயபுரமும், சுவாமி மலையுமாய்ப் போய் வரும் போதெல்லாம் ஒற்றை மலரெடுத்து, அவளது கன்னத்தில் தட்டுவது போல — பிருதுவாய்ச் சொல்லியிருக்கிறான்.

''உன்னைப் பார்த்ததுமே தீர்மானிச்சுட்டேன். நமக்கு இவதான்னு.. நீ..''

அவள் இதற்கு என்ன சொல்வது என்றே தெரியாமல், புகுந்த வீட்டுக் குழந்தைப் பட்டாளங்களில் எதையாவது ஒன்றைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு, கொஞ்சுவாள்.

அவளுக்குக் கல்யாணமாகி ஏழு நாளாகியும் கூட 'இவன்தான் நமக்கு' என்கிற நினைப்பு இன்னும் பதியவில்லை..

அநேக சமயங்களில் திருமணமானதே— மறந்து போய் விடுகிறது..

யாரோ உறவினர் வீட்டில் வந்து தங்கியிருப்பது போன்ற பிரமை.

கீர்த்தியின் தாயும் — அவளை வேற்று மனுஷியாக நினைக்கவே இல்லை. என்னமோ, காலம் காலமாய் அவளிடம் கேட்டுத்தான் எல்லாவற்றையும் செய்வது போல, சமையல் கட்டுப் பெண்கள் கூட்டத்தில் அவளையும் இழுத்து இழுத்து வைத்துக் கலந்து பேசினாள்.

''மீரா... எப்பவும் அஞ்சு லிட்டர் குக்கர்லே சாதம் வைக்கறது வழக்கம். இப்ப இன்னும் அஞ்சாறு பேர் எக்ஸ்ட்ராவா இருக்காப்பல இருக்கே... ரெண்டு தடவையா அரிசி களைஞ்சு வைக்கட்டுமா?'

மீரா மலைத்துப் போவாள்..

அவள் வீட்டில் மொத்தமே நாலு பேர்... அப்பா, அம்மா, அவள், அவள் தம்பி...

இரண்டு ஆழாக்கு அரிசி போட்டால் நாள் முழுக்கச் சரிபடும். அதிலும் அப்பாவுக்கு அளவு சாப்பாடு.

இங்கே எல்லாமே அதிசயமாய் இருக்கிறது...

கீர்த்தியின் பாட்டியே குழம்பு சாதத்துக்கு மட்டும் கால்படி சாதம் போட்டுக் கொண்டாள்.

நாகு மாமா — விறைத்த மூங்கில் மாதிரி இருந்து கொண்டு, குழம்பு, ரசம் எல்லாவற்றுக்கும் இரண்டு தடவை சாதம் போட்டுக் கொண்டார்..

கீர்த்தியே கூட...

அவள் முதல் தடவை பரிமாறிய போது, அவன் அவளையே வைத்த கண் வாங்காமல் குறு குறுவெனப் பார்த்தான்...

இரண்டு கரண்டி அன்னத்தை, இலையில் போட்டு விட்டு அவள் தயங்க, அவனோ போதுமென்றே சொல்லாமல் அவளையே பார்க்க...

பாதத்துக்கு அடியில் கட்டெறும்பு ஊர்வது போல நெளிந்தாள் மீரா.

பந்தியில் உட்கார்ந்திருந்த கீர்த்தியின் சித்தப்பா இதை ஓரக் கண்ணால் பார்த்த்

படியே குரல் கொடுத்தார்.

''இலையைப் பாருடா. அவளுக்கு இன்னும் உன்னோட சாப்பாட்டு அளவு தெரியாது இல்லையா... மெட்ராஸ் பொண்ணு... ரெண்டு கரண்டிக்கு மேல் சாப்பிடத் தெரியாது... அம்மா மீரா... அவனுக்கு இதெல்லாம் போதாது... தட்டுல இருக்கிறதை அப்படியே சாய்ச்சிடு...''

மீராவுக்கு அப்போதும் கூட அடக்க மாட்டாத சிரிப்புத்தான் வந்தது... அம்மாவை நினைத்துக் கொண்டாள்.

''புகுந்த வீட்டுலப் போய்ச் சத்தம் போட்டுச் சிரிக்காதேடி...''

''சரிம்மா...''

முதல் நாளிரவு... அவர்களுக்குப் பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட முதலிரவு..

அந்த வீட்டின் மாடிப் பகுதியில், பத்தடிக்குப் பத்தடியே அமைந்த சிறு அறையில்...

மீராவுக்கு அப்பா வாங்கித் தந்த கட்டிலும், மெத்தையும் சென்னையிலேயே...

''இந்த ஒரு நாள் கூத்துக்காக, கட்டிலும் மெத்தையும் இங்கே வரணுமா... ஏன், அந்த வீட்டுல இல்லாத கட்டிலா... மெத்தையா...''

சித்தப்பாக்கள் அனைவரும் கட்டில் மெத்தையை விட்டிறங்கி, பத்தமடைப் பாய்க்கு வந்து வெகு காலமாயிற்றாம்.

பரணில் கிடந்த கட்டில்களில் பாதிக்கு மேல் கரையான் அரித்துப் போய்...

கடைசியில் இரவல் கட்டில்.. இரவல் மெத்தை...

அப்பொழுதுதான் கீர்த்தி, அந்த வார்த்தையைச் சொல்கிறான்.

''அப்பா, அம்மா இஷ்டத்துக்காகத்தான் இந்த அரேன்ஜ்மென்ட்ஸ் மீரா... யாரோ உபயோகப்படுத்தற கட்டில், மெத்தையில் நாம, வாழ்க்கையைத் தொடங்க வேண்டாம். மெட்ராசுக்குப் போய் — ஆபீஸ்லே எனக்கு ஒரு பார்ட்டி கொடுக்கறாங்க... அதை முடிச்சிட்டு நேரே பெங்களூர்தான்...''

''......''

''எப்படியும் நம்ம முதலிரவு — பெங்களூர்லேதான். பெங்களூர்லே இருந்து மைசூர் போற வழியில — எங்க ஒண்ணு விட்ட அத்தானோட ஃபார்ம் இருக்கு... பத்து நாளைக்கு அந்த ஏரியாக்குள்ளே மனுஷ வாடையே கூடாதுன்னு சொல்லிட்டேன்...''

தான் சென்னையைக் கூட மிதிக்கப் போவதில்லை என்பதை அறிந்திருந்தால் கீர்த்தி இப்படி பெங்களூர் வரையில் தனது கனவுகளை வளர்த்துக் கொண்டிருக்கவே மாட்டான்.

மீராவும் — பெங்களூர் முதலிரவை எண்ணி இப்படி அநியாயத்துக்கு வெட்கப்பட்டுத் தலைகுனிந்திருக்க மாட்டாள்...

(தொடரும்)

ஜில்லென்று ஒரு ஃபிரிஜ் பரிசு!

தீபாவளிப் பரிசாக ஜில்லென்று ஒரு ஃபிரிஜ் பெற வேண்டுமா? விஷயம் ரொம்பச் சுலபம். ஆனால் சற்றுக் கவனமாக அநுராதா ரமணனின் இந்தத் தொடர்கதையைப் படித்து வர வேண்டும். இதில் ஒவ்வொரு வாரமும் நாங்கள் வேண்டுமென்றே செய்கிற ஒரு தவறைக் கண்டுபிடிக்க வேண்டும்! உதாரணமாக, இந்த இதழில், எதிர்ப் பக்கத்தின் (பக்கம் 40) வலது பத்தியில் கடைசி வரியில் இறுதி வார்த்தையைக் கவனியுங்கள். 'பார்த்து' என்பதற்குப்பதில் 'பார்தத்' என்று அச்சாகியிருக்கிறது. இது வேண்டுமென்றே நாங்கள் செய்த ஒரு எழுத்துப் பிழை. இதுபோல் கருத்துப் பிழை, இலக்கணப் பிழை அல்லது வேறு ஏதோ ஒரு பிழையினை வேண்டுமென்றே நாங்கள் இந்தக் கதையில் புகுத்தி விடுவோம். அதை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். ஒவ்வொரு வாரமும் கல்கியில் இடம் பெறும் கூப்பனில் பிழையையும், திருத்தத்தையும் எழுத வேண்டும். கூப்பனைக் கத்தரித்துப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும். தீபாவளி சமயத்தில் கதை முடியும் போது கூப்பன்களை வரிசையாக ஒரு தாளில் ஒட்டி, கடைசியில் 5 முதல் 10 வரிகளில் கதையின் விமர்சனம் ஒன்றும் எழுத வேண்டும். இந்தத் தாளை உங்கள் விலாசத்துடன் எங்களுக்குத் தபாலில் அனுப்பி வைத்தால், எல்லாத் தவறுகளையும் சரியாகக் கண்டுபிடித்து, சிறந்த விமர்சனமும் எழுதியவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஆறுதல் பரிசுகளும் பத்துப் பேருக்குத் தலா ரூ. 25 உண்டு. இந்த வாரம்தான் தவறு தெரிந்து போய்விட்டதே. எனவே, அடுத்த வாரம் முதல் கூப்பனை எதிர்பாருங்கள்!




புறப்படுங்கள் —
வளமான எதிர்காலம் நோக்கி.



சீட்டுத்தொகை	சந்தாதாரர் பரிசு
1. ரூ 200 x 40 = 8,000	[illegible] டிபன் காரியர்
2. ரூ 250 x 40 = 10,000	5 கிராம் வெள்ளிப் பதக்கம்
3. ரூ 500 x 30 = 15,000	[illegible]
4. ரூ 625 x 40 = 25,000	[illegible]
5. ரூ 500 x 60 = 30,000	[illegible] — டீ செட்
6. ரூ 1,000 x 50 = 50,000	[illegible]
7. ரூ 1,250 x 60 = 75,000	[illegible] 2.5 லிட்டர் குக்கர்
8. ரூ 1,000 x 100 = 1,00,000 ரூ 2,500 x 40 = 1,00,000	[illegible]
9. ரூ 4,000 x 50 = 2,00,000	[illegible] — 2300 [illegible]
10. ரூ 10,000 x 50 = 5,00,000	4 கிராம் தங்கக் காசு
11. ரூ 20,000 x 50 = 10,00,000	8 கிராம் தங்கக் காசு

* நுழைவுக் கட்டணம் தனி.





ஸ்ரீராம் அளிக்கும் சீட்டு விழாக் கோலம்.

பிரகாசமான வருங்காலம்! பயனுள்ள பரிசு!

14-4-1991 அன்று
திறக்கப்படும் புதிய கிளைகள்
மதுரை II, கடலூர்,
சென்னை: திருவல்லிக்கேணி,
அண்ணா நகர் மேற்கு, மேற்கு மாம்பலம்.

இன்று நீங்கள் தெரிந்து கொள்ளும் நாள். ஸ்ரீராம் சீட்டு விழாவில் கலந்து கொள்ளுங்கள். பரிசுப் பெட்டகம் உங்களுக்காகத் திறக்கப்படுகிறது. எண்ணற்ற பரிசுகளின் வரிசை, வளமையான எதிர்காலம் — எல்லாமே உங்களுக்கு.

இன்று கவனத்துக்கு உள்ளாகிறவர் நீங்கள்தான். உங்களுடைய வாய்ப்புகள் எல்லையற்றவை. உங்கள் வருங்காலம் சிறந்தவர்கள் பொறுப்பில். எங்களுக்கு அக்கறை உங்கள் முன்னேற்றத்தில்தான். வாருங்கள். 2,50,000 சந்தாதாரர்கள் கொண்ட இந்த மகத்தான மக்கள் இயக்கத்தின் ஆற்றலை நேரில் தெரிந்து கொள்ளுங்கள். மக்கள் இயக்கத்துடன் இணைந்து நீங்களும் முன்னேறுங்கள்.

ரூ.75,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுப்பவர்களுக்கு, பொதுத்துறை அல்லது தனியார் துறை அல்லது அரசுப் பணி அல்லது அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள் ஆகியவற்றில் பணி புரியும் மூன்று பேர் உத்தரவாதம் அளித்தால் போதுமானது. வேலையிலிருக்கும் பெண்மணி ரூ.15,000 வரையில் உள்ள சீட்டுகளை எடுக்கும்போது அவரின் கணவருடைய உத்தரவாதமே போதும்.

முந்துங்கள். ஸ்ரீராமை நோக்கிய வரிசையில் முதலிடம் பெறுங்கள்.

ஸ்ரீராம் சிட்ஸ் — மகத்தான மக்கள் இயக்கம்.

அறிமுகப்படுத்துவோர் பரிசு
ஸ்ரீபெட் சூட் கிஃப்ட் பேக்
ஏசியன் செண்டர் காஃபி மக் — 4
விட்வேர் பௌல் — மூடியுடன்
பட்டர்ஃப்ளை மேலமைன் சர்வீஸ் பௌல்
மில்டன் ஜெமினி டஃப் ஜக்
ஹால் மார்க் மில்க் கோசர்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சர்வீஸ் பௌல்
மில்டன் கிஃப்ட் பாக்
காளி — மினி டேபிள்வேர் செட்
மில்டன்ஸ் பாஷன் செட்
சுகின் 'மோனோலிசா' ஃப்ளாஸ்க்



ஏப்ரல் 14 அன்று ஸ்ரீராமில் உங்களைச் சந்திக்கலாமா?

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் &
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.
நிர்வாக அலுவலகம்:
"சுப்ரமணியம் பில்டிங்",
1, கிளப் ஹவுஸ் சாலை, சென்னை-2.
தொலைபேசி: 470400/473932/475536/474451.

ADWAVE/SCH/199 TAM A



கார்ட்டூனிஸ்டுகள் பார்வையில் அரசியல் தலைவர்கள்!

சிரிப்புச் சிறப்பிதழுக்காகக் கோபுலு, உமாபதி, ரசனா, செல்லப்பன், அரஸ், மருது, 'ஹிந்து' கேசவ் ஆகிய கார்ட்டுனிஸ்டுகளிடம், ஒவ்வோர் அரசியல் தலைவரின் கேரக்டரும் அவர்களது கார்ட்டுன்களிலேயே பளிச்சென்று தெரியும்படியாகப் போட்டுத் தரச் சொன்னோம். அவர்களும் அப்படியே போட்டுத் தந்திருக்கிறார்கள்......








ரசனா




ஐ! பிக் கீப்!
ஐ! பிக் பிக் மிஸ்சிப்!

இதுவரை நடந்த கதை...

துருவ், அசாதாரணமான ஆற்றல் வாய்ந்த இளைஞன். அற்புதமாக வீணை வாசிப்பான். வெற்றிகளை அணுகும் போது, அவை சுலபமாகக் கிடைப்பதாலேயே ஏமாற்றத்துக்குள்ளாகிச் சோர்வடையும் ஒருவித மனச்சிக்கலுடையவன். அதனாலேயே, தன்னை விரும்பிய சந்தியாவைப் புறக்கணித்து விட்டுப் படிப்பறிவுகூட இல்லாத கோமளா என்கிற ஒரு சாதாரணப் பெண்ணை மணக்கிறான்.

துருவ்வின் அம்மா மஞ்சுளா ஒரு தொழிலதிபர். தனது பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ள முன் வராத மகனின் மனோபாவத்தையறிந்தவள். சன்னானா என்கிற அரசியல் செல்வாக்குள்ள தரகனின் தூண்டுதலால் பினாமி பெயரில் வெளிநாடுகளிலிருந்து பாதுகாப்புத் தளவாடங்கள் வாங்கும் பணியில் ஈடுபடுகிறாள். சன்னானாவின் உறவு புலி மீது சவாரி செய்வது போன்றதென்று தெரிந்தாலும் சன்னானாவின் உறவை முறித்துக் கொள்ள முடியாத சூழ்நிலை மஞ்சுளாவுக்கு.

இதற்கிடையில் சந்தியா, சமுதாயக் குடியிருப்பு ஒன்றை ஆரம்பித்து, அதில் கைவினைஞர்களைக் குடியமர்த்தி, அவர்களது கைவினைப் பொருள்களை விற்பனை செய்து அவர்களுக்கு உதவ எண்ணி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறாள். அவளது தந்தையின் நண்பர் பிரிகேடியர் சாவ்லா அவளது பணிக்காகத் தமது நிலத்தைத் தானமாகத் தர முன்வருகிறார். மறுபுறம் அந்த நிலம், அரசாங்க முதலீட்டோடு ஆரம்பிக்கப்படும் ஒரு பெரிய இரசாயனத் தொழிற்சாலைக்குத் தேவையென்று நெருக்குதல் வருகிறது. சந்தியாவும் சாவ்லாவும் அதைச் சமாளிக்கத் துணிகிற போது, தர்வேஜா என்ற இன்னொரு தரகன் மஞ்சுளாவிடம் வருகிறான். சந்தியா மூலம் சாவ்லாவிடம் சிபாரிசு செய்து, அந்த நிலத்தைத் தொழிற்சாலைக்கு வாங்கித் தந்தால், அந்தத் தொழிற்சாலையில் பதினைந்து சதப் பங்குகளைப் பெற்றுத் தருவதாகக் கூறுகிறான்.

14

ஆகாசத் தாமரை

சிவப்பு 'சிக்னலி'ல் சந்தியா காரை நிறுத்தினாள். அப்பொழுது அவள் இடக் கைப் பக்கமாக ஒரு மாருதி அவளைக் கடந்து, 'சிக்னலை'ப் பொருட்படுத்தாமல் தாண்டிச் சென்றது. சந்தியாவின் முகம் சிவந்தது. இப்படித்தான் இந்த நாட்டில் சமூக வாழ்வு நடந்து வருகிறது. தடியெடுத்தவன் தண்டல்காரன்!

அவள் பத்து நாட்கள் சண்டிகருக்குப் போகும்படியாக இருந்தது. தீவிரவாதிகளை வேட்டையாடுகின்றோமென்று போலீஸார் அவர்களுக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தனர். சந்தியாவின் தோழி ப்ரீதம் கௌரின் சகோதரனுக்கு அரசியலிலே ஈடுபாடு கிடையாது. ஆனால் நியாயத்துக்காகப் போராடத் தயங்க மாட்டான். அவன் பதினாறாம் செக்டாரில் ஒரு புத்தகக் கடை வைத்திருந்தான். அவனைக் கைது செய்து, 'தீவிரவாதிகளுக்கு உதவுகின்றவன்' என்ற பட்டம் கட்டி விட்டார்கள்.

சந்தியா, ப்ரீதம் கௌரோடு சண்டிகருக்குப் போய், அங்கு போலீஸ் சூப்பிரென்டன்டாக இருந்த அவளுக்குத் தெரிந்த தமிழ் ஆஃபீஸரொருவரைப் பார்த்துப் பேசினாள். 'பெரிய இடத்து விவகாரம்' என்று அவர் ஒதுங்கி விட்டார்.

கோர்ட்டில் வழக்குத் தொடுக்கும்படியாக ஏற்பட்டது. நிச்சயமாக, அவன் சிறையிலிருந்து வெளிவரும்போது தீவிரவாதியாகத்தான் திரும்புவான் என்று சந்தியாவுக்குத் தோன்றிற்று.

இந்தப் பத்து நாட்களில் தில்லியில் காரியங்கள் மிகத் துரிதமாக நடந்தேறி இருக்கின்றன. இரசாயனத் தொழிற்சாலை உருவாவதென்பது உறுதியாகி விட்டது. சுற்றுப்புறச் சூழ்நிலை சுகாதார இயக்கவாதிகளின் எதிர்ப்பு எடுபடவில்லை.

சாவ்லாவுக்கு, அரசாங்க ஆசியுடன் பல விதமான தொந்தரவுகளைக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் சாவ்லா தமக்குச் சொந்தமான இடத்தை விற்பதில்லையென்று பிடிவாதமாக இருக்கிறார்.

மஞ்சுளாவுக்கும் இத் தொழிற்சாலையில் பங்கு இருக்கின்றதென்பதுதான் அவளுக்கு அதிர்ச்சியைத் தந்தது. அவள் பத்து நாட்களுக்கு முன்பு மஞ்சுளாவைப் பார்த்திருந்தால், நிலைமை வேறு மாதிரியாக இருந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. இப்பொழுது அவள் மஞ்சுளாவைத்தான் பார்க்கப் போய்க் கொண்டிருக்கிறாள்.

'பச்சை' தோன்றி வழி விட்டது.

அவள் ஃபோன் செய்த போது, அது ஒலித்துக் கொண்டே இருந்தது. யாரும் எடுக்கவில்லை. வீட்டில் யாருமேயில்லையா? சாத்தியமில்லை.

ஃபோன் கெட்டுப் போயிருக்கலாம். இப்பொழுது தில்லியில் பாதி ஃபோன்களுக்கு மேல் 'மரண லிஸ்டி'ல்தானிருக்கின்றன.

தில்லி, 'ரியல் எஸ்டேட்'காரர்களின் சொர்க்கம் என்பதற்கு 'டிஃபென்ஸ் காலனி' ஓர் உதாரணம். இந்திய ராணுவத்தில் பணிபுரியும், பாகிஸ்தானிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்காக மிக மலிவான



விலையில் கொடுக்கப்பட்ட இடங்கள் எப்படி 'ரியல் எஸ்டேட்'காரர்கள் கைக்குப் போய், இப்பொழுது மஞ்சுளாவைப் போன்ற பெரும் பணக்காரர்கள் வசிக்கும் இடமாக அது மாறி விட்டதென்பதைப் பற்றி, அரசியல்வாதிகளைத்தான் கேட்க வேண்டும். அரசியல்வாதிகள் அரசாங்க அதிகாரிகள், 'ரியல் எஸ்டேட்'காரர்கள் ஆகியவர்களின் 'கூட்டு முயற்சி'யின் விளைவுதான் இன்றைய 'சௌத் டெல்லி'. கோடிக்கணக்கான கறுப்புப் பணம் பல மாடிக் கட்டடங்களாய் விண்ணளாவி நிற்கின்றன.

சந்தியா மஞ்சுளா வீட்டு வாசல் மணியை அழுத்தினாள். உத்தம் சிங் கதவைத் திறந்தான்.

''ஆயியே...'' என்றான் அவன் சந்தோஷத்துடன்.

சந்தியா உள்ளே சென்றாள்.

''மெம் ஸாஹேப் இல்லையா?'' என்றாள் மஞ்சுளா.

''இல்லை... பஹு'' இருக்கிறார்கள்.''

இதற்குள் 'பஹு''வே வந்து விட்டாள். இவள் பெயர் என்ன? சந்தியாவுக்கு மறந்து போய் விட்டது.

அழகான பெண்தான். முகத்தில் குழந்தைத்தனம் குடிகொண்டிருந்தது. நல்ல வளர்த்தியான சரீரம்.

''என் பேர் சந்தியா. உங்க பேர்....?'' என்றாள் சந்தியா புன்னகையுடன்.

''கோமளா...''

சந்தியா சோபாவில் உட்கார்ந்தாள். கோமளா நின்று கொண்டிருந்தாள்.

''உட்காருங்க...'' என்றாள் சந்தியா. பிறகு சிரித்துக் கொண்டே, ''உங்க வீட்டுக்கு வந்து நான் உங்களை உபசாரம் பண்றேன்'' என்றாள்.

கோமளா உட்கார்ந்தாள்.

''என்ன குடிக்கறீங்க, டீ, காப்பி?'' என்று கேட்டான் உத்தம் சிங்.

''ஒன்றும் வேண்டாம்...''

உத்தம் சிங் போய் விட்டான். சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது.

''அம்மா வர நேரமாகுமா?'' என்று கேட்டாள் சந்தியா.

''தெரியலே. சில நாளைக்கு எப்பொ வர்றார்னு கூட எனக்குத் தெரியாது. இப்பொ நிறைய்ய வேலை இருக்கு போலிருக்கு...''

''உங்க ஆத்துக்காரர் சௌக்கியமா?''

கீழே குனிந்து கொண்டே அவள் தலையை ஆட்டினாள்.

''உங்களுக்குப் பாடத் தெரியுமா?''

''தெரியாது.''

சில விநாடிகள் மௌனம்.

''சங்கீதத்திலே விருப்பமுண்டு, இல்லையா?''

கோமளா பதில் சொல்லவில்லை.

இந்திரா பார்த்தசாரதி

''உனக்கு எதிலே விருப்பம்?''

''காப்பி குடியுங்களேன், போட்டுண்டு வரேன்.''

''வேணாம்மா... இப்பத்தான் குடிச்சிட்டு வரேன். உங்க ஆத்துக்காரரையும் மஞ்சுளா மாமியையும் எனக்கு நன்னாத் தெரியும்.''

''நீங்க ஏன் அவரைக் கல்யாணம் பண்ணிக்கலே?''

ஒளிவு மறைவில்லாமல் நேரடியாகக் கேட்கப்பட்ட இக் கேள்வி சந்தியாவைத் திடுக்கிட வைத்தது. அவள் இதை எதிர் பார்க்கவில்லை.

''யாரை?''

''யாரைன்னு உங்களுக்குத் தெரியும். நீங்க பண்ணிண்டிருந்தேள்னா எனக்கு நிம்மதியா இருந்திருக்கும்.''

''என்ன சொல்றீங்க?''

''எல்லாம் எனக்குத் தெரியும். நீங்களும் படிச்சவர், அவரும் படிச்சவர். பொருத்தமா இருந்திருக்கும். படிப்பு வாசனையே இல்லாத என்னோட அவர் எப்படிச் சந்தோஷமா இருக்க முடியும்? எனக்கு சங்கீத ரஸனையும் கிடையாது. அவரே எனக்குச் சங்கீதம் வராதுன்னும் சொல்லிட்டார். முதல்லே நீங்க ரெண்டு பேருந்தான் கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தேளாம். நின்னு போச்சாம். என்னோட அவர் எப்படிச் சந்தோஷமா இருக்க முடியும். சொல்லுங்கோ, சொல்லுங்கோ...''

கோமளா சந்தியாவின் கைகளைப் பற்றிக் கொண்டு அழத் தொடங்கி விட்டாள்.

சந்தியாவுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவள் கோமளாவையே சிறிது நேரம் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். குழந்தைதான், சந்தேகமில்லை.

''துருவ்னாலே யாரோடும் சந்தோஷமா இருக்க முடியாது... இது உன் தப்பில்லே. துருவ் தப்பு. துருவ் கல்யாணமே பண்ணிண்டிருக்கக் கூடாது...'' என்றாள் சந்தியா.

கோமளா அவளை ஏறிட்டு நோக்கினாள்.

''இது தெரிஞ்சுதான் நீங்க அவரைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னுட்டேளா?''

''நான் அப்படிச் சொல்லலே. துருவ் என்னைக் கேக்கலே... கேட்டிருந்தா நான் என்ன சொல்லியிருப்பேன்னு எனக்குத் தெரியாது. இந்த விஷயத்திலே ரெண்டு பேரும் 'கண்ணாமூச்சி' விளையாட்டு விளையாடினோம்னுதான் தோணறது. நல்லவேளை, ரெண்டு பேரும் ஒருத்தரை யொருத்தர் கண்டுபிடிக்கலே...''

'நல்ல வேளை' என்று சொல்லியிருக்க வேண்டாம் என்று சந்தியாவுக்குப்பட்டது. அவளுக்கு 'நல்லவேளை'தான். ஆனால் இந்தப் பெண்ணுக்கு?

துருவ்வோடு இவள் சந்தோஷமாக இல்லை என்று வெளிப்படையாகவே தெரிகிறது. பணம் தருகின்ற சலுகைகளை வைத்துக் கொண்டு தன் விருப்பப்படி சந்தோஷமாக இருக்கலாமென்று நினைக்கும் ரகத்தைச் சேர்ந்த பெண்ணாக இவள் தோன்றவில்லை.

கோமளா அழுது கொண்டிருந்தாள்.

''மஞ்சுளா மாமிக்கு உங்கள் பிரச்னை தெரியுமா?'' என்று கேட்டாள் சந்தியா சிறிது நேரம் கழித்து.

''தெரியும்'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டே பதில் சொன்னாள் கோமளா.

''மாமி என்ன சொல்றார்?''

கோமளா பதில் சொல்லவில்லை. கண்களை மூடிக் கொண்டாள்.

''நான் உங்களை ஒண்ணு கேக்கலாமா?'' என்று கேட்டாள் சந்தியா.

'என்ன?' என்பது போல் தலையைச் சாய்த்து அவளைப் பார்த்தாள் கோமளா.

''கேக்கலாமா?''

''கேளுங்கோ... உங்ககிட்டேதான் எனக்குப் பேசலாம் போலிருக்கு...''

''துருவ் உங்ககிட்டே பேசறதேயில்லையா?''

''இல்லே...''

'பேசறது'ன்னா, நான் எல்லா விஷயத்திலியுந்தான் சொல்றேன். புரியறதா?''

''புரியறது... இல்லே.''

சந்தியா திடுக்கிட்டாள். எதற்காகக் கல்யாணம் செய்து கொண்டான்? ஒரு பெண் கன்னி கழியாமல் வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டுமென்பதற்காகவா?

''நீங்கள் அவர் மனைவி. உங்களுக்குன்னு சில அடிப்படையான உரிமைகள் இருக்கு. நீங்கள் ஏன் அவர்கிட்டே இதைப் பத்திக் கேட்கலே?''

கோமளா சற்றுத் திடுக்கிட்ட நிலையில் சந்தியாவை நோக்கினாள்.

''ஏம்மா கேக்கலே?'' என்றாள் சந்தியா மீண்டும்.

''என்ன சொல்றேள் நீங்க? நான் இதைப் போய் அவர்கிட்டே எப்படிக் கேக்க முடியும்? என்னைப் பத்தி அவர் 'இன்னும் கேவலமா நினைச்சுக்க மாட்டாரா?''

சந்தியாவுக்கு அவளுடைய அடக்கத்தையும் பாமரத்தனத்தையும் எண்ணி அவள் மீது பரிதாபம் உண்டாயிற்று.

''துருவ் எங்கே?''

''மாடிலேருக்கார்.''

''நான் போய்ப் பாக்கறேன்...''

சந்தியா வேகமாக மாடிக்குச் சென்றாள்.


பீத்தோவனின் ஆறாவது ஸிம்ஃபனி. எஃப் மேஜர். இவ்வளவு அற்புதமாக நாடோடிப் பாடல் மரபில், வீணையில், இவனால் எப்படி இந்த மேற்கத்திய இசையை வாசிக்க முடிகிறது? சில விநாடிகள் மயங்கி நின்ற சந்தியா தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

மேதையாக இருப்பதற்கு, மனிதாபிமானத்தை விலையாகத் தர வேண்டுமென்ற அவசியமில்லை.

ஒன்றுமறியா, ஓர் ஏழைப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு, அவளை இப்படி நடத்துவதற்கு இவனுக்கு எந்த

அடுத்த இதழில்...

●● சந்திரசேகரின் எதிர்காலம் என்ன? — ஓர் அலசல்



உரிமையும் கிடையாது.

அவள் அறைக் கதவை லேசாகத் தட்டினாள். இசை நின்றது.

துருவ் மிகுந்த கோபத்துடன் கதவைத் திறந்தான்.

''ஹூ தி ஹெல்...?''

சந்தியாவைப் பார்த்து வியப்படைந்து பேசாமல் நின்றான்.

''ஐ ஆம் ஸாரி...''

''கம் இன்.''

அவள் உள்ளே போய் உட்காரப் போனவள், உட்காராமல், கைகளை முன்புறமாகக் கட்டிக் கொண்டு நின்றாள்.

''உங்களை ஒண்ணு கேக்கலாம்னு வந்தேன்'' என்றாள் சந்தியா.

''என்ன?''

''நீங்க எதுக்காகக் கல்யாணம் பண்ணிண்டீங்க?''

''இது ரொம்ப ஒரு 'பர்சனல்' கேள்வியா உனக்குப் படலே?''

''இல்லே... இதிலே இன்னொரு பெண் சம்பந்தப்பட்டிருக்கா... என் இனம்!''

''எனக்கு ஆச்சர்யமா இருக்கு. ஐ தாட் யு ஆர் எ வெரி ரிஸ்பெக்ட் பர்ஸன்.''

''நீங்க ரிஸ்பெக்ட் பர்ஸனா நடத்துண்டிருக்கீங்களா? கோமளாவிடம் இப்படி நடந்துக்க உங்களுக்கு உரிமையே இல்லே... இப்போ புரிஞ்சுதா? வொய் தி ஹெல் டிட் யு மாரி ஹர்? கல்யாணம் பண்ணிண்டுட்டு, அவளோட வாழ்க்கையை வீணடிக்க உங்களுக்கு என்ன உரிமை இருக்கு?''

''நான் வீணடிக்கலே. அவ விருப்பப்படி இருக்கலாம்னு அவகிட்டே நான் சொல்லியாச்சு.''

''இதைச் சொல்ல உங்களுக்கு வெட்கமா இல்லே?''

''என்ன வெட்கம்? ஐ ஆம் ஸைலண்ட்... அவளை அன்னிக்கு முதல்லே பார்த்த போது, 'கல்யாணம் பண்ணிக்கிறேன்'னு ஏன் சொன்னேன்னு எனக்கு இன்னும் புரியலே... சில சமயங்கள்ளே, சில விஷயங்கள் நம்மை அறியாமெ ரொம்ப வேகமா நடந்துடறது. இதை 'விதி'ன்னு சொல்லலாமா, தெரியலே எனக்கு... நடந்தது நடந்து போச்சு. 'டிவோர்ஸ்' பண்ணணும்னாலும் பண்ணிக்கலாம். ஆனா, அவ மாட்டேங்கிறா. டிபிகல் லோயர் மிடில் கிளாஸ் ஆட்டிட்யூட்.''

''உங்களை எப்படியெல்லாம் திட்டலாம்னு எனக்குத் தோணறது தெரியுமா?'' என்றாள் சந்தியா மிகுந்த சினத்துடன்.

''நான் செய்யறது எதுவும் எனக்குத் தப்பாப் படலே.''

''இதுதான் உங்க பிரச்னை, உங்க 'ட்ராஜெடி'.''

''நாம எல்லாருமே 'ட்ராஜிக் காரெக்டர்ஸ்'தான். எங்கம்மா தன்னைச் சுத்தி வலைக்கு மேலே வலையாப் பின்னிண்டு, எதுக்காகப் பின்னிண்டோம்னு தெரியாமெ கஷ்டப்படறாளே, அது உனக்கு 'ட்ராஜிக்.'காத் தோணலே? நீ ஏதோ வார்த்தைகளை வச்சு விளையாடிண்டு, மனித சமுதாயத்தைச் சீர்திருத்தப் போறதா உன்னையே நீ ஏமாத்திண்டு அலையறியே, இது உனக்கு 'ட்ராஜிக்'கா படலே...?''

''நோ... யு ஆர் ராங். எனக்கு 'கன்விக்ஷன்' இருக்கு... எனக்கு என்ன வேணும்னு எனக்குத் தெரியும். ஆகாசத் தாமரையைத் தேடிண்டு அலையலே... தாமரை பூமியில்தான் இருக்கு. அது சேத்திலேதான் முளைக்கும். சேறுங்கிறது நாம இல்லே'ன்னு நினைச்சுண்டா இல்லாமெ போயிடாதுன்னும் எனக்குத் தெரியும். வாழ்க்கையை நேருக்கு நேர் சந்திக்க இதுதான் ஆரம்பப் பாடம்.''

அவன் சிறிது நேரம் பேசாமல் நின்றான். அவள் சொன்னவற்றை அவன் ஜீரணிக்க முயல்வது போல் தோன்றிற்று.

''அந்தப் பெண் உன்கிட்டே என்ன சொன்னா?'' என்றான் துருவ்.

''அவ ஒண்ணும் சொல்லலே... அவ என்னைப் பார்த்ததும் அழுதா. வார்த்தையைக் காட்டிலும் கண்ணீர்தான் நாணயமான பாஷை. எனக்கு எல்லாம் புரிஞ்சுடுத்து. ஏன்னா எனக்கு உங்களை நன்னாத் தெரியும்.''

''நான் இப்போ என்ன செய்யணும்னு நீ நினைக்கிறே?''

''நீங்க ரெண்டு பேரும் 'கணவன் — மனைவியா' அதனோட முழு அர்த்தத்திலே இருக்கணும். இல்லாட்டா...''

அவள் மேலே தொடராமல் நிறுத்தினாள்.

''இல்லாட்டா?''

''கோமளாவை அவ வீட்டுக்கு அனுப்பிச்சுடுங்க. அங்கேதான் அவளாலே சந்தோஷமா இருக்க முடியும். இந்த வீடு அவளுக்கு ஒரு சிறை.''

துருவ் மௌனமாக நின்றான்.

(தொடரும்)

கலகலப்பான மனிதன்

என்று பெயரெடுக்க வேண்டுமா?

அமெரிக்க மாநிலமான ஜியார்ஜியாவிலுள்ள, எமரி பல்கலைக் கழகத்தில், நகைச்சுவையை ஒரு பாடமாகவே போதிக்கிறார்கள்.

மனச்சோர்வு, டென்ஷன் என்கிற பரபரப்பு இவற்றை, நகைச்சுவை உணர்வு இருந்தால் எளிதாக வெற்றி கொள்ளலாம். ஏமாற்றங்களை மறக்க நகைச்சுவையைப் போல நல்ல மருந்து வேறு கிடையாது!

பிரச்னையில் சிக்கிக் கொண்டு, விடுபட வழி தெரியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் கூட, நகைச்சுவை கைகொடுக்கும். பிரச்னையைத் தீர்க்க ஒரே வழியில் சிந்தித்துச் சிந்தித்து பயன்படாத நிலையில், நகைச்சுவை உதவுவது போல் வேறு எதுவும் உதவாது. பயனில்லாத வீண் யோசனைகளை அது உடைத்துப் போட்டு பிரச்னையைத் தீர்க்கப் புதிய கோணத்தில் சிந்திக்கச் செய்யும்.

உங்கள் பர்சனாலிடியையே நகைச்சுவை உணர்வு மாற்றி விடும். உம்மணா மூஞ்சியாக இராமல், கலகலப்பாக இருந்தால் போதும். ''ஐயோ, என்னால் ஜோக் எல்லாம் அடிக்க முடியாது!'' என்று கையைக் காலை உதற வேண்டாம். அவ்வப்போது படிக்கிற ஜோக்குகளை நினைவுக்குக் கொண்டு வர முயலுங்கள். சொந்த வாழ்க்கை நிகழ்ச்சியிலிருந்து பொருத்தமானதை, சற்றே நகைச்சுவை கலந்து சொல்லிப் பாருங்கள்.

'சிரிப்பார்களோ, மாட்டார்களோ?' என்று யோசித்துத் தயங்காமல் ஜோக் அடியுங்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் எதிர்ப்பு இருக்கும். கிண்டலை எதிர்கொள்ள நேரிடும். போகப் போக நீங்கள் எதைச் சொன்னாலும் சிரிக்கும் நிலை தோன்றி விடும்!

இரண்டு பெண்களுக்குத் தகப்பனாரான ஒருவர், தமது மூத்த மகள் கல்யாணத்தை நடத்திய சத்திரம், தண்ணீர் வசதியே இல்லாதது. தவித்துப் போய் விட்டார். அவர் நண்பரோ சளைக்கவில்லை. 'கிணறு இருக்கிறதா?' என்று கேட்டார். ஆழத்தில் தண்ணீருடன் கிணறு இருந்தது. மளமளவென்று அண்டா, குண்டா, டிரம் என்று இருக்கிற பாத்திரங்களில் எல்லாம் மாங்கு மாங்கென்று தண்ணீர் இறைத்து, நிரப்பினார். ''ராமசாமி, தண்ணீர் தாராளமாக இருக்கிறது. உன்னுடைய இன்னொரு பெண்ணுக்கும் இந்த முகூர்த்தத்திலேயே கல்யாணம் பண்ணு



வதானாலும் சரி!'' என்றார். அந்தச் சமயத்தில் அங்கே இருந்த அத்தனை பேரும் குபீரென்று சிரித்து விட்டார்கள். சந்தர்ப்பச் சூழ்நிலை சிரிப்புக்குச் சாதகமாக அமைகிறது.

ஒரு ரெஸ்டாரன்ட்டில், ரேடியோவில் கிரிக்கெட் கமென்ட்ரி கேட்கலாமென்று நண்பர்கள் இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டு காப்பிக்கு ஆர்டர் செய்த கையோடு, சர்வரிடம், 'அந்த ரேடியோவைக் கொஞ்சம் வையப்பா!' என்றார்கள். சர்வர் அதைக் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை. முதலாளி வந்து, 'சொல்லி விட்டீர்களா?' என்று கேட்டார். (அதாவது, என்ன வேண்டுமென்று). நண்பர் சொன்னார்: 'சொல்லி விட்டோம். கேட்கவில்லை!' சுற்றி இருந்தவர்கள் அப்படியே சிரித்து விட்டார்கள்.

இப்படி வார்த்தை ஜாலங்களின் மூலம், வித்தியாசமாகச் சொல்லுவதன் மூலம், நகைச்சுவையைக் கொண்டு வர முடியும். முயன்று பாருங்கள். உதாரணமாக —



மனிதன் சூரிய உதயத்தைப் பார்க்க வேண்டும் என்று கடவுள் நினைத்திருந்தால், அதை இப்படி அதிகாலையில் அல்லாமல், பிற்பகலுக்கு அப்புறம் வரச் செய்திருப்பார்!'' என்று காலையில் நேரங்கழித்து எழுபவர்களைக் கிண்டலடிக்கலாம்.

சிரமமான நிலையிலும் ஜோக் அடிப்பார்கள் சிலர். நோயாளி எளிதாக மூச்சு விட, ஓர் இயந்திரத்தைப் பொருத்தினார் டாக்டர். ''ஒரு மெஷினுடன் உன்னை இணைத்திருக்கிறேன்!'' என்றார் டாக்டர். தப்பு டாக்டர். என்னுடன்தான் மெஷினை இணைத்திருக்கிறீர்கள்!'' என்று கிண்டலாகச் சொன்னார் நோயாளி.

நகைச்சுவை நீங்கள் ரிலாக்ஸ் செய்ய உதவும். மனைவியை இழந்த, வயதான பள்ளி ஆசிரியர், தமது குழந்தைகளுடன் மாமியார் வீட்டிலேயே வசித்து வந்தார். அவருக்கு ஒரு தடவை கூடுதலான இன்க்ரிமென்ட் வந்ததும், நண்பர்கள் அவரைப் பாராட்டினார்கள். அவரோ கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல், ''எனக்கு என்ன லாபம்! என் மாமியாருக்கல்லவா லாபம்!'' என்றார்.

நிறையக் குட்டிக் கதைகள் சேர்த்து வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றாய், சமயத்துக்குத் தகுந்தாற் போல் அவிழ்த்து விட! ஒரு விவசாயி, ஒரு டாக்டர், ஒரு இஞ்சினியர், ஒரு அரசியல்வாதி ஆகிய நால்வரும், யார் தங்கள் தொழிலை முதலில் ஆரம்பித்தார்கள் என்று சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். பார்த்தார் அரசியல்வாதி. ''பைபிளைப் பாருங்கள். என்ன படிக்கிறோம்? ஆரம்பத்தில், உலகில் எல்லாமே ஒரே குழப்பமாக இருந்தது என்றுதானே? இதற்கு யார் காரணம் என்று நினைக்கிறீர்கள்?'' என்று தம் வாதத்தைச் சொன்னாரோ இல்லையோ...''

இப்படி, கூட்டம் குபீரென்று சிரிக்கும்படியான குட்டிக் கதைகள் நிறையச் சேகரித்து வையுங்கள். நீங்கள் பரிசைத் தட்டிச் செல்லும் வேக ஆட்டக்காரராகவோ, பிறர் கவனத்தை ஈர்க்கும் அழகியாகவோ இருக்கத் தேவை இல்லை — உங்களிடம் அபாரமான நகைச்சுவை உணர்வு மட்டும் இருந்து விட்டால் போதும். சதா உங்களைச் சுற்றி நாலு பேர் இருப்பார்கள்!

ஊழியர்களிடம் சகஜமாய் இருக்க நகைச்சுவை பெரிதும் உதவும். வேலை வாங்கவும், ஏன் — நாசூக்காய்க் குத்திக் காட்டவும் கூட!

ஓர் ஊழியர் போன் பண்ணி, அன்றைக்கு லீவு வேண்டும் என்று கேட்டார். மானேஜர், ''நேற்றுக் கூட நீ வரவில்லை போலிருக்கிறது?'' என்றார். ''நேற்று வந்தேன் சார். இன்றுதான் வர இயலாது.'' ''அதில் பெரிய வித்தியாசம் எதுவும் இல்லை. எடுத்துக் கொள்!'' என்றார் மானேஜர்.

— சித்தார்த்

ஆதாரம்: 'ஸ்மைல் கனெக்ஷன்.'

கார்ட்டூன்களைக் கட்அவுட் வைக்கலாம்!

* பெருமைக்கும், பொது மக்களின் நம்பிக்கைக்கும் உரிய நீதித் துறைக்கு ஜஸ்டிஸ் ராமசாமியின் விவகாரம் ஒரு பெரும் சோதனையே! கவலைக்குரிய விஷயத்தை கவனத்துடன் உணர்த்தியது கல்கியின் தலையங்கக் கருத்து.

கொணவட்டம், கே.ஆர். தேவேந்திரன்.

* இந்த வாரத் தலையங்கத்துக் காகத் தங்களுக்கு என்ன பரிசு வேண்டுமானாலும் தரலாம்.

மதுரை — 9. இரா. கல்யாண சுந்தரம்.

* முதல் கார்ட்டூனையும் மூன்றாவது கார்ட்டூனையும் தமிழகப் பொது மக்கள் சார்பாக எவராவது பெரிய பெரிய கட் அவுட்களாக வைத்து மக்களை விழிப்புறச் செய்வார்களா?

சோழபுரம். பாரதி.

* பாரதி சந்திரனின் 'உனக்குள்ளே முத்துக்கள்' கவிதையில் ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு முத்தாக ஜொலிக்கிறது.

ஸ்ரீமுஷ்ணம். சா. கிருஷ்ணசாமி.

* 'கொடை வள்ளல் கொய்யாத் தோப்பு கோவிந்து' கட்டுரையைப் படித்து வயிறு வலிக்கச் சிரித்தேன்.

திருப்பரங்குன்றம். டி.கே. சுப்பிரமணியன்.

* விஷ்ராமின் அரசியல் அகராதியைப் படித்தது முதல் பல கட்சிகளின் ஒன்றியம்,வட்டம்,மாவட்டம் முதலியோர் தங்கள் பெயருக்கு முன்னால் பொருத்தமாக என்ன பட்டம் போட்டுக் கொள்ளலாம் என்று யோசித்து வருவதாகக் கேள்வி!....

குத்தாலம். — 1.

குத்தாலம் அபிதா.

* 'புது நெல்லு புது நாத்து' படத்தை ஒரு பக்கத்திற்கு விமர்சித்ததை விட, 'டாக்குமெண்டரி' படம் என்ற ஒரே-வரியில் அருமையாக அழுத்தமாக விமர்சித்து விட்டீரே, சபாஷ்!

அரவக்குறிச்சிப்பட்டி.

எம். அசோக்ராஜா.

வட்டமேஜை

* பு. நெ. பு. நா. கதை படுபழசு என்றாலும் வே ஆஃப் பிரசன்டேஷன் வித்தியாசமானது என்பதை ஒப்புக் கொண்டீரே நன்றி! கல்வியின் அவசியத்தையும் ஊடே வலியுறுத்தியிருப்பதை ஒரே ஒரு வரி சொல்லியிருக்கலாம்! இரசிக நெஞ்சங்களில் நடவு செய்யப்பட்டுள்ள இது நல்வினைச் சலைத்தரும் என்று நம்ப இடமிருக்கிறது!

மேல்பட்டி. எஸ். மாறன்.

* 'கம்பீரம்' சிறுகதை படித்தேன். உயிருக்குயிரான தன் மகனையே பலி கொண்ட புலியாயினும், வன விலங்குகளைப் பேணிப்பாது காக்க வேண்டும் என்கிற உயரிய நோக்கில், சிறிதும் தளர்வில்லாத, ஓர் உயர் அதிகாரியை அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார், கிருஷ்ணா டாவின்ஸி!

கும்பகோணம் — 1.கே.என். பாலகிருஷ்ணன்.

* உருவத்தால் உயரமான அமிதாப்பச்சன்... 'ஹம்' படத்தின் வெற்றிக்குப் பின்னணி இசைதான் காரணம் என்று கூறி, உள்ளத்திலும் பண்பிலும் கூடத்தான் உயர்ந்தவர் தாம் என நிரூபித்து விட்டார்.

வேலூர். கே. பி. சாரதி.

* "பணத்துக்காக ஒரு படத்தை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று உங்களுக்கு இல்லை. அதனால் இனி அர்த்தமுள்ள படங்களில் மட்டுமே நடித்தால் என்ன?" என்று அமிதாப்பச்சனிடம் ஒரு அர்த்தமுள்ள வினாவைத் தொடுத்து, அவரை மட்டுமல்ல எங்களையும் அசர வைத்து விட்டீர்கள். பேட்டியானாலும், கட்டுரையானாலும் அதில் ஒரு முத்திரையைப் பதிப்பது "கல்கியின்" தனித்தன்மை!

சத்திரம்கருப்பூர். மு. முகம்மது உமர் அய்யூப்கான்.

* 'ஹம்' பற்றிய அமிதாப் பேட்டி சிறப்புத்தான். ஆனால் சினிமா வன்முறையால் சமூகம் பாதிக்கப் படுவதில்லை என்று சினிமா இல்லாத காலத்து வன்முறையை மேற்கோள்காட்டுகிறார். இங்கேயே கூட சிலர் ராமாயண சீதையை ராவணன் தூக்கிப் போனது எந்த சினிமா பார்த்து என்று "நக்கல்" செய்வதுண்டு. இது எப்படிப் பொருந்தா வாதம் என்று கூற விரும்புகிறேன். இன்று கம்ப்யூட்டரினால் ஆயிரம் பலன் கூறுகிறோம். அந்நாள் காலத்தில்? என்று யாரும் கம்ப்யூட்டர் சாதனையைக் கேலி செய்வதுண்டா? வன்முறையின் வேகத்தை—பரப்பளவை யாவது சினிமா விரிவு படுத்த வில்லையா?

சம்பரசம்பேட்டை. என். பாலு.

* கல்வி நிறுவனம் செய்ய வேண்டிய கடமையை, இன்று கல்கி இதழ் செய்வது பற்றிப் பூரிப்புக் கொள்கிறோம். ஆம் மாணவர் கட்டுரைப் போட்டியின், மகத்தான ஊக்கத்தையும், பரிசையுந்தான் குறிப்பிடுகிறேன்!

கும்பகோணம்.

புலவர் எஸ்.கே. மூர்த்தி.

* மதுமிதாவின் 'வலி' சிறுகதையில் வரும் "பெண்ணே.... உன் வேதனையை என்னிடம் கொடு. இதில் எனக்கும் பங்குண்டு... இது நமக்கு வைக்கப்பட்டுள்ள பரீட்சை" என்ற வரிகள் மனதைத் தொடுவதாயும், சிந்திக்கத்தக்கதாயும் இருந்தன.

கோயமுத்தூர் — 6.

ஏ.ஜி. கல்யாணசுந்தரம்.

* பல பெருமை மணக்குமுதல்கள் "ஆசிரியர் பக்கங்களில்" பிரதிபலிக்கின்றன.

வடலூர். வெ. லட்சுமி நாராயணன்.

* "போலீஸ் தொல்லையை விடத் திருடன் தொல்லையே தேவலாம்" என்கிற ஆசிரியர் பக்கம் பொது மக்களின் பயத்தைத்தெளிவு படுத்துவதாக இருப்பினும் காவல் துறையிலும் கடமை தவறாத காவலர்களும் மனச்சாட்சி உள்ள மாண்புகளும் இருப்பதை மறுப்பதற்கில்லை. காவலர்களுக்கும் பொது மக்களுக்கும் நல்ல அன்பும் பண்பும் நிறைந்த உறவை ஏற்படுத்துவதன் மூலம்தான் இப்பிரச்னைக்கு நல் வழி காண இயலும். அல்லாமல் திருடர்களை ஊக்குவிக்கும் இச்செயலைக் களைய முடியாமலே போய்விடும்.

திருச்சி — 21. கே.என். இராமகிருஷ்ணன்.

* கல்கத்தாவில் பாதாள ரயில் செயல்படும் விதத்தைப் படித்தும் என்னால் நம்ப முடியவில்லை. நம் நாட்டில் கூட வெளிநாடுகள் போல் குப்பை கூளங்கள் இல்லாமல் இப்படியொரு சுத்தமான இடம் இருக்கிறதென்றால், உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது.

சென்னை — 91. எல்.ஆர். விஜயகுமார்.



* பாதுகாப்புக் கவசம்!

ஜெயலலிதா பாதுகாப்புக் கவசம் அணிகிறாரா?



* சமந்தா...

○ சாணக்கியன், திட்டக்குடி.

? கேபிள் டி. வி. யால் சினிமாத் துறைக்கு நட்டமா?

! சினிமாத் துறைக்கு நட்டமிருந்தாலும் மக்களுக்கு நாட்டமிருப்பது தெரிகிறது!

○ பி. முனுசாமி, பெங்களூர்.

? வங்கதேச நடிகை பபிதாவைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்த ரசிகரைப் பற்றி...?

! இந்தியாவுடைய அண்டை நாடுதானே வங்க தேசம். நம்முடைய முட்டாள்தனங்களின் வாடை அங்கே வீசாதா என்ன! அவர்கள்தான் மோப்பம் பிடிக்கத் தெரியாதவர்களா!

○ ம. செந்தில்நாதன், மதுரை.

? காவிரி நீர்ப் பிரச்னையைத் தீர்க்க முயலாமல் அ. தி. மு. க. — தி. மு. க. தலைவர்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொள்வது பற்றி?

! இவர்களுடைய இந்த அசட்டுத்தனம் தெரிந்துதான் தஞ்சை மக்கள் ஒற்றுமையாக இருந்து, நடுவர் குழு வந்த போது மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்திக் காட்டியிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் கையில் பானை பிடித்துத் தண்ணீர் கேட்டிருக்கிறார்கள். தஞ்சை விவசாயப் பெருங்குடி மக்களின் இந்த அமைதியான, வலுவான போராட்டத்துக்கு மரியாதை நடுவர் குழு. தி. மு. க., அ. தி. மு. க. தலைவர்களின் கருத்துக்குப் பணியப் போவதில்லை.

○ பால. சித்தார்த்தன், சென்னை — 45.

? தமிழகத்தின் ஆறு மாவட்டங்களில் கலெக்டர்களாகப் பெண்களே நியமிக்கப் பட்டிருப்பது குறித்து...?

! முப்பது சதம் பெண்களுக்கு ஒதுக்கிடு என்ற கலைஞர் கருத்தை ஆளுனருக்கு யாராவது நினைவூட்டி விட்டார்களோ, என்னமோ!

○ எஸ். கே. மூர்த்தி, கும்பகோணம்.

? ராமராஜன் — ஜெயலலிதா — யாருக்கு யாரால் புகழ் அதிகம்?

! புகழை யார் கேட்கிறார்கள், இந்தக் காலத்தில்? யாருக்கு யாரால் லாபம் அதிகம் என்று பார்ப்பதுதானே இன்றைய அரசியல்!

○ எஸ். ஃபைகதீன், காஞ்சிபுரம்.

? வரும் தேர்தலிலும் எந்த ஒரு கட்சியும் ஆட்சி அமைக்க முடியாத நிலை தோன்றிவிட்டால்?

! சுப சீக்கிரத்தில் இன்னொரு ஆயிரம் கோடி கொட்டி அழ வேண்டியதுதான்!

○ ஆர். குமரேசன், திருச்சி.

? தர்மதுரை ரஜினி நடிப்பு எப்படி?

! நடிப்பு தர்மதுரையானாலும் வசூல் தர்மசங்கட துரை என்பதாகக் கேள்வி.

○ கோ. வீரராகவன், அறந்தாங்கி.

? கலைஞரின் பாட்னா பேச்சைப் படித்தீர்களா?

! ஒரு சில வார்த்தைகள் விரசமாகப் போய் விட்டாலும் ஒட்டுமொத்தமாகப் பேச்சு ரசம்தான்.

○ எஸ். ஸ்ரீவத்ஸன், கும்பகோணம்.

? டி. வி. யில் சமந்தா ஃபாக்ஸ் நிகழ்ச்சி பார்த்தீரா?


! இல்லை சமந்தா தூங்கிட்டேன்!

○ வி. அருண், சிரமங்கலம்.

? நான் தலைவர் என்பதே எனக்கு நினைவிருப்பதில்லை என்கிறாரே சிவாஜி?

! அதுவும் தமக்களிக்கப்பட்ட ஒரு ரோல் என்று எண்ணி விடாமலிருந்தால் சரி!


* தர்மசங்கட துரை



* பாட்னா பேச்சு



* அவ நம்பிக்கை?



* என்ன சாதிப்பார்?



○ என். முருகேஷ், பெருஞ்சேரி.

? பாரதிராஜா தமது புதிய படத்தில் ஆபாச வசனங்களைப் புகுத்தியுள்ளாரே?

! உருவகம் (சிம்பாலிக்) என்ற பெயரில் சில காட்சிகளையும்தான். தன்னம்பிக்கை உள்ளவர்களுக்கு ஆபாசம் தேவையற்றது.

○ எஸ். பாண்டியராஜ், காரைக்குடி.

? ஜெயலலிதா தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கவசம் அணிந்திருப்பது உண்மையா?

! தெரியாது. அணிவதில் தவறில்லை, தெரியும்.

○ எஸ். இளையவன், பருகை.

? அடுத்த பிரதமர் ராஜீவா? வி. பி. சிங்கா?

! வாஜ்பேயி இல்லை என்பது நிச்சயம். அவரே சொல்லி விட்டார், 'தேர்தலுக்கே நிற்க மாட்டேன்' என்று. அது சரி, பி. ஜே. பி.யை உங்களுக்குப் பிடிக்காதா? ஒரேயடியாக ஒதுக்கி விட்டீரே?

○ எல். ராம்பிரபு, கும்பகோணம். *

? தேர்தலில் புத்திசாலித்தனமாகச் செயல்பட எங்களுக்கு ஏதாவது ஒரு யோசனை தாருங்களேன்?

! கட்சித் தலைவரை எண்ணி வோட்டுப் போடாமல் உங்கள் தொகுதி வேட்பாளர்களை எடை போட்டு, உள்ளதற்குள் சிறந்தவருக்கு வாக்களியுங்கள். இப்படி வாக்காளர்கள் செயல்படுவதாகத் தெரிய வந்தால், அறிவாற்றலும் செயல்திறனும் மிக்க பலர், தேர்தலைக் கண்டு பயந்து ஒதுங்காமல் துணிந்து வேட்பாளர்களாக நிற்க முன்வருவார்கள். கட்சித் தலைவர்களும் ஜாதி, மதம், பணபலம், உள்ளூர் செல்வாக்கு முதலியவற்றை விட, வேட்பாளரின் தகுதிக்கு முக்கியத்துவம் தந்து டிக்கெட் கொடுக்க ஆரம்பிப்பார்கள். புத்திசாலிகள் நல்லவர்கள் எம். எல். ஏ.க்களாக வந்தால் அப்புறம் இங்கே அரசியல் சூழ்நிலையே மாறி விடாதா! நாடு முன்னேற்றப் பாதையில் விரையாதா! ஆக, தேசம் உருப்படுவதும் உருப்படாமல் போவதும் மக்கள் கையில்தான் இருக்கிறது.

○ ஆ. ஜீவா, பூண்டி நீர்த்தேக்கம்.

? மத்தியில் காங்கிரஸ்தான் நிலையான ஆட்சி வழங்க முடியும் என்கிறார்களே? அது ஆரோக்கியமான அரசியல் சூழ்நிலையாக இருக்குமா?

! காங்கிரஸ்தான் மத்தியில் நிலையான ஆட்சி வழங்க முடியும் என்பது புருடா. மக்களின் ஆதரவைப் போதிய அளவு பெற்ற எந்தக் கட்சியும் நிலையான ஆட்சி வழங்க முடியும். ஆனால் தற்போது எதிர்க் கட்சிகள் பிளவுபட்டு நிற்பதால் காங்கிரஸுக்கு மெஜாரிடி பலம் பெறும் வாய்ப்பு அதிகம் என்பது உண்மை. அது ஆரோக்கியமான சூழ்நிலையாக இருக்குமா என்பது ராஜீவ் நடந்து கொள்ளும் விதத்தைப் பொருத்தது. அவர் தாம் ஒருமுறை தண்டிக்கப்பட்டதை மறவாமல் நடந்து கொண்டால், ஆரோக்கியம். மீண்டும் பதவிக்கு வந்ததில் கர்வம் அடைந்தால், நாட்டை நோய்தான் பிடிக்கும்!

○ த. ரவீந்திரன், கடலூர்.

? சந்திரசேகர் இன்னமும் அரசியலில் இருந்து கொண்டு என்ன சாதிக்கப் போகிறார்?

! கட்சியை உடைத்து மகிழ்ந்தவர், இன்று தமது கட்சியும் உடைவதைப் பார்த்து வருத்தப்படாமல் சந்தோஷப்படப் போகிறார்!



தலைவர் ரோல்?

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

எல். ராம்பிரபு,
14, ராமசாமி கோயில் மேற்கு வீதி,
கும்பகோணம் — 612 001.

பத்திரிகையாளர்கள் சிரித்தார்கள்! ஆனால் எழுதவில்லை!

கே. எம். தாமஸ் (இந்தியன் எக்ஸ்பிரஸ்):

சென்னையில் சியாம் சுந்தர் என்ற டெபுடி கமிஷனர் இருந்தார். ஐ.பி.எஸ். படித்து விட்டு நேரடியாகப் பொறுப்புக்கு வந்தவர். ஒரு முறை. அவர் மஃப்டியில் ஒரு கேஸ் விஷயமாக வெளியே செல்ல வேண்டியிருந்தது. மொபெட்டில் சென்றவர் அடையாறு சிக்னலில், சிவப்புப் போட்ட பிறகு கடந்தார்



என்ற குற்றத்திற்காகப் போக்குவரத்துப் போலீஸ் கான்ஸ்டபிளால் ஓரம் கட்டப்பட்டார். சியாம் சுந்தர் குற்றப் பிரிவு டெபுடி கமிஷனராக இருந்ததால் போக்குவரத்துப் போலீஸ்காரர்களுக்கு அவ்வளவாக அறிமுகம் ஆகாதவர். சியாம் சுந்தரை ஓரம் கட்டிய கான்ஸ்டபிள் அவரைக் 'குடைய' ஆரம்பித்தார்.

கா.: எங்கே வேலை செய்யறீங்க?

சி. சு.: கமிஷனர் ஆபீஸ்ல.

கா: ஹாங்... கமிஷனர் ஆபீஸ்லயா? (கான்ஸ்டபிள் கொஞ்சம் அதிர்ச்சியடைகிறார். ஆனாலும் சுதாரித்துக் கொண்டு) என்ன வேலை பாக்கறீங்க?

சி. சு.: டெபுடி கமிஷனர்.

கா.: (அதிர்ச்சியே இல்லாதவராக) டெபுடி கமிஷனரா? ஏன்யா எல்லாரும் டெபுடி கமிஷனரைத் தெரியும்பாங்க. நீ என்னடாவென்றால் உன்னையே டெபுடி கமிஷனர் என்று சொல்லிக்கிறியே! முதல்ல சிக்னலை மதிக்காதது ஒரு குற்றம். இப்போ டெபுடி கமிஷனர் பேரைச் சொல்றது ஆள் மாறாட்டக் குற்றம்!

(சியாம் சுந்தர் எவ்வளவோ சொல்லிப் பார்க்கிறார். கான்ஸ்டபிளிடம் ஒண்ணும் நடக்கவில்லை)

கா.: ஏன்யா... கமிஷனர் ஆபீஸ் கண்ட்ரோல் ரூம் போன் நம்பர் தெரியுமா?

சி. சு.: தெரியாதே!

கா: பாத்தியா... டெபுடி கமிஷனர் என்று சொல்கிறாய். கண்ட்ரோல் ரூம் போன் நம்பர் தெரியலையே.

சி. சு.: ஜீப்ல இருக்கிற மைக் வழியாத் தான் கண்ட்ரோலோட நான் பேசுவேன். எனக்கு நம்பர் தெரிஞ்சிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

கா.: இன்னும் கொஞ்ச நேரம் வுட்டா சி. எம். மே நான்தான்னு சொல்லிடுவே போலிருக்கே.

(அப்போது பார்த்து அடையாறு போலீஸ் ஸ்டேஷன் கிரைம் பிராஞ்ச் கான்ஸ்டபிள்கள் இருவர் வருகிறார்கள். சியாம் சுந்தரைப் பார்த்ததும் சல்யூட் அடிக்க, போக்குவரத்துக் கான்ஸ்டபிளுக்கு 'தந்தியடிக்க' ஆரம்பித்து விட்டது. பின்னர் விவரம் புரிந்தவுடன்)

கா: ஸார் மன்னிச்சுக்கோங்க ஸார்.

சி. சு.: நாளைக்குக் கமிஷனர் ஆபீஸ்ல வந்து என்னைப் பாரு!

என்ன தண்டனை கிடைக்கப் போகிறது என்று யோசித்ததில், அன்று இரவு பூராவும் போக்குவரத்துக் கான்ஸ்டபிளுக்குத் தூக்கமில்லை.

மறுநாள், கமிஷனர் ஆபீஸில் சியாம் சுந்தர் அறையில் போலீஸ்காரர் நுழைந்து விறைப்பாகச் சல்யூட் அடித்து நிற்கிறார்.

சி. சு.: நான் டெபுடி கமிஷனர் என்று சொல்லியும் கூட, தைரியமாக என்னைக் கேள்விகள் கேட்டு மடக்கியதற்காக என்னோட அன்பளிப்பு 25 ரூபாய், இந்தா!

கா.: ஸார்... (அதிர்ச்சியடைகிறார், மூர்ச்சித்து விழாத குறையாக)

ஏ. எஸ். பன்னீர் செல்வம் (பிஸினஸ் இந்தியா):

முன்பு நான் 'இந்தியா போஸ்ட்' என்ற பத்திரிகைக்காக வேலை செய்து கொண்டிருந்த போது, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனாவைப் பேட்டி கண்டேன்.



அப்போது அவரிடம் 'எங்கள் பிரதமர் ராஜீவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்' என்று கேட்டேன்.

கொஞ்ச நேரம் பொறுத்து ஜெயவர்த்தனா 'ராஜீவ், இளைஞர், சுறுசுறுப்பானவர்' (He is young and dynamic) என்று சொல்லிச் சிரித்தார்.

அவர் எதற்காகச் சிரிக்கிறார் என்று எனக்குப் புரியவில்லை.

அவரே தொடர்ந்தார். ''ராஜீவ் பக்குவமில்லாமல் (immature) நடந்துகொள்வதால் அவரை இளைஞர் என்று கூறினேன். அவசரப்பட்டு முடிவுகளை எடுப்பதால் சுறுசுறுப்பானவர் (dynamic) என்று குறிப்பிட்டேன்'' என்றதும் அந்த அறையில் குபீர்ச் சிரிப்புக் கிளம்பியது!

மௌஷ்மி (நிருபர்):

பிரபலமான நடிகை ஒருவரைப் பேட்டி காணச் சென்றிருந்த போது, அங்கு ஏற்கெனவே ஒரு தினசரியின் நிருபரும் புகைப்படக்காரரும் அந்த நடிகை பொங்கல் வைப்பது போல் படமெடுப்பதற்காக வந்திருந்தார்கள். நடிகை தயாரான போது அந்த நிருபர், ''சர்ஃப் பவுடர் எங்கே? சீக்கிரம்! சீக்கிரம்!'' என்று யாரையோ அவசரப்படுத்திக் கொண்டிருந்தார்.



எதற்காக அவர் இந்த வேளையில் சர்ஃபைத் தேடிக் கொண்டிருக்கிறார் என்று வியப்புடன் பார்த்த போது, அந்த நிருபர் சர்ஃபை பக்கெட் தண்ணீரில் போட்டுக் கலக்கி நுரையை மட்டும் எடுத்துக் காலியான பொங்கல் பானையிலிட்டுப் பொங்கல் பொங்குவது போல் செய்தார். நடிகையும் அற்புதமாகப் போஸ் கொடுத்தார்!

டி. என். கோபாலன் (இந்தியன் எக்ஸ்பிரஸ்):

பொதுவாகவே அரசியல்வாதிகளுக்கும் உளறல்களுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு. அதுவும் அந்த அரசியல்வாதி அமைச்சராக இருந்து விட்டால் கேட்கவே வேண்டாம். ஆர். எம். வீரப்பன் அமைச்சராக இருந்த போது, ஒருமுறை மதுரையிலுள்ள கல்லூரியில் பேசினார்.

''எங்கள் தலைவர்—புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்., உலகில் உள்ள மற்ற தலைவர்களான ஆப்ரகாம் லிங்கன், கென்னடி, மகாத்மா காந்தி ஆகியோரை விட உயர்ந்தவர் — எப்படியென்றால்...''



— கூட்டத்தில் பின் டிராப் சைலன்ஸ்.

அமைச்சர் அடுத்து என்ன சொல்லப் போகிறாரோ என்று கூட்டத்தினர் ஆவலுடன் காதுகளைத் தீட்டிக் கொண்டு காத்திருந்தார்கள். தொடர்ந்தார் அவர்.

''ஆம்... எப்படியென்றால் கென்னடி, லிங்கன், காந்தி ஆகியோர் சுட்டவுடன் இறந்து போனார்கள். ஆனால் எங்கள் புரட்சித் தலைவர் ஒருவர் மட்டுமே, சுடப்பட்டும், உயிரோடு மீண்டு வந்தவர். அதனால்தான் சொல்கிறேன். புரட்சித் தலைவர் அந்தத் தலைவர்களை விட உயர்ந்தவர்.''

கூட்டத்தின் கடைசி வரிசைகளில் குபீர்ச் சிரிப்புப் பரவியது. அமைச்சராயிற்றே என்பதால் முன் வரிசையில் இருந்த வி.ஐ.பி.க்களும் நாங்களும் வாயை மூடிக் கொண்டு உட்கார வேண்டியிருந்தது.

தொகுப்பு: தில்லப்பா.



வெற்றிநடை போடுகிறது
இளையராஜாவின்
ராஜ்கிரண்
என்
ராசாவின்
மனசிலே...
கஸ்தூரிராஜா
ராஜ்கிரண்
சென்னை
ஆனந்த்
மகாராணி
ஸ்ரீ பிருந்தா
மற்றும் தமிழகமெங்கும்...
"கணவனும், மனைவியும் ஒருவர் மீது மற்றவர் எவ்வளவுதான் ஆசையும் பாசமும் வைத்திருந்தாலும், சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அந்த ஆசையையும் பாசத்தையும் ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டால்தான் அந்த வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்"
"என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறேன். இந்த படத்தை பார்த்து விட்டு நாலு குடும்பத்திலாவது கருத்து வேறுபாடுகள் நீங்கி சந்தோஷம் ஏற்பட்டால் என் லட்சியம் நிறைவேறியதாக மகிழ்ச்சியடைவேன்.
ராஜ்கிரண்
கிச்சாஸ்
டி.ஜி.கேசவன்
ராஜ்குமார்
மஸ்தான்
சுப்புராஜ்

வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகுமா?

வாய்விட்டுச் சிரிக்கும் போது உடல் ரீதியாக என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று டாக்டர் வ. நம்பி சொல்லுகிறார்:

மனம் மகிழ்ச்சியாய் இருக்கிற போது, உடலில் சில ஹார்மோன்கள் சுரக்கின்றன. எப்படி கோபமாக இருக்கும் போது உடல் நலனுக்கு எதிரான சில சுரப்பிகள் செயல்படுகின்றனவோ, அது போல மனம் மகிழ்ச்சியாய் இருக்கும் போது உடல் நலனுக்கு ஏற்ற ஹார்மோன்கள் சுரக்கின்றன. அது நோய்க்கு எதிர்ப்புச் சக்தியையும், உடலுக்கு வலுவும் கொடுக்கும் திறனுள்ளது. இப்போதும் கூட, பிரார்த்தனையாலும், தொழுகையாலும் மட்டுமே கான்சர் போன்ற நோய்களிலிருந்து கூட நோயாளி பிழைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அது போல, மனிதருக்குள்ளே அவர் உணராமலே மருந்தும் இருக்கிறது. பிரார்த்தனை போலவே, ஆரோக்கியமான மனநிலையோடு சிரிப்பும், மகிழ்ச்சியும் நோயிலிருந்து அவருக்கு விடுதலை தருகிறது.

உளவியல் மருத்துவர் டாக்டர் என். மாத்ருபூதம் உள்ள ரீதியாக என்னென்ன மாறுதல்கள் ஏற்படுகின்றன என்பதை விளக்குகிறார்:

நகைச்சுவை போல அதிகபட்ச மனத் தளர்வு (மென்ட்டல் ரிலாக்சேஷன்) தருவது வேறு எதுவுமில்லை. மென்ட்டல் ரிலாக்சேஷன் எனும் இந்த மனத் தளர்வுதான், உடல் அளவிலான ஓய்வையும் தருகிறது. நகைச்சுவையை உணர்ச்சிபூர்வமாக ரசித்து, மனமும் பிறகு உடலும் அதை ஏற்கும் நிலை உன்னதமானது.

ஸ்ட்ரெஸ் என்னும் மன அழுத்தம் மிக்க சூழ்நிலையிலிருந்து விடுதலை பெற, நகைச்சுவை உடனடியாக உதவுகிறது. நகைச்சுவை உணர்வு மிகுந்த ஒரு நபரிடம் இந்த மன அழுத்தம் இருக்க முடியாது. 'ஒரு மணி நேரம் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தேன் சார். அந்த ஒரு மணி நேரமும் என்னை மறந்து இருந்தேன்!' என்று சிலர் சொல்லுவார்கள். மனம் இறுக்கமான சூழ்நிலையில் தத்தளிக்கும் போது, இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் அதை விடப் பெரிய மருந்துவம் கிடையாது. இன்னொன்று: நகைச்சுவை உணர்வு, கடுமையான சூழ்நிலையை, மனத்தளவில் அநாயாசமாக எதிர்கொள்ள நம்மைத் தயார் செய்து விடுகிறது.

நம்முடைய குறைபாடுகளை நாமே எண்ணிப் பார்த்துச் சிரித்துப் பழகிக் கொள்ளக் கற்றுக் கொள்வது இன்னும் விசேஷமானது. அப்போதுதான், அதையே பிறர் சுட்டிக்காட்டும் போது தவறாக எடுத்துக் கொள்ளாமல் சரியான மனப் பக்குவத்தோடு தவறுகளை உணர்ந்து கொள்ள முடியும். அந்தப் பக்குவம், மனித உறவுகளை மேலும் பலப்படுத்தும். மனித உறவுகள் சுமுகமாகவும் சந்தோஷமாகவும் இருக்கும் போது 'மன இறுக்கம்' என்பதற்கு வழியே கிடையாதல்லவா! இப்படி நகைச்சுவை உணர்வு எல்லாக் கோணங்களிலும் சந்தோஷமளித்து ஓர் ஆரோக்கியமான மனநிலையைக் கொடுப்பதால்தான் 'வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்' என்கிறார்கள்.

— எஸ். வி. என்.



''நானும் எவ்வளவோ சிரிக்கத்தான் பார்க்கிறேன்; காக்கிரனைவிட்டு சட்பூசல் நோய் முடிப் போக மாட்டேங்குதே!''

சிரிக்க வையுங்கள்; சிங்கப்பூர் செல்லுங்கள்!



''ஏங்க 'தெரு விளக்குல' படிச்சு மேதை யானவங்க கதையெல்லாம் நம்ப பையனுக்குச் சொன்னீங்களா?''

''ஆமா! ஏன்?''

''கெட்டுது போங்க, 'தெரு விளக்குப் போடச் சொல்லு, அப்பத்தான் படிப் பேன்'னு அடம் பிடிக்கிறான். எந்தக் காலத்துல இவன் படித்துப் பரீட்சை எழுதறது?''

— ஏ. நித்யா, சென்னை — 44.

○ ○ ○ ○

● ''ரிப்பேர் சார்ஜ் முப்பத்தைந்து ரூபா ஸார்'' என்றார் கடைக்காரர்!

நண்பர், பெண் குழந்தையை முறைத்துவிட்டு, ''இது செய்த ரிப்பேர்னாலத்தான் இந்தத் தண்டச் செலவு'' என்றார்.

குழந்தை உடனே, ''போங்க டாடி. கடைக்காரர் ரிப்பேர் பண்ணதுக்குக் காசு கொடுக்கிறீங்க... நா பண்ணா மட்டும் காசு கொடுக்காமத் திட்டறீங்க...'' என்றதும்...



கடைக்காரர் குழந்தையின் கன்னத்தைக் கிள்ளி விட்டு, ''இதுக்காக அஞ்சு ரூபா குறைச்சுக் குடுங்க ஸார்'' என்றார்!

— எல். மாறன், மேல்பட்டி.

○ ○ ○ ○



''உங்ககிட்டே வாங்கின எங்க ம. வி. யில 'வரிவரி'யாய்க் கோடு வருதுங்க.''

'''பட்ஜெட்' சமயத்திலே அப்படித்தான் வரும், கவலைப்படாதீங்க!''

— சரவணன், சென்னை — 2.

○ ○ ○ ○



● ராகிங் நடந்து கொண்டிருந்தது. சீனியர் மாணவன் கேட்டான்: ''எங்கே ஔவையார் பாடலில் இரண்டு வரி சொல்லு.''

ஜூனியர் மாணவன் சொன்னான்: ''டிவிங்கிள் டிவிங்கிள் லிட்டில் ஸ்டார்...''

டீ.வி. நிகழ்ச்சியும் தடங்கலும் போல...

"ஸ்டாப், ஸ்டாப்! ஔவையார் பாட்டுக் கேட்டா நர்ஸரி விடறியே!"

"அடுத்த வரியைக் கேட்டுட்டுச் சொல்லுங்க சார்!"

"சரி, சொல்லு!"

"ஔவை ஒண்டர் வாட் யூ ஆர்!"

சீனியர் மாணவன் நடால்!

— ப. விஜயபாலன், சென்னை – 1.

○ ○ ○ ○



"முன்னாடியெல்லாம் என் வீட்டுக்காரர் என்கிட்டே ஜோக் சொல்லிக்கிட்டேயிருப்பாரு... இப்ப கொசுத் தொந்தரவு நிறைய இருக்கிறதுனால, நான் அவர்கிட்டே ஜோக் சொல்ல வேண்டாம்னு சொல்லிட்டேன்..."

"கொசுத் தொந்தரவுக்கும் ஜோக் சொல்றதுக்கும் என்னடி சம்பந்தம்...?"

"ஒரே நேரத்துல என்னால ரெண்டு கடியத் தாங்க முடியலே...!"

— லட்சுமி ஆவுடைநாயகம், சென்னை – 91.

○ ○ ○ ○



● ஒரு திருமணத்தில் நண்பர் மணமக்களைப் புதுமையான முறையில் வாழ்த்த வேண்டும் என்றார். அதற்கு நான், "டி.வி. நிகழ்ச்சியும் தடங்கலும் போல் இணை பிரியாமல் வாழ வாழ்த்துகிறேன்" என்று சொன்னேன். நண்பர்கள் அனைவரும் அடங்க வின்றிச் சிரித்தார்கள்.

— எஸ். ராமசாமி, மேட்டுப்பாளையம்.

○ ○ ○ ○



ஸ்கூட்டர் ஒர்க்ஷாப் முதலாளி: ஏன் ஸார் அடிக்கடி ஸ்கூட்டர் ரிப்பேர்னு தள்ளிக்கிட்டு வர்றீங்க? இதை வித்துட்டு மேல கொஞ்சம் பணம் போட்டு ஒரு சைக்கிள் வாங்கி வச்சுக்கக் கூடாதா...?"

— ஜி. ராஜசேகர், வலங்கைமான்.


○ ○ ○ ○



● சமீபத்தில் நானும் என் நண்பனும் ஒரு திரைப் படத்துக்குச் சென்றிருந்தோம். படம் செமை போர். கதாநாயகன் நாயகியிடம், "நான்தான் தப்புச் செய்து விட்டேன்" எனக் கூற, நாயகியோ, "இல்லை, இல்லை. நான்தான் தப்புச் செய்துவிட்டேன்" என்று கூற, உடனே என் நண்பன், "நீங்க ரெண்டு பேருமே தப்புச் செய்யலை. இந்தப் படத்துக்கு வந்த நாங்க தான் தப்புப் பண்ணிட்டோம்" எனக் கூற, தியேட்டரே கலகலத்துப் போனது!

— பி. பி. இராஜா, போரூர்.

○ ○ ○ ○



ஆசிரியர் பக்கம்...

சிரிப்பு: வீழ்த்துவதற்கு ஓர் ஆயுதம்!

பேச்சு, எழுத்து, வாழ்க்கை மூன்றிலும் இயல்பான நகைச்சுவையில் ஊறித் திளைத்தவர், அமரர் கல்கி. சென்னை, மாநிலக் கல்லூரியில் அவர் பேச அழைக்கப்பட்டிருந்தார். கல்லூரி முதல்வர் அவரை அறிமுகம் செய்யும்போது, "கல்கி தமது நாவல்களுக்குக் கரு தேடி எங்கும் அலைய வேண்டாம். இங்கு வந்துவிட்டால் போதும். இந்தக் கல்லூரி வளாகத்திலே ஏகப்பட்ட கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் அவர் காணலாம்!" என்று கூறி, மாணவ, மாணவியரை உற்சாகத்தில் ஆழ்த்தினார். அடுத்துப் பேச எழுந்த கல்கி, தமது உரையைத் தொடங்கு முன்னர் அவையோரைப் பார்த்து, "கதாநாயகர்களே! கதாநாயகிகளே!" என்று அழைக்கவும் எழுந்த கரவொலி கடற்கரையெங்கும் வியாபித்தது!

எஸ். வி. வி. காலமான போது கல்கி இரங்கல் கட்டுரைதான் எழுதுகிறார். ஆனால் அதிலும் சிரிப்புச் சுவை புகுந்து கொள்கிறது! அது எஸ். வி. வி.க்கு மிகச் சிறந்த அஞ்சலியாகவும் அமைகிறது:

"மேலே கொஞ்சதூரம் போனதும் ஒரு வாக்குவாதம் ஏற்பட்டு விட்டது. யமதூதர்கள் அவரை யமலோகத்துக்கு அழைத்துப் போக வேண்டும் என்றார்கள். தேவதூதர்கள் சொர்க்கத்துக்கு அழைத்துப் போக வேண்டும் என்றார்கள். மத்தியஸ்தம் செய்ய வந்த சித்திரகுப்தன், 'எஸ். வி. வி.யையே கேட்டு விடலாம்' என்று தீர்மானித்து வினவினான். எஸ். வி. வி. யோ, 'இந்தக் கேள்விக்கு ஐயாவைக் கேட்டுத்தான் பதில் சொல்ல வேண்டும்' என்றார். 'அது யார், ஐயா?' என்று கேட்டார்கள். எஸ். வி. வி. சிரித்துவிட்டு, 'பூலோகத்தைக் காட்டிலும் இங்கு படிப்பு அதிகம் போலிருக்கிறதே! உங்களையெல்லாம் எம். எல். ஏக்கள் ஆக்கிவிடலாம் போலிருக்கிறதே!' என்றார். சித்திரகுப்தன் கோபித்துக் கொண்டு, 'இவரை யமலோகத்துக்கே கொண்டு போங்கள்!' என்று உத்தரவு போட்டு விட்டான்!

எஸ். வி. வி. அங்கே போனதும் யமலோகத்தில் இருந்த அத்தனை பேரும் ஓயாமல் சிரிக்கத் தொடங்கினார்கள். அது யமலோகம் என்பதே எல்லோருக்கும் மறந்து போய்விட்டது! உடனே யமன், இவரை இங்கே வைத்திருக்கக் கூடாது என்று தீர்மானித்து எக்ஸ்பிரஸ் புஷ்பக விமானத்தில் சொர்க்கலோகத்துக்கு அனுப்பி வைத்தான்.

யமலோகம் எப்படித் திமிலோகப்பட்டது என்பது ஏற்கெனவே சொர்க்கத்துக்கு எட்டியிருந்தது... அதைப் போல் சொர்க்கமும் சிரிப்பாய்ச் சிரிக்கக் கூடாது என்று எண்ணி அங்கே எஸ். வி. வி. வந்ததும் நாரதர் கையிலிருந்த வீணையைப் பிடுங்கி எஸ். வி. வி. கையில் கொடுத்து விட்டார்கள். அதுமுதல் எஸ். வி. வி. வீணையை மீட்டிக் கொண்டு சங்கீத ஆனந்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்..."

சிரித்து வாழ்ந்து காட்டியவர் கல்கி. நான் இண்டர் தேறியவுடன் மருத்துவம் படிக்க நினைத்தேன். அப்போது ராஜாஜிதான் தமிழக முதல்வர். யாரோ சொன்னதைக் கேட்டு அப்பாவிடம் போய், "உங்கள் நண்பர் மனம் வைத்தால் மெடிகல் காலேஜ் அட்மிஷன் உடனே கிடைத்துவிடும்" என்றேன். என் அறியாமையைக் கண்டு அப்பாவுக்கு அசாத்தியக் கோபம் வந்திருக்க வேண்டும் என்பது எனக்கு இப்போது புரிகிறது. ஆனால் அன்று அப்பா கோபிக்கவில்லை! சிரித்தார். "நான் போய், உனக்காக, ராஜாஜியிடம், சிபாரிசு கேட்பதா? அழகுதான்! பேஷ்!" என்று கூறி மறுபடி பெரிதாகச் சிரித்தார். அந்தச் சிரிப்புக்குள்ளே எத்தனை அர்த்தம்! அந்தப் 'பேஷி'ல் எத்தனை கேலி! சிரிப்பிலே ஒருவனை வீழ்த்த முடியும் என்பது அன்று எனக்கு உறுதியாயிற்று. அவரது நையாண்டி எத்தனை அரசியல் தலைவர்களை வீழ்த்தியது!

செய்யும் தொழில் தெய்வம் எனில் அந்த எழுத்துக்குத் துணை நின்ற நகைச்சுவையும் கல்கிக்குத் தெய்வமே. அதனால் அதனை அவர் கொச்சைப்படுத்தியதேயில்லை. விரசம் அவர் எழுத்தில் எட்டிக் கூடப் பார்க்காது. அதுமட்டுமல்ல, அவர் உருவாக்கிய நகைச்சுவைப் பாத்திரங்களை உன்னத நிலைக்கு உயர்த்தி விடுவார். வந்தியத்தேவனும், ஆழ்வார்க்கடியானும் குண்டோதரனும், கண்ணபிரானும் நம்மைச் சிரிக்க வைத்தபடியே நம் மதிப்பிலே உயர்ந்து கொண்டே போவார்கள்!

நகைச்சுவையைக் கல்கி இழிவுபடுத்தவில்லை; போற்றினார். அதனால் அது அவருக்குக் கைகட்டிச் சேவகம் செய்தது!

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் — சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 130/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
அரை மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 65/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால்: ரூ. 350/-.

சரளா

முழுநீள நாடகம்



சுஜாதா

கல்கி 14.4.91 இதழுடன் இலவச இணைப்பு

சிறு நாடகம் என்பது நடிப்பதற்கும் படிப்பதற்கும் — சுவையாக இருக்கும் முழுமையான கலை வடிவம் பெற்ற இலக்கியம். இது தமிழில் சரியாக அதிகம் வராமல் இருப்பதற்கு காரணங்கள் சொல்வதை விட ஒரு உதாரண நாடகம் எழுதி விடலாம் என்று தோன்றியது. அமெரிக்கன் லைப்ரரியில் Best Short Plays 1989 என்ற புத்தகத்தில் உள்ள சில நாடகங்களை அண்மையில் படித்தேன். அதில் எட்வர்ட் அலன் பேக்கர் எழுதிய 'டோலரஸ்' என்கிற நாடகம் என்னை மிகவும் பாதித்தது. அந்த பாதிப்பில் எழுதிய நாடகம் இது. இதை நடிக்க விரும்புபவர்கள் ஒரு வார்த்தை எனக்குச் சொன்னால் சில மேடைக் குறிப்புக்கள் தருவேன்.

— சுஜாதா

திரை விலகும் போது தெரிவது (ஒரு மேல் மத்யமர் குடும்பத்தின் சௌகரியமான சமையல் அறை. ஒரு காஸ் அடுப்பு. அதன் மேல் பாகத்தில் அலமாரிகள். ஒழுங்காக அடுக்கப்பட்ட சமையல் பண்டங்கள். உப்பு, சர்க்கரை, ரசப்பொடி, சாம்பார்ப் பொடி என்று ஒழுங்காக 'லேபிள்' இட்டு. மற்றொரு அலமாரியில் சாமி படம். பூஜை மிச்சங்கள், அருகில் சிறிய ட்ரான்சிஸ்டர். விவித பாரதியில் சொட்டு நீலம், இதயம் நல்லெண்ணெய், ஜவுளி விளம்பரங்கள். நடுவே வட்டமேஜை. தரையில் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்கள், ஒரு மூணு சக்கர சைக்கிள் குடை சாய்ந்து. அவைகளை சாவித்ரி எடுத்துப் பெருக்கிக் கொண்டிருக்கிறாள். மேசைமேல் கத்தியும் வெண்டைக்காய் அல்லது வெள்ளரிக்காய். ரேடியோ 'சொட்டு நீலம் என்று கேட்காதீர்கள், ரீகல் சொட்டு நீலம் என்று கேட்டு வாங்குங்கள்' என்பதுடன்...)

சாவித்ரி : (அதனுடனே அதே வாசகங்களைச் சொல்லிக் கொண்டே) எல்லாம் போட்டது போட்டபடியே ஓடிப் போயிட வேண்டியது. இந்தக் குழந்தைகளுக்கு எப்பத்தான் புத்தி வருமோ?

(சாவித்ரிக்கு முப்பத்து மூன்று வயசிருக்கலாம். களைத்துப் போன ஒரு பரிபூரண இல்லத்தரசி. தன் பாத்திரத்தை முழுதும் உணர்ந்து ஒப்புக் கொண்டவள். அவள் உலகம் பெரும்பாலும் இந்தச் சமையலறையைச் சுற்றி இயங்குவதற்குரிய அனைத்து அடையாளங்களையும் காட்டலாம். பெண்களுக்கான பத்திரிகைகள் தென்படலாம். அப்போது சரளா உள்ளே நுழைகிறாள். அவள் சாவித்ரியின் தங்கை. வசீகரமாக உடை உடுத்தியிருந்தாலும் தலை கலைந்து, சற்று பரபரப்பாக உள்ளே நுழைகிறாள். சரளா ஒரு நிலை கொள்ளாத படபடப்பான பட்டாம்பூச்சி போன்றவள். கோபம், சந்தோஷம், எதையும் எதிர்பார்க்க முடியாது. அவள் கையில் ஒரு சிறிய பை.)

சரளா : அக்கா!

சாவித்ரி : (திரும்பிப் பார்த்து) மறுபடி வந்துட்டியா?

சரளா : அக்கா, இன்னிக்கு ஒரு நாள் மாத்திரம் தங்கிக்கறேன். (மேசையருகில் உட்கார்ந்து கொண்டு) — அது என்ன வெள்ளரிக்காயா, நறுக்கட்டுமா?

சாவித்ரி : நறுக்கவும் வேண்டாம், இருக்கவும் வேண்டாம். போ! போய்டு இப்ப!

சரளா : இன்னிக்கு ஒரு நாள் அக்கா (கெஞ்சலாக) சமத்தில்லை...

சாவித்ரி : முடியாது, மாட்டேன். போன தடவை கூட இப்படித்தான், ஒருநாள் மட்டும்னு கெஞ்சினே. அப்புறம் என்ன ஆச்சு?

சரளா : அக்கா, ரொம்ப அடிக்கிறார் அக்கா. அடி தாங்கலைக்கா. பாரு. கன்னத்தைப் பாரு. விரல் பதிஞ்சிருக்கு. (காட்டுகிறாள்)

சாவித்ரி : எனக்குத் தெரியலை, எனக்குப் பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை.

சரளா : அக்கா, நான் உன் செல்லத் தங்கையில்லை? சின்ன வயசில என்னை இடுப்பிலே...?

சாவித்ரீ : அந்தப் பருப்பெல்லாம் இப்ப வேகாது. நான் இப்ப உன் அக்கா இல்லை.

சரளா : பின்னே?

சாவித்ரீ : நான் ஒரு அம்மா. ஒரு மனைவி. அவ்வளவுதான். எனக்கு இருக்கிற பிடுங்கல்கள் போதும்மா. காலைல யுனிஃபார்ம் தேடறதும், பசங்க பின்னால ஓடறதும், பட்டன் தைக்கறதும், டிபன் கட்டறதும், இஸ்திரி போடறதும்... இதுக்கே நேரம் பத்தலை. உன் கதையைக் கேட்க நேரம் இல்லை! இஷ்டமும் இல்லை!

சரளா : என்ன நடந்ததுன்னு சொல்றேனே...!

சாவித்ரீ : வேண்டாம் ப்ளீஸ். சரளா ஏன் என் வாழ்க்கையை இப்படிச் சிக்கல் பண்ணறே? நான் பாட்டுக்கு என் புருஷன் உண்டு, என் பிள்ளைகள் உண்டுன்னு அமைதியா இருக்கிற என் லைஃப்ல எதுக்கு உள்ளே வர்றே இப்படி?

சரளா : அக்கா என் கண்ணைப் பாரு. சிவந்திருக்கில்லை? அடி! உன் தங்கை அடி தாங்காம வந்திருக்கேன்னு புரிய மாட்டேங்கிறதே உனக்கு....?

சாவித்ரீ : புரிஞ்சுக்க விருப்பமில்லை. நீ போய்டு சரளா. உன்னை மட்டும் அவர் இங்கே இருக்கிறதைப் பார்த்தா பலி விழும்.

சரளா : அத்தான்கிட்ட நான் சொல்லிக்கிறேன் அக்கா.

சாவித்ரீ : வேண்டாம். அவர் வர்றப்ப நீ இங்கே இருக்கக் கூடாது.

சரளா : என்ன அக்கா இப்படி விரட்டறே?

சாவித்ரீ : ஆமாம், அப்படித்தான்.

சரளா : நான் என்ன தப்புச் செய்துட்டேங்கிறே?

சாவித்ரீ : உன்னைக் கண்டால் அவருக்குப் பிடிக்கலை அவ்வளவுதான்.

சரளா : ஏன், ஏன்?

சாவித்ரீ : ஏனோ!

சரளா : ஏதாவது காரணம் இருக்கணுமா, இல்லையா? நான் அத்தானைக் கேட்கிறேனே?

சாவித்ரீ : அதுவரைக்கும் நீ இங்கே இருந்தால்தானே? பாரு சரளா, இப்பப் போய்டும்மா. முரண்டு பண்ணாதே, லொள்ளு பண்ணாதே!

சரளா : (நாற்காலியில் உட்கார்ந்து அலமாரியிலிருந்து ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிடுகிறாள். கத்தியை எடுத்து) இந்த மாதிரி கத்தி ஆறு இன்ச்சுக்கு மேல் வெச்சுக்கிட்டா அரஸ்ட் பண்ணுவாங்களாம்.

சாவித்ரீ : (அவளை ஆச்சரியத்துடன் பார்த்து) ஏண்டி, உனக்குச் சுரணை கிடையாதா? இவ்வளவு தூரம் படிச்சுப் படிச்சுச் சொல்றேன், கல்லுளி மங்கன் மாதிரி கம்பீரமா உட்கார்ந்துட்டியே, இது யார் வீடு? எழுந்து போடின்னா?

சரளா : எனக்குப் போக வேறு இடம் இல்லை அக்கா!

சாவித்ரீ : ஏன் அந்த ரமேஷ் வரலையா?

சரளா : ரமேஷ் மாற்றிப் போய்ட்டான்.

சாவித்ரீ : அப்புறம் அந்த மங்கபதி?

சரளா: அக்கா, அவங்கள்ளாம் இப்ப என்னுடைய பிரச்னையிலே உதவி பண்ண மாட்டாங்கக்கா!

சாவித்ரீ : எல்லார் கூடவும் சண்டை போட்டுக்கிட்டே?

சரளா : எல்லார் கூடவும் இல்லை, எல்லா மனைவிகள் கூடவும்!

சாவித்ரீ : அதான் இங்கேயும் பிரச்னை!

சரளா : (தயங்கி) அப்படிச் சொல்லு அக்கா, இங்கேயும் அதான் பிரச்னையா? அதான் விரட்டறியா?

சாவித்ரீ : ஏதோ வெச்சுக்க...!

சரளா : அக்கா, நான் எப்பவாவது அப்படித் தப்பா நடந்துக்கிட்டு இருந்திருக்கேனா? அத்தான்கிட்ட? இல்லை, அவர்தான்...

சாவித்ரீ : இந்த டிஸ்கஷனே வேண்டாம்மா! போறியா, இல்லை...

சரளா : ஏன்க்கா, உன் புருஷன் பேர்ல உனக்கு நம்பிக்கை இல்லையா?

சாவித்ரீ : (மௌனம் — அவள் குழப்பத்திலிருக்கிறாள்)

சரளா : நான் அவர் பார்வையிலேயே படலை. சாமி ரூம்லேயே உட்கார்ந்திருக்கேனே?

சாவித்ரீ : உன் இடம் உன் புருஷன் இருக்கிற இடம். அங்கே போ.

சரளா : அடிக்கிறார் அக்கா. **Sheer physical pain.** நிசமாக்கா, என்னால தாங்க முடியலை. (அவள் குரலில் யோக்கியம் தென்பட) ட்ரிங்க்ஸ் எடுத்துக்கிறார். வீட்டிலே சிகரெட் பிடிக்கிறார். எதுக்கெடுத்தாலும் சந்தேகம். என்ன ஆச்சுன்னா, ராத்திரி ஒன்பதடிச்சுப் பத்து நிமிஷத்துக்கு வந்தேன். அவர் எப்பவும் க்ளப்பில சீட்டாடிட்டு ஒம்பதரைக்குத்தான்

வருவார். நேத்திக்குப் பார்த்து எட்டரைக்கே வந்து சன்னல் வழியாப் பார்த்துக்கிட்டே இருக்காரு. கதவைத் திறந்த உடனே யார் கூடப் போனே, யாரு கொண்டுவிட்டான் இன்னிக்கு... இப்படி அசிங்கம் அசிங்கமாக் கேட்கிறாரு. எனக்கும் கோபம் வந்தாலும் அடக்கமாத் தான் பதில் சொன்னேன். அந்த மோகன் எனக்குத் தம்பி போல...

சாவித்ரி : நீ என்ன சொன்னாலும் எனக்கு அக்கறை இல்லை.

சரளா : (கவனிக்காமல்) அப்படின்னு சொன்னேன். 'உன் பெண்டாட்டி மேல உனக்கு அக்கறையும் கருணையுமிருந்தா, நீ வேளைக்கு வீட்டுக்கு வரணும்.' 'வேளைக்கு வீட்டுக்கு வந்தா, நீ வீட்டிலே இருக்கிறதில்லை. ஊர் சுத்தப் போய்டறே' (புருஷன் மாதிரிப் பேசிக் காட்டுகிறாள்) 'நீ வேளைக்கு வராததாலேதானே நான் ஊர் சுத்தப் போறேன்?' 'இன்னிக்கு வந்திருக்கேனே?' 'சீக்கிரம் வருவேன்னு சொல்லவே இல்லையே?'

சாவித்ரி : இதுக்கா அடி?





சரளா : ஆமாக்கா.

சாவித்ரி : நீதானே அந்தாளைக் காதல் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்டே. நாங்க படிச்சுப் படிச்சுச் சொன்னாலும் கேட்காம...

சரளா : அய்யோ அதை ஞாபகப்படுத்தாதே கடுப்பு! எப்படி ஒரு ஆளு இப்படி மாறுவான்னு... முரளி போன்லே பேசிட்டான்னு கோபம். உடனே 'யார் இந்த முரளி! எத்தனை பேரை வெச்சுக்கிட்டு இருக்கே?' முரளி யாரு? தம்பி மாதிரிக்கா!

சாவித்ரி : எத்தனை தம்பி?

சரளா : (தொடர்ந்து) அதுக்கு என்ன பதில் சொன்னேன்? காலண்டரைப் பார்த்துச் சொல்றேன்னேன். 'நீ வெறுப்பேத்தினா நான் வெறுப்பேத்த மாட்டேனாய்யா?' வந்துதே கோபம்! பக்கத்திலே ஆயுதம் தேடறாரு. முதல்லே வாசல் கதவை உள்பக்கம் தாள் போட்டுக்கிட்டு, தொத்தக்குச்சியை எடுத்து அடிக்கிறாரு. நான் அதை மடக்கி, ஒடிச்சு வீசி எறிஞ்சேன். கோபம் ஜாஸ்தியாப் போச்சு. கிட்ட வந்து அப்படியே பேய் அறையறா மாதிரி (அழுகையுடன்) இன்னம் வலிக்குதுக்கா... (சரளா மௌனமாகக் கொஞ்ச நேரம் அழுகிறாள். சாவித்ரி என்ன செய்வது என்று தெரியாமல் சங்கடப்படுகிறாள்) என்ன பண்றது? நான் இனிமே அந்த வீட்டு வாசல்லே நுழைய மாட்டேன். வந்து கெஞ்சட்டும். இங்கே இதான் என் வீடு.

சாவித்ரி : அப்படி இல்லை சரளா. அதான் உன் வீடு. அடியோ, தடியோ, ஏன் உனக்கு எத்தனை சொன்னாலும் புரிய மாட்டேங்கிறது?

சரளா: எனக்குன்னு நீ ஒருத்திதானே அக்கா?

சாவித்ரி : நான் உனக்கு இல்லை. என் குடும்பம், என் குழந்தைகள், என் கவலைகள்னு என் உலகம் வேற. சரளா, புருஷன் அடிக்கிறான்னா, அடிக்கிறா மாதிரி நடந்துக்கறே நீ. அத்தான் என்னைக் கையெடுத்து ஓங்ினது கூட இல்லை. கோபம் வந்தால் தனியா அஞ்சு நிமிஷம் பாத்ரூம்லே போய் உக்காந்துப்பார். சமாதானமாயிரும்.

சரளா : அத்தனை சுலபமா இருந்தா நான் ஏன்...?

சாவித்ரி : நீ லேட்டா வர்றேன்னு கோவிச்சுக்கிட்டா, லேட்டா வராதே. அவர் வர்ற சமயம் வீட்டிலே இருந்தால் ப்ராப்ளம் இல்லை பாரு!

சரளா : தனியா எட்டரை மணி வரை வீட்டிலே கொட்டு கொட்டுன்னு உக்காந்திருங்கிறியா?

சாவித்ரி : அதானே உன் கடமை?

சரளா : அதெப்படி? அவர் மட்டும் ஊர் சுத்தலாம்? காதல் எல்லாம் என்ன ஆச்சு? நான் என் ஃப்ரண்ட்ஸ் வீட்டுக்குப் போகக் கூடாதா?

சாவித்ரி : சரளா, அது உன் கணவன் அனுமதிச்சாப் போகலாம். கணவனுடைய சம்மதம் இல்லாம நாம எந்தக் காரியமும் செய்ய முடியாது. செய்யக் கூடாது. இதான் ரூல்.

சரளா : யார் எழுதினா இந்த ரூல்?

சாவித்ரி : இதான் வழக்கம்.

சரளா : யாரு வழக்கம்? யாரு யாரு?

சாவித்ரி : இந்த மாதிரி கேள்வி கேட்டா, நீ உருப்படவே மாட்டே. அதான் உன் புருஷன் அடிக்கிறான்.

சரளா : ஏன் ஒரு மனைவி, ஒரு பெண் செஞ்சா மட்டும் அது தப்பு? அதே



அட்மிஷன் நோட்டீஸ்

ஸ்ரீ சங்கரா வித்யாஸ்ரம், உத்திரமேரூர்

(காஞ்சி ஹைரோடு, செங்கை - அண்ணா மாவட்டம்)

&

ஸ்ரீ சங்கரா வித்யாஸ்ரம், விழுப்புரம்

(நடராஜ் ஐ.டி.ஐ. வளாகம், சாலாமேடு)

★ இயற்கை கிராம சூழ்நிலையில் அமைந்துள்ள எளிய குருகுலப் பள்ளிகள். மொத்தத்தில் 600 பேர்கள் தங்கிப் படிக்கத் திட்டமிட்டு, நடைமுறை ஆண்டில் 300 பேர்களை மட்டும் (ஆண் / பெண்) சேர்க்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

★ இப்பள்ளிகள் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளை பிரஸிடெண்ட் டிரஸ்டியாகப் பெற்று, அவரது நேரடி மேற்பார்வையில் நடைபெறுகின்றன.

★ பாடத் திட்டங்களுடன், கம்ப்யூட்டர் சயின்ஸ், பரத நாட்டியம், யோகா, கராத்தே, குத்துச்சண்டை, இசைக் கருவிகள் இசைத்தல், சங்கீதம், புகைப்படக்கலை முதலியவைகளையும் கட்டாயப் பாடமாக போதிக்கப் படுகின்றன.

★ பாடமொழி ஆங்கிலத்தைத் தவிர பிரெஞ்சு, ஹிந்தி, சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளையும் போதிக்கின்றன.

★ கே.ஜி. முதல் 10-ஆம் வகுப்பு வரையில் எல்லோருக்கும் ஆண்டுக் கட்டணம் ரூ. 7,000/-க்கு மேல் வசூலிக்கப்படுவதில்லை.

★ பள்ளிகள் சிறுவர், சிறுமிகளின் உள்ளம், உடல், கலாச்சாரம், பண்புகள் வளர்ச்சிகளை நோக்கங்களாகக் கொண்டு, அவர்களை எதிர்காலத்தில் சிறந்த மாணவர்களாக உருவாக்குகிறோம்.

விவரங்கள் அடங்கிய பிராஸ்பெக்ட்ஸ் வேண்டுவோர் ரூ. 25/- மணியார்டர் மூலமோ, பாங்கு டிராப்ட் மூலமோ, மேற்கண்ட வித்யாஸ்ரமங்களின் முதல்வர்களுக்கோ, அல்லது செகரெட்டரி, ஜெய ஜெய சங்கரா எஜூகேஷனல் டிரஸ்டு, உஷா மெட்ரிகுலேஷன் பள்ளி அலுவலகம், 39 மேலண்டை இராஜ வீதி, காஞ்சீபுரம் - என்ற விலாசத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

டி.எம். நடராசன்,
நிர்வாக டிரஸ்டி.

காஞ்சி காமகோடி பீடாதிபதி
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்,
பிரஸிடெண்டு டிரஸ்டி.

- ADSTART.

ஆண் செய்தா தப்பில்லை. அவர் லேட்டா வரலாம், நான் லேட்டா வரக் கூடாது. அவர் சினிமா போகலாம், நான் சினிமா போகக் கூடாது. அவர் சிகரெட் பிடிக்கலாம், நான் பிடிக்கக் கூடாது. அவர் பெண்களோட பேசலாம், நான் ஆண்களோட பேசக் கூடாது. ஏன்க்கா ஏன்?

சாவித்ரி : **We are biologically different.**

சரளா : ஏன், எல்லாப் பழமொழியும் நமக்கு எதிராகவே இருக்கு? பொம்பளை சிரிச்சாப் போச்சு, ஆடத் தெரியாத தேவடியாள், வரவர மாமியார் கழுதை, பெண் புத்தி பின் புத்தி...

சாவித்ரி : அதே சமயம் நல்ல பெண்களைப் பற்றியும் கருத்துக்கள் இருக்கே?

சரளா : தெய்வம் தொழாள் **and all that nonsense!** என் கொழுனனைத் தொழுதா சிக்கல்தான் ரொம்பும். இந்தாளை எப்படி நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்? முட்டாள். முட்டாள். சந்தேகப்பிசாசு!

சாவித்ரி : அவரைக் கேட்டால் என்ன சொல்வார் தெரியுமா? உங்க தங்கை நடந்துக்கிறதை விசாரியுங்க. அன்னிக்கு எங்கேயோ ஓட்டல்ல கெட்டு கெத ராம் எட்டு ஆம்பிளைங்ககூட!

சரளா : அதை உன்ட்ட சொல்லியாச்சா?

சாவித்ரி : அதும் என் வீட்டுக்காரர்ட்ட. அவர் என்னைப் பார்த்து உன் தங்கை நடந்துக்கிற விதம் ஊரே சிரிக்கிறதுன்னு உபதேசம்!

சரளா : அன்னிக்கு என்ன ஆச்சுன்னா, ரொம்பச் சின்ன விஷயம்க்கா. நம்ப சேகர் இல்லை?

சாவித்ரி : தம்பி மாதிரி!

சரளா : (முறைத்துப் பார்த்து): கேலி பண்ற, பரவாயில்லை. அவன் வந்து ஆபீஸ்ல பார்ட்டின்னு...

சாவித்ரி : சரளா, நீ பண்ற அத்தனை காரியத்துக்கும் உன் கோணத்தில மிக எளிமையா, தெளிவா, பாவத்தீட்டே இல்லாத ஒரு காரணம் இருந்தே தீரும். அது மத்தவங்களுக்குப் பத்தலை. ஏன், உன் வாழ்க்கையை இப்படிச் சிக்கலாக்கிக்கறே? டைவர்ஸ் கிய்வர்ஸ்னு பேசறதெல்லாம் நல்லா இருக்குங்கிறியா? தனியா உன்னால இருக்க முடியுமா? நம் குடும்பம் எப்படிப்பட்ட குடும்பம்?

சரளா : ஆரம்பிச்சுட்டியா? ஞான பூமி.. கோல் கும்பாஸ்... கையைச் சங்கராச்சாரியார் மாதிரி வெச்சுக்கவேன்!

சாவித்ரி : சரளா, இது ரொம்ப சிம்பிள். உன் புருஷனுக்கு உன் மேல நம்பிக்கை இல்லை. என் புருஷனுக்கு என் மேல நம்பிக்கை இருக்கு. அவ்வளவு தான்.

சரளா : நம்பிக்கை இருக்குன்னா எதனால தெரியுமா? நீ கட்டின பசுவாட்டம் வீட்டை விட்டு நகர்றதில்லை. காலை சுப்ரபாதம் போடற. சாணி தெளிக்கறே. கோலம் போடறே. பசங்களுக்கு மூத்திரத் துணி தோச்சு, டிரஸ் பண்ணி, அனுப்பறே. பட்டன் தெக்கறே. நூல் கோக்கறே, தலைகாணிக்கு எம்ப்ராய்டரி போடறே. டீவியில அசட்டு ப்ரோகராம் பார்த்துட்டு, சமையல் குறிப்புல போக்கத்தவங்க கேக்கு பண்றது (பெண்கள் பத்திரிகையை எடுத்துப் புரட்டி) மோர்க்குழம்பு செய்யும் போது கடுகு தாளித்துக் கொட்டுகையில் கொஞ்சம் ஓமத்தையும் சேர்த்தால் உடம்புக்கு நல்லது. எல்லாத்தையும் ட்ரை பண்ணிட்டு, புருஷன் விருப்பத்துக்கு அடுக்களை, படுக்கைன்னு மாறி மாறிச்



''இனிமே நான் அஞ்சு வருஷம் கழிச்சுத்தான் தொகுதிக்கு வருவேன்'னு போன தேர்தலப்ப கேலி பேசினீங்களே, பார்த்தீங்களா, ஒன்னரை வருஷத்துக் கெல்லாம் வந்துட்டேன்!''



சம்மதிச்சு, அணு அணுவாச் செத்துக்கிட்டு இருக்கே அக்கா. உன்னைப் பார்த்தா என்னைவிட ரெண்டு வயசு நான் பெரியவள்னு யாராவது சொல்லுவாங்களா? ஒரு தலைமுறையினுடைய அலுப்பு அத்தனையும் உன் உடம்பில, தோற்றத்தில தெரியுது அக்கா. இன்னம் கொஞ்ச நாள் போனா கண்ணாடி போட்டுப்பே. யுட்டிரஸ் ரிமுவ் பண்ணிடுவாங்க. முந்திரிப்பருப்பு, பொட்டுக்கடலைன்னு அறையிலேயே கொறிச்சுக்கிட்டு, இடுப்பு பெரிசாகி, கிட்டத்தட்ட ஒரு **battleship** சைஸ்க்கு வந்துருவே. இந்த ரூமை விட்டு எத்தனை முறை வெளியே வந்திருக்கே அக்கா நீ? இந்தப் பைத்தியக்கார விவித பாரதியைத் தவிர, ஏதாவது கேட்டிருக்கியா? உன் கணவர், உன் பிள்ளைகள் இவர்களுடைய பெயரைத் தவிர, வேற ஏதாவது பேர் ஞாபகமிருக்கா? என்பேர் என்ன? சொல்லு! சொல்லு!

சாவித்ரி : சரளா?

சரளா : ஏன் பயந்து பயந்து சாகறே? ஒரு நான்தான் உன் புருஷனுக்கு எதிரா ஒரு வார்த்தை சொல்லிப்பாரேன். நான் என் தங்கையைக் கொஞ்ச நாள் என் கூட வெச்சுக்கப்போறேன்... அவளுக்கு அடைக்கலம் தர எனக்கு உரிமை இருக்குன்னு சொல்லிப்பாரேன். என்ன கடிச்சா சாப்பிடுவார்?

சாவித்ரி : அவருக்கு உன்னைக் கண்டாப் பிடிக்கலை. அதான் ப்ராப்ளம்.

சரளா : அவருக்கு என்னைக் கண்டாப் பிடிக்கிறது. அதான் ப்ராப்ளம்.

சாவித்ரி : என்னது?

சரளா : சொல்ல வேண்டாம்னு பார்க்கறேன்....

சாவித்ரி : சொல்லித்தொலை! இல்லை, வேண்டாம். பொய் சொல்வே நீ. ரொம்பப் பொய் சொல்வே. உன் பொய்யைக் கேட்டுக்கேட்டு, நான் என்னைத் துன்புறுத்திக்க விருப்பலை.

சரளா : இந்த முறை பொய்யே கிடையாது அக்கா. அத்தான் நல்லவர்னு நினைச்சுக்கிட்டு இருக்கே. ஒரு முறை என்ன ஆச்சு தெரியுமா? போன தடவை பொங்கலுக்குச் சண்டை போட்டுட்டு வந்திருந்தேன்



''உங்க கதை ரொம்ப சஸ்பென்ஸ் ஸார்!''

''அப்படியா! ஹி... ஹி...''

''ஆமாம் ஸார், கடைசி வரை யார் எழுதிய எந்தக் கதையைப் பார்த்துக் காப்பியடிச்சதுன்னு கண்டுபிடிக்க முடியலே!''

— எஸ். முகம்மது யூசுப்.

பாரு? அப்ப.....

சாவித்ரி : எனக்கு இதெல்லாம் கேக்க வேண்டாம் சரளா... நிறுத்து.

சரளா : உனக்கும் உண்மை தெரியட்டும். வாசுகி அம்மையார் போல இருக்கியே, கேளு. அத்தான் என்ன பண்ணார்னா, நீ வந்து காஞ்சனாவையும் பாபுவையும் ஸ்கூல்ல விடப் போயிருந்தியா? போபோன்னு அவசரப்படுத்தினாரே... நான் அப்ப கிச்சன்ல இருந்தேனா. அங்கேருந்து கூப்பிடறார். போய்ப் பார்த்தா, கண்ல என்னவோ தூசி மாதிரி இருக்கு, ஊதுன்னாரு. இந்தக் 'கண்ல தூசி ஊது'ங்கற பிஸினஸ் சங்க காலத்திலிருந்தே டேஞ்சர். இருந்தாலும் அத்தான்னு ஊதினேன். அப்படியே கட்டிப்பிடிச்சு அவசர அவசரமாக முதுகுப் பித்தான், ஊக்கு எல்லாத்தையும் கழட்டறாரு. 'அத்தான் நீங்க செய்யறது நியாயமா? நான் உங்க தங்கச்சி மாதிரி இல்லையா? என் சொந்த அக்காவுக்கு நான் துரோகம் பண்ணுவனா'ன்னு தமிழ் சினிமா மாதிரி கேட்டனா... அவர் 'மச்சினி சகவாசம்தான் உத்தமம்'ன்னு என்னவோ பெனாத்தறாரு... விட்டேன் ஒண்ணு! பொறி கலங்கிப் போய்ட்டார். நல்லா வெச்சுக் கேட்டுட்டேன் 'ஏன்யா நீயும் கல்யாணம் ஆனவன், நானும் கல்யாணம் ஆனவ. எதுக்காக இந்தச் சபலம்? அக்கா பத்தலையா உனக்கு? ரெண்டு பேரும் பொம்பளைதான்யா'ன்னு புடிச்சு விளாசிட்டேன்!

சாவித்ரி : பொய். அத்தனையும் பொய். நீ என் வீட்டுக்கு வந்து என் புருஷன் மேல அவதூறு சொல்றே. நான் பைத்தியம் மாதிரி கேட்டுக்கிட்டு இருக்கேன். 'ஓடிப் போடி தொடைகாலி'ன்னு உன்னை விரட்டாத நான்தான் பைத்தியம்!

சரளா : ஒரே ஒரு காரணத்துக்குத்தான் இதைச் சொல்றேன் அக்கா. அத்தானு ஒண்ணும் ராமர் இல்லை. எல்லா ஆம்பிளைங்களும் இப்படித்தான்! சந்தர்ப்பம் இல்லாததாலத்தான் சத்புருஷர்கள்.

சாவித்ரி : சரிம்மா....

சரளா : அதனால நீ ஒண்ணும் உன் புருஷனைத் தாங்க வேண்டாம்னு சொல்றேன். வா அக்கா முதல்ல ப்யூட்டி பார்லர் போவோம். சைனாக்காரி பூனைமயிரையெல்லாம் வெட்டிவிடுவா. புருவத்தைத் திருத்திக்கலாம். மேனிக்யூர் பண்ணிக்கலாம்.

சாவித்ரி : எதுக்கு?

சரளா : நம்ம புருஷன் சம்பாதிக்கிறதைச் செலவழிக்க வேண்டாமா? மத்த பேர் கவனிக்கட்டும். உன் புருஷன் கொஞ்சம் பொறாமைப் படட்டும்.

சாவித்ரி : அதெல்லாம் தேவையில்லை.

சரளா : அதெல்லாம் செய்துக்கிட்டாத்தான், புருஷன் கிட்டச் சேர்ப்பான்.

சாவித்ரி : சரளா நீ எப்ப நக்கலாப் பேசறே, எப்ப சீரியஸா பேசறேன்னு தெரியறதில்லை. எப்ப உண்மை? எப்ப பொய்?

சரளா : நான் எப்பவுமே சீரியஸ்தான். எப்பவுமே உண்மைதான். அக்கா அனாவசியமா நம்ம வாழ்க்கையைச் சிக்கல் பண்ணிக்கிட்டோம். எதுக்காகக் கல்யாணம் பண்ணிக்கிட்டோமோ? உனக்கு எத்தனை பிரசவம்! எனக்கு எத்தனை அபார்ஷன்! எல்லாம் நாமதான்!

சாவித்ரி : என்ன பண்றது?

சரளா : யார் சொன்னது, யார் வெச்ச சட்டம்?

சாவித்ரி : சரளா பாரு. நீ சொன்னதில் ஒரு விஷயம் உண்மை. அனாவசியமா

மழலைப்பருவத்தின் மகிழ்ச்சிகள் மீண்டும் மலரட்டும்!



நாம் குழந்தைகளாய் இருந்த
பொழுதுகள் உங்களுக்கு
நினைவிருக்கிறதா?
பண்டிகைகளின் பொருள்
தெரியாமலேயே அவற்றைப்
பரவசமாய்க் கொண்டாடுவோமே
அன்று ...

இன்று, மீண்டும் சித்திரை
பிறக்கிறது. ஒரு பிள்ளையைப்
போலவே இந்த உலகை புதிதாய்ப்
பார்க்கப் போகிறோம்.
கதிரொளியின் கதகதப்பை
உணர்ந்து, முகம்தொடும் காற்றில்
மகிழ்ந்து, மலர்களின் நிறங்களையும்,
எழில்மிக்கவை எல்லாவற்றையும்
எண்ணத்தில் நிறைக்கப் போகிறோம்.
இந்நாள் வாழ்வின் வசந்தங்களுக்கு
வணக்கம் சொல்லும் நாள்.

நட்பின் உதவிக்கும், அன்பின்
வலிமைக்கும், பரிவின்
பெருமைக்கும் இது நன்றி செலுத்தும்
நாள். இன்று சித்திரைத் திருநாள்.
மழலைப் பருவத்தின் மகிழ்ச்சிகளை
மீண்டும் வாழ்வுக்குக் கொண்டு
வர, ... இதுவே நேரம்.

தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்கள்

The South Indian Bank Ltd
Regd. Office : Trichur, Kerala

SASI ☐ SIB ☐ 1066 ☐ 91



''வரவர ஞாபகமறதி அதிகமாயிடுச்சு, டாக்டர்!''

''எதை வெச்சுச் சொல்றே?''

''சில சமயம், அடுத்தவங்க பாக்கெட்னு நினைச்சு என் பாக்கெட்டையே பிளேடால 'கட்' பண்ணிடறேன்!''

— சீர்காழி. வி. ரேவதி.

நம்ம வாழ்க்கையைச் சிக்கலாக்கிக்கிட்டு இருக்கோம். சின்ன வயசில எத்தனை சந்தோஷமா இருந்தோம்! அப்பாங்கறவர் கோபமே இல்லாத அப்பா. மகாலட்சுமி மாதிரி அம்மா. கோயமுத்தூர் வீட்டுத் தாழ்வாரம், மழை பெய்தாச் சரம் சரமாக் கொட்டி, லேசா வீட்டுக் குள்ள சாரல் அடிக்கும். பச்சை வாதாங்காயைக் கல்லில சிதைச்சு, உள்ளுக்குள்ள சிவப்பா இருக்கும். அதுக்குள்ள பருப்பு எவ்வளவு டேஸ்ட்! பாதி காஞ்ச வத்தல், எவ்வளவு டேஸ்ட். அப்புறம் படுக் கைக்குப் பக்கத்தில நியூஸ் பேப்பர் துண்டுகள், தையல் மிஷின் துண்டுகள் எல்லாத்தையும் ஒட்டி, துணிக்கடை வெச்சு விளையாடு வோம். மச்சர் அம்மா மச்சர் அம்மான்னு தாழ்வாரத்துக் கம்பத்தைப் பளார் பளார்னு குச்சியில் அடிப்போம்.

சரளா : (அவளும் பழைய நினைவுகளில் ஆழ்ந்து) அந்த மூர்த்திங்கற பையன் ஆனந்தவிகடன், அமிர்தாஞ்சனம்னு அடிக்கடி ஏதாவது சாக்குச் சொல்லிட்டு உன்னைப் பார்க்க வருவான். ஜன்னல் வழியா க்ரேயான் பென்சில்ல பெரிசு பெரிசா எழுத்தில காதல் கடிதம் எழுதிக் கையெழுத்துப் போடமாட்டான். ஒரே பொயட்ரி. என்கிட்டக் கொடுத்து, உன்கிட்ட கொடுக்கச் சொன்னான். அதை ரெண்டு பேரும் அம்மா கிட்டக் கொடுத்துட்டு. அம்மா அவங்க வீட்டு வாசல்ல போய்ப் பிலுபிலுன்னு தாய்ச்சிங்கம் மாதிரி பிடிச்சுட்டு.....

சாவித்ரி : அந்தப் பையன் அப்புறம் ஒரு முறை ஆர்.எஸ்.புரத்தில சைக்கிள்ள இருந்து இறங்கி, வருத்தமாப் பேசினான். இப்ப எங்க இருக்கான்னு தெரியலை.

சரளா : சினிமாவில பாட்டு எழுதிக்கிட்டு இருக்கலாம்.

சாவித்ரி : சாரு மாமி முகத்தில மீசை!

சரளா : பட்டாபின்னு ஒருத்தர் தொட்டாலே விட்டம் வரை எம்பிக்குதிப் பார் ஞாபகம் இருக்கோ?

சாவித்ரி : அவர் பனியன்க்குள்ள ரோட்டுத் தாரைப் பந்து மாதிரி உருட்டி, உள்ளுக்குள்ள போட்டு (சிரிக்கிறார்கள்).

சரளா : பாணதீர்த்தத்தில பிக்னிக் போயிருந்தோமே.....

சாவித்ரி : குதிரை வண்டியில் பராசக்தி போயிருந்தமே....

சரளா : கை விரல்லாம் மருதாணித் தொப்பி போட்டுக்கிட்டு, காலை அலம் பறப்ப ரத்தம் மாதிரி, 'எனக்குப் பத்திச்சா, உனக்குப் பத்திச்சான்'னு, வாக்குவா தம்.

சாவித்ரி : கல்யாணத்தில ஆம்பிளைப் பசங்களை உபத்திரவமில்லாம கேலி பண்ணுவமே?

சரளா : அப்பா மோட்டார் சைக்கிள்ல விழுந்துட்டு.......

சாவித்ரி : ரெண்டு பேரும் பெரிசா அழுதமே!

சரளா : அப்பான்னா அப்பாதான்!

சாவித்ரி : அவர் சட்டையில லேசா மொரமொரன்னு ஒரு வாசனை.....

சரளா : அவர் குரல்ல ஒரு அதட்டல் இருக்காது.....

சாவித்ரி : அவர் தலைமேல எல்லாம் ஏறி விளையாடுவோம்!

சரளா : இங்கைக் கொட்டுவோம்!

சாவித்ரி : அப்பாவும் அம்மாவும் நமக்கு முன்னால எப்பவாவது சண்டை போட்டுப் பாத்திருக்கியோ நீ?

சரளா : சீன்னு பேசியிருக்காரோ?

சாவித்ரி : இல்லவே இல்லை. அந்த வீட்டில சிரிப்புத்தான் ஞாபகம் எனக்கு.

சரளா : சிரிப்பும் ஆரவாரமும் அப்பாவும் அம்மாவும்.... (பெரு மூச்சுடன்) ரெண்டு பேரும் எங்கே இப்ப....
(கொஞ்ச நேரம் மௌனம்).

சாவித்ரி : இந்த அம்மாவாவது இருந்திருக்கலாம்.....

சரளா : கூடமாட அழறதுக்கு! நானே அவளைச் சாவடிச்சேன். லவ்வு, ஜாதி விட்டு ஜாதின்னு எத்தனை அமர்க்களம்? எத்தனை துக்கம் கொடுத்தேன் அவளுக்கு! இப்ப என்ன சாதிச்சேன்?

சாவித்ரி : படிச்சுப் படிச்சு ரெண்டு பேரும் சொன்னாங்க, வேண்டாம் வேண்டாம்னு. அப்பா கூடக் கெஞ்சினாங்க உன்னை!

சரளா : பைத்தியம்! அக்கா, வாழ்நாள் பூரா தனியா இருக்க முடியாதா?

சாவித்ரி : முடியாது. அது வேறு கொடுமை சரளா. எங்கே காட்டு? வலிக்கிறதா? புருஷன் அடிச்சானா? (சரளா தன் கன்னத்தைக் காட்ட, தடவிக் கொடுக்கிறாள்)

சரளா : சில வேளையில தலைமயிரைக் கொத்தாப் பிடிச்சு, பின்பக்கம் தலையைச் சாய்ச்சு, முகத்தில குத்துவார். மூக்கில ரத்தம் வரும். உன் புருஷன் அடிக்கமாட்டார்தானே?

சாவித்ரி : எப்பவாவது புடிச்சுத் தள்ளுவார். அவ்வளவுதான். (யோசித்து) ஒரு தடவை ரெண்டு தடவை அடிச்சிருக்கார். கார்ல போறப்ப, ட்ராஃபிக் லைட்ல நின்னப்ப, மோட்டார் சைக்கிள்ள ஒருத்தன் என்னைப் பார்த்துச் சிரிச்சான்னு ஒருமுறை அடிச்சிருக்கார். இப்ப அடிக்கிறது இல்லை. கோவம் வந்தா பாத்ரூம்ல போய்க் கதவைச் சாத்திக்கிடுவார்.

சரளா : நீ உனக்குப் பொயட்ரி கடுதாசி எழுதினானே மூர்த்தி, அவனைக் கல்யாணம் செய்துக்கிட்டு இருக்கனும் அக்கா!

சாவித்ரி : நீ காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டே. உன் விருப்பப்படிதான செய்துகிட்டே. பிடிவாதமா! அப்பா எத்தனை வருத்தப்பட்டார் தெரியுமா! அப்பா, அம்மா பார்த்தவங்களைக் கல்யாணம் செய்துக்கிட்டு இருக்கலாமில்லை?

சரளா : ப்ச்! பேசாம அம்மா பார்த்தவனையே கல்யாணம் பண்ணிக்கிட்டு



இருந்திருக்கலாம். உன்னைப் போல. குடியும் குடித்தனமும் மாசா மாசம் சம்பளத்தை விசுவாசமாக் கொண்டு வந்து கொடுத்துட்டுக் குழந்தைகளுக்கு ஃபாரெக்ஸ் கரைச்சு, இன்ஷுயூரன்ஸ் எல்லாம் புதுப்பிச்சு, ரேஷன் கார்ட்டுக்கு பாலித்தீன் அட்டை போட்டு, காஸ்க்கு போன் பண்ணி.... ஆனா இதுதான் சந்தோஷமான்னு சந்தேகமா இருக்கு.....

சாவித்ரி : சரளா, நாம ரெண்டு பேருமே மாட்டிக்கிட்டவங்கதான். நீ ஒரு வகையில, நான் ஒரு வகையில. நீயாவது எப்பவாவது சந்தோஷம்ங் கறதைப் பார்த்திருக்கே. நான் பார்த்திருக்கிறது சம்பிரதாயமான சந்தோஷம். உன்னை மாதிரி **Wild** இல்லை. புஸ்தகத்தில போட்டிருக்கிற சந்தோஷம். நீயாவது அடிபட்டாலும் ஐஸ்க்ரீம் தின்னிருக்கே. ஊர் ஊரா ஆரம்ப நாட்களில் சுத்திப்பார்த்திருக்கே. ஹனிமூன் போயிருக்கே. கட்டுக் கட்டாக் கடிதம் எழுதியிருக்கே. திருட்டுத் தனமாச் சந்திச்சு, நரம்புதுடிக்கப் பதில் எழுதியிருக்கே. போட்டோ எடுத்துக்கிட்டு, பஞ்சாபி டிரஸ் போட்டுக்கிட்டு, போட்லயும் ப்ளேன்லயும் போய் இருக்கே. உன்போர்ல சந்தேகம்னா, உன்னை விரும்பறதாலதானே சந்தேகம்? என் புருஷனுக்கு அது எதும் இல்லை. வருவார் 'சாவித்ரி காப்பி'ம்பார். வாட்சைக் கழட்டி வெப்பார், குளிப்பார், சட்டையை மாட்டிட்டு டீ.வி. பார்ப்பார். குழந்தைங்களுக்குப் பாடம். எட்டரை மணிக்கே கொட்டாவி. சரியா ஒம்பதரைக்கு வீடு நிசப்தம் ஆயிடணும். இவர்கிட்ட எப்படிப் பிள்ளை பெத்துக்கிட்டேன்னே ஞாபகம் இல்லை!

சரளா : ஆரம்பத்திலிருந்தே இப்படியா?

சாவித்ரி : ஆமாம்.

சரளா : பாபுவும் காஞ்சனாவும் எப்படிப் பிறந்தாங்க. இம்மாக்குலேட் கன்ஸெப்ஷனா?

சாவித்ரி : ரெண்டு பேரும் மாட்டிக்கிட்டு இருக்கோம்.

சரளா : இதிலிருந்து எப்படித் தப்பிக்கிறது?

சாவித்ரி : உன்னால வேணா முடியும். என்னால முடியாது. பாசம், குடும்பம்னு பேர் சொல்லிக்கிட்டு, பந்தங்கள்.... அதையெல்லாம் இரவோடு உருவறது சாத்தியமே இல்லை. என் மனசு தயாரில்லை.

சரளா : என்னால எப்படி முடியும்ங்கற?

சாவித்ரி : உன் புருஷன் அடிக்கறான்னா, அவனை விட்டு பிரிஞ்சுர முடியாதா? உன்னால சொந்தமாச் சம்பாதிக்க முடியாதா?

சரளா : என்னாலா?

சாவித்ரி : ரிஸப்ஷனிஸ்ட் க்ளார்க் ஆயிரம் ரூபா சம்பாதிக்க முடியாது?

சரளா : ம்ஹூம். அதெல்லாம் ஒரு எழவும் தெரியாது. சிரிக்கத் தெரியும். சிரிப்போட நிக்காது. அதான் ப்ராப்ளம். டைப்பு, வோர்ட் ப்ராஸஸர் எதுவும் தெரியாது. நான் ஒரு வெறும் பெண், சோம்பேறி. அக்கா. நான் சொந்தமாச் சம்பாதிக்க, பெண்ங்கற ஒரே மார்க்கம்தான். அதில எனக்கு இஷ்டமில்லை. ஆம்பிளைங்க கூடச் சரளமாப் பேசு வேனே தவிர. வேற எதுவும் கிடையாது. கற்புன்னு இல்ல. வெறுப்பு. இதுக்குத்தானா இத்தனை பீடிகை. முகஸ்துதின்னு ஒரு அதீதமான வெறுப்பு. 'அரை நிமிஷ வீழ்ச்சி'க்கு ஆயிரம் கவிதையான்னு!

சாவித்ரி : அதனால...!



"பெண்ணோட அப்பா மிகவும் ஜாக்கிரதை உணர்வு உள்ளவர் போலிருக்கே?"

"எப்படிச் சொல்றீங்க?"

"பெண்ணுக்குக் கொடுக்கிற சீர்வரிசையிலே புதுசா வந்திருக்கிற, கையடக்கமான நெருப்பணைக்கும் கருவியையும் வைச்சிருக்காரே!"


— எஸ். பாபு.

சிற்பத்திலும் கார்ட்டூன்!

சித்திரங்களில் மட்டும் தானா, சிற்பங்களிலும் கார்ட்டூன்கள் உருவாக்கலாம் என்பதை நிரூபிக்கிறது இந்தப் படம். இந்தச் சிற்பம் நியூயார்க்கில், ஐ.நா. சபைத் தலைமையகத்தின் வாசலில் நிறுவப்பட்டுள்ளது. எல்லா நாடுகளும் போர்த் தளவாடங்களைத் துறந்து அமைதிக்கு அடி கோல வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

அணுசரி, வளைகுடாப் போரின் நினைவாக இந்தச் சிற்பி என்ன கார்ட்டூன் சிற்பத்தை ஐ. நா. சபை வாசலில் உருவாக்கப் போகிறாரோ!

நன்றி: பசிஃபிக் ஃபிரெண்ட்.



சரளா : உனக்கும் விடுதலை கிடையாது. எனக்கும் கிடையாது. என்னிக்கு நம்மோட அறியாமை Innocence போச்சோ, அன்னிக்கே நம்ம சுதந்திரமும் போச்சு. உனக்கு எப்பப் போச்சு?

சாவித்ரி : கோயில்ல. உனக்கு?

சரளா : எனக்கும் கோயில்லதான். பாரதி விழாவில நாம ரெண்டு பேரும் பாடினமே... அந்தப்பாட்டு முடிஞ்சு வீட்டுக்குத் தனியா முரளி கூட வர்றேன். அப்பத்தான் ஆயிரங்கால் மண்டபத்தில். குறுக்க போறப்ப இருட்டில! சரி, நான் வரேன்க்கா. அனாவசியத்துக்கு உன் வாழ்க்கையில சிக்கல விளைவிக்க விரும்பல. ஒரே ஒரு தடவை நாம ரெண்டு பேரும் பாடினமே பாரதி விழாவில் ப்ரைஸ் கூட வாங்கினமே அந்தப் பாட்டை பாடுவம்க்கா.

இருவரும் : (இயல்பாகப்பாடுகிறார்கள்):

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

மாட்டையடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார், அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி

(மௌனம்)

சரளா : போய்ட்டு வரேன்க்கா....

சாவித்ரி : (அலமாரியிலிருந்து எடுத்து) இந்தா டைகர் பாம்! மருந்து தடவிக்க. ரொம்ப அடிச்சானாம்மா! வலிக்குதாம்மா?

சரளா : வேண்டாம்க்கா. வீட்டில இருக்குது. சமாதானம் ஆனப்புறம் அவரே தடவி விடுவார். வரேன்.

(அவள் செல்ல)

(கொஞ்சநேரம் மௌனம், கதவு திறக்கும் சப்தம்)

சாவித்ரியின் கணவன் குரல்: சாவித்ரி, காப்பி!

(திரை)



"சேலை கட்டினவங்க மேடையில் பேசினாத்தான், நிறையக் கூட்டம் வருதுன்னு தலைவரிடம் சொன்னது தப்பாப் போச்சு!"

"என்னாச்சு?"

"அடுத்த மீட்டிங் வர்றப்போ தலைவர் சேலை கட்டிக்கிட்டு வந்து பேசப் போறதாச் சொல்றார்!"

— கோபிகா எஸ். முரளி.

"என்னது, சரித்திர நாவலோட வாள், அம்பு எல்லாம் வாங்கிட்டு வர்றே?"

"இந்தச் சரித்திர நாவல் வாங்கினா, அம்பு, வாள் இலவசமாக் கொடுக்கிறாங்க!"

— கவிட் ரவி.





மனைவி: எதுக்குப் போஸ்ட்மேனைத் திட்டறீங்க?"

எழுத்தாளர்: "'இதுவரைக்கும் நூறு கதைகள் திரும்பி வந்திடுச்சே, ஸ்வீட் இல்லையா'ன்னு கிண்டலாக் கேக்கறான்.

— டி. என். பாலகிருஷ்ணன்.



"தொகுதி முழுக்க ஒரு இடம் விடாம, வோட்டுக் கேட்டுப் போனீங்களே... நம்பிக்கை இருக்கா...?"

"இருக்குண்ணே... ஏகப்பட்ட புறம்போக்கு நிலங்கள் அனாதையாக் கிடக்குண்ணே...!"

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.


பீடுமிக்க
ஆடவரின்
பெருமைகளில்
ஒன்று
Colts
VESTS
& BRIEFS

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு இல்லாவிட்டால், உங்கள் குழந்தை எடை அதிகரிப்பதற்குத் தேவையான புரோட்டீனைப் பெறமுடியாது.

REGISTERED NO. M. 4392

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். அவர் இரண்டு உண்மைகளை உங்களுக்குத் தெரிவிப்பார். ஒன்று, குழந்தையின் தசை, திசு, ரத்தம் ஆகியவைற்றைப்பேணி வளர்த்திட புரோட்டீன் உதவுகிறது இரண்டு, சரியான புரோட்டீன்களைப் பெற, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு குழந்தைக்குத் தேவை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு நாளும்.

வழக்கமான உணவுகள் மூலமாக இதைச் சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

செரிலாக் காரணம், செரிலாக்கில் பால் மற்றும் கோதுமை உள்ளன. இவற்றில் புரோட்டீன் மிகுந்து இருக்கிறது. மேலும், செரிலாக்கில் கார்போஹைட்ரேட்கள், விட்டமின்கள், மினரல்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகள் சரியான விகிதத்தில் உள்ளன. நான்கு மாதம் முதல் குழந்தைக்கு வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போதிலிருந்து, கொடுக்கக்கூடியது, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள திட உணவு செரிலாக். இது மிகுந்த சுவை உள்ளதாக இருப்பதால், குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்.

ஆகவே! ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள செரிலாக்கின் அனைத்து அனுகூலங்களையும் உங்கள் குழந்தைக்கு அளியுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் விட்-ஆப்பிள், விட்-ஆரஞ்சு மற்றும் விட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலத்தையும் அளியுங்கள்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம்: செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் 21, புது தில்லி-110 028

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





Mudra D:NES 0020 TAM

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.